உ

கடவுள்துணை.

சித்தூர்ஜில்லா

அதாலத்துகோர்ட்டு தீர்ப்பு.

பண்டிதர் - மார்க்கசகாய ஆசாரியாருக்கும்,

பஞ்சாங்கம் - குண்டையருக்கும்,

பஞ்சாயத்தார் முன்னிலையில்

விஸ்வப்பிராமணீகத்தைக்குறித்து நடந்த சம்வாதமும்,

பஞ்சாயத்தார் தீர்மானமும்,

பண்டிதர் - சோமசுந்தரப்பிள்ளைசம்பாஷணையும்,

மாஜிஸ்ட்ரேட்துரைகள் கொடுத்த டைரியும்,

சித்தூர்ஜில்லா அதாலத்துகோர்ட்டு

மகாகனம்பொருந்திய கவரன்மெண்டுஜட்ஜி

டேக்கர்துரை யவர்கள் கொடுத்த தீர்ப்பும்.

சென்னப்பட்டணம்

விஸ்வப்ரம்ம சபையாரால் பதிப்பித்த

பிரதிக்கிணங்க,

ஆ - எதிராஜ்முதலியாரவர்களால்

தமது

சென்னை-சூளை:

பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றன.

1902.

P. W. PRESS, 31, HIGH ROAD, CHULAI, MADRAS.

அட்டவணை.

1 அண்டபுவனம்
2 விராட்புருஷன்
3 பரப்ரம்மம்
4 பரமத்திற்கு
5 பிரம்மாண்டம்
6 சிருட்டி
7 திதி
8 சங்காரம்
9 திரோபவம்
10 அநுக்கிரகம்
11 மநுவாச்சாரி
12 மயாச்சாரி
13 துவஷ்டாச்சாரி
14 சிற்பியாச்சாரி
15 விஸ்வஜ்ஞஆச்சாரி
16 க்ஷத்திரியர்
17 வைசியர்
18 சூத்திரர்
19 பிரமசாரி
20 கிரகஸ்தன்
21 வானப்பிரஸ்தன்
22 சந்நியாசி
23 ஜீவசிருட்டி
24 விஸ்வப்ரம்மம்
25 வியாசன் உற்பத்தி
26 தேவர்களுற்பத்தி
27 திரிமூர்த்திநடபடிக்கை
28 தேவேந்திரன்நடபடிக்கை
29 ப்ரம்மாவின்நடபடிக்கை
30 சுப்பிரமணியர்உற்பத்தி
31 கிருஷ்ணன்நடபடிக்கை
32 விஷ்ணுஅவதாரம்
33 காந்தக்கற்கோட்டை
34 தரணிமஹாராஜன்
35 தேசாதிபெத்தண்ணராசு
36 காளிங்கராஜன்
37 தேசாதிபதிஜெயவீரராசு
38 வியாசன்மித்திரபேதம்
39 வியாசன்கரமற்றது
40 கலியுகஅதர்மம்
41 கிரேதாயுகதர்மம்
42 யுகதர்மவித்தியாசம்
43 பஞ்சமஜாதி
44 ரிஷிகளைஇகழ்ந்தது
45 ரிஷிகள்மகத்துவம்
46 பஞ்சாநநோற்பவாள்
47 பஞ்சமுகம்
48 மாலகுலம்
49 பிராம்ஹஞே
50 இராமாயணம்
51 மதுமாமிசபட்சணம்
52 குருபீடம்
53 இராஜராஜாக்கள்
54 சாப்பிடுகிறார்கள்
55 பஞ்சகிர்த்தியம்
56 மதுமாமிசபக்ஷணை
57 யாகாதிகிர்த்தியங்கள்
58 ப்ரம்மவம்மிசம்
59 பௌண்டரியாகம்
60 ப்ரம்மவம்மிசம்
61 பஞ்சாயத்தார்தீர்ப்பு
62 தூஷித்தது
63 சோமசுந்தரப்பிள்ளை
64 வேதாத்தியயனம்
65 அடிதடிசண்டை
66 மாஜிஸ்திரேட்துரைகள்
67 விண்ணப்பம்
68 வேதச்சுருதிப்பிரமாணம்
69 அபராதம்போட்டது
70 சித்தூர்ஜில்லாதீர்ப்பு

கடவுள் துணை.

சென்னப்பட்டணம் விஸ்வப்ரம்ம சபையின் கையொப்பக்காரர்கள்.

திரு-ந-மாசிலாமணிஆசாரியார்.
வே - சுந்தராசாரியார்.
வே - தியாகராஜஆசாரி.
க - லட்சுமணுச்சாரி.
வி - கிருஷ்ணுபத்தர்.
மெ - பரமாநந்தாசாரி.
மெ - முனிசாமிஆசாரி.
மெ - மன்னுதாசாரி.
வி - வெங்கிடசாமிஆசாரி.
ப - கந்தப்பாசாரி.
ப - ஆனந்தஆசாரி.
சே - குமாரராயவாசாரி.
பெ - ஆறுமுகவாசாரி.
ந - வேலாயுதாசாரி.
பு - ராசபத்தர்
ம - அருணுசலஆசாரி.
து - பாவாடைஆசாரி.
மை - கிருஷ்ணப்பாசாரி.
மொ - மன்னப்பாசாரி.
உ - பச்சையப்பாசாரி.
கொ - முத்தியாசாரி.
பே - கோவிந்தாசாரி.
ப - வீரபத்திரஆசாரி.
தி - ஆதிமூலஆசாரி.
வ - பொதுவலிங்கஆசாரி.
து - தாண்டவராயஆசாரி.
மை - அப்பாவாசாரி.
கூ - கொழந்தைவேலாசாரி.
கு - பூங்காவனஆசாரி.
க - நடேஸ்வரஆச்சாரி.
ம - சிவகுருநாதாச்சாரி.
கோ - நமசிவாயஆசாரி.
செ - ஆண்டியப்பாசாரி.
பி - கொழந்தைஆசாரி.
தி - முத்தியாசாரி.
பு - சுப்பாராயஆசாரி.
பெ - அய்யாசாமிஆசாரி.
து - சுப்பராயஆசாரி.
யெ - முருகப்பாசாரி.
செ - சிங்காரவேலாசாரி.
தா - பாம்பாச்சாரி.
கு - வயித்தியாசாரி.
சி - சுக்கிரமணிஆசாரி.
கொ - குமாரசாமிஆசாரி.
மொ - பழனிஆசாரி.
செ - ஏகாம்பரஆசாரி.
கோ - தெய்வசிகாமணிஆசாரி.
கொ - வேலாயுதஆசாரி.
பு - பொதுவாச்சாரி.
வ - குமாரசாமிஆசாரி
கொ - செங்கல்வராயாசாரி.
இ - சுப்பராயஆசாரி
கோ - மொட்டைஆசாரி.
ப - சுப்பராயஆசாரி.
வி - செங்கல்வராயஆசாரி.
கோ - வையாபுரிஆசாரி.
சொ - ருத்திரப்பாசாரி.
சா - ருத்திரப்பாசாரி.

கு - சுப்பராயஆசாரி.
கு - சபாபதிஆசாரி.
கு - முனியப்பாசாரி.
ம - துரைவேலாசாரி.
ம - லிங்கப்பாசாரி.
ம - சிதம்பரஆசாரி.
கோ - வேலாயுதஆசாரி.
பு - வீராசாமிஆசாரி.
கோ-வெங்கிடாசலஆசாரி.
மா - கேணிஆசாரி.
மா - முருகப்பாசாரி.
கோ - ரத்திஞசாரி.
ம - பங்காராசாரி.
கோ - முனியப்பாசாரி.
கோ - ஆனைகுட்டிஆசாரி.
கோ - சிற்றம்பலஆசாரி.
கோ - நாராயணஆசாரி.
கோ - வெங்கிடாசலஆசாரி.
கோ - கந்தப்பாச்சாரி.
கோ - சீனிவாசஆசாரி.
கோ - அருஞசலஆசாரி.
கொ - சுப்பிரமணியஆசாரி.
கோ - அப்பாவாசாரி.
வே - பொன்னப்பாசாரி.
கோ - வீரபத்திரஆசாரி.
பி - முனியப்பஆசாரி.
க - வீரபத்திரஆசாரி.
சி - அண்ணமலைஆசாரி.
வீ - வீரபத்திரஆசாரி.
வீ - அப்பாசாமிஆசாரி
பு - சுப்பராயஆசாரி.
கா - துலுக்காஞசாரி.
ஓ - சபாபதிஆசாரி.
தி - வெடாரணிஆசாரி.
ந - ராமாசாரி.
க - சுப்பிரமணியஆசாரி.

அ - முனியப்பஆசாரி.
ஆ - எல்லப்பாசாரி.
ந - முத்துசாமிஆசாரி.
ம - பாலாசாரி.
ஊ - கந்தசாமிஆசாரி.
க - சந்திரசேகரஆசாரி.
தி - துளசிஆசாரி.
மி - சபாபதிஆசாரி.
ம - செங்கல்வராயஆசாரி.
ப - சண்முகாசாரி.
பு - இரங்கசாமிஆசாரி.
ம - அங்கப்பாசாரி.
கோ - சபாபதிஆசாரி.
தி - நாகப்பாசாரி.
செ - முத்தாசாரி.
கு - முனிசாமிஆசாரி.
சே - தங்கவேலாசாரி.
த - தாண்டவாசாரி.
ப - அரசப்பாசாரி.
பூ - பார்த்தசாரதிஆசாரி.
மை - ராமலிங்கஆசாரி.
ம - குமரப்பஆசாரி.
செ - ராமாசாரி.
செ - சபாபதிஆசாரி.
தி - அருணகிரிஆசாரி.
மை - முனிசாமிஆசாரி.
சி - ஏழுமலைஆசாரி.
தே - அருணகிரிஆசாரி.
நா - எல்லப்பஆசாரி
கா - பெரியதம்பிஆசாரி.
ப - சபாபதிஆசாரி.
க - ஏகாம்பரஆசாரி.
கிரி - வீரபத்திரஆசாரி.
கா - முத்துக்குமாரஆசாரி.
ப - குருபாதஆசாரி.
யு - அப்புபத்தர்.

பு - ஆறுமுகவாசாரி.
சு - சிதம்பரஆசாரி.
மை - நாராயணஆசாரி.
அ - சின்னமுத்துஆசாரி
தா - நாராயணஆசாரி.
ம - ராமாசாரி.
ஒ - வீராசாமி.
ப - மேக்காவாசாரி.
ப - வீராசாமிஆசாரி.
பு - குள்ளப்பஆசாரி.
பு - சோமாசாரி.
ஆ - செல்லப்பாசாரி.
சி - சண்முகாசாரி.
மு - ஆறுமுகஆசாரி.
அ - தாண்டவராயஆசாரி.
உ - சுப்பராயாசாரி.
மா - சொக்கலிங்காசாரி.
இ - கேணிஆசாரி.
கோ - அண்ணமலைஆசாரி.
நா - சின்னதம்பிஆசாரி.
வ - தாண்டவராயஆசாரி.
கே - அண்ணமலைஆசாரி.
நே - மேக்காசாரி.
வி - முனிசாமிஆசாரி.
ப - பச்சையப்பாசாரி.
சி - ஆறுமுகாசாரி.
ம - பார்த்தசாரதிநாய்க்கர்.
சி - சுந்தரநாய்க்கர்.
சி - சுப்பராயமுதலியார்.
ம - அருணசலஆசாரி.
சே - ராகுவாசாரி,
கொ - பச்சையப்பஆசாரி.
ம - நாகப்பாசாரி.
பெ - முருகப்பாசாரி.

ஒ - அப்பாசாமிஆசாரி
பு - முத்துசாமிபத்தர்.
பெ - அருணசலஆசாரி.
ரா - வேலாயுதஆசாரி.
ரா - வீரபத்திரஆசாரி.
ம - குமாரசாமிஆசாரி.
இ - முருகப்பஆசாரி.
ஒ - முத்தாசாரி.
க - சிதம்பராசாரி.
ச - தாணப்பஆசாரி.
கா - ராகவாசாரி.
ப - ஆறுமுகவாசாரி.
பி - சுப்பராயவாசாரி.
ப - குட்டிஆசாரி.
ப - பொன்னப்பவாசாரி.
க - ராமசாமிவாசாரி.
சு - சத்தியாசாரி.
க - ரத்தினசாரி.
க - வேலாயுதாசாரி.
பு - எல்லப்பாசாரி.
க - முனிசாமிஆசாரி.
க - தர்மலிங்கவாசாரி.
தி - முத்தாசாரி.
செ - வெங்கிடாசலவாசாரி.
ப - தாண்டவாசாரி.
தி - மதுரைமுத்துவாசாரி.
வெ - வேலாயுதாசாரி.
வெ - சரவணஆசாரி
க - முருகப்பஆசாரி.
அ - அண்ணுஆசாரி.
சி - முருகப்பஆசாரி.
க - குமாரசாமியாசாரி.
ம - எல்லப்பாசாரி.
தா - சுந்தராசாரி.

ஆ கையொப்பக்காரர்கள் 198.

உ

கடவுள் துணை.

முகவுரை.

ஆதியில் அண்டபுவன சராசரங்கள் யாவையும் படைத்த சுயம்பு விராட்டு விஸ்வப்ரம்மம், தர்மார்த்த காமமோக்ஷ மென்னுஞ் சதுர்வித பல புருஷார்த்தங்களை யாவரும் அடையும்படி இருக்கு-எசுர் - சாமம்-அதர்வணம்-பிரணவமென்னும் ஐந்துவேதங்களை அளித்தார்.

அந்தவேதங்கள் நான்கு வர்ணாசிரமங்களுக்கும் பொதுவாகையால் வியாசன் முதலியரிஷிகள் விஸ்வப்ரம்ம குலத்தாரிடத்தில் கற்றுணர்ந்த ஐந்துவேதங்களை நான்கு வேதங்களாகவும் பஞ்சமுகப்பிரம்மாவை நான்முகப்பிரம்மாவாகவும் புறட்டிப் பஞ்சமூர்த்திகளில் திரிமூர்த்திகளைப் பதினெண்புராணங்களில் புகழ்ந்தும் இகழ்ந்தும் அநாதியானவேதாகமபுராணங்களைத் தங்கள் பரம்பரைக்கே பாத்தியமென்றும், மற்றவர்கட்குப் பாத்தியம் இல்லையென்றும், தங்களிஷ்டப்படிக்கே அந்தவேதாகமங்களைக் கெடுத்து அதில் தங்களையே மேலானஜாதியென்றும், மற்றவர்கள் கீழான ஜாதியென்றும் ஸ்தாபித்து இத்தேசத்தில் நான்குவர்ணாசிரமத்தாரும் ஜாதிபேதஞ் சமயபேதமில்லாமல் ஒருமையாய்க் கொள்வன கொடுப்பன செய்துவந்ததை பின்னப்படித்தி, ஒருவருக்கொருவர் கூடவொட்டாமல் செய்திருக்கிறார்கள். எப்படியெனில், பலஜாதியென்றும், பலசமயமென்றும், பலதெய்வமென்றும், மித்திரபேதப் படுத்தினதை சிலர் யோசிக்காமல் என்ஜாதிமேல் உன்ஜாதிகீழ் என்றும், என்தெய்வம் பெரிது உன்தெய்வஞ் சிறிதென்றும், இப்படியாக அபிமதமடைந்து வழக்காடிக்கொண்டு ஒருமையையும்-நீதியையும்-உண்மையையும் கைவிட்டுவிடும்படிச் செய்துபோட்டார்கள். இதைச் சென்னப்பட்டணம் விஸ்வப்ரம்ம சபையார் யோசிக்கும்படியாகிப் பின்வரும் தீர்ப்பை அச்சிட்டார்கள்.

ஆதியில் சித்தூர்ஜில்லாவில் பண்டிதராகிய மார்க்கசகாய ஆசாரியாருக்கும், பஞ்சாங்கம் குண்டையருக்கும் நடந்த விவாதங்களைக்குறித்து மகாகனம் பொருந்திய சித்தூர் ஜில்லா அதலாத்துகோர்ட்டு ஜட்ஜி டேக்கர் துரையவர்கள் கொடுத்த தீர்ப்பினால் தர்மார்த்த காமமோக்ஷ மென்னும் சதுர்வித புருஷார்த்தங்களும், நீதிகளும் இந்தத்தேசத்தில் வந்து குடிகொண்டிருக்கும்படி அழுக்காறு முதலிய துர்க்குணங்களை தூரத்துலக்கு ஒட்டி, நன்மைதருவதற்கு ஆதாரமாக விளங்குகின்ற அந்த ஜட்ஜியவர்களின் தீர்ப்பு யாவருக்கும் நன்றாய்த் தெரிந்திருந்தும் சித்தூர், சேலம், திரிசிரபுரம், பெங்களூர், மைசூர், பல்லாரி, பந்தர், விஜயநகரம், திருநெல்வேலி, மதுரை,

முகவுரை.

கும்பகோணம்,சீர்காழி,சிதம்பரம் முதலான ஜில்லாக்கள் தோறும் விப்பிராள் விஸ்வப்ரம்ம வம்சத்தாரை எளிதாய் மதித்துச்செய்கிற தொந்தரை ஒருவிதமல்ல, அந்தந்த தேசத்திலிராகின்ற விப்பிராளைப்பார்த்து பஞ்சகவுடாளும் பஞ்சதிராவிடாளும் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாருக்கு வேதாதிகாரம், விதிமுறை முதலியது இல்லையென்பதாய் நீங்கள் வீணவம்புசெய்ய வேண்டாமென்று சுருதிப்பிரமாண முன்னிலையில் நன்மார்க்கஞ் சொல்லியுங் கேளாமல், அந்தத்துன்மார்க்க விப்பிராள் கம்மாளஜாதி தவிர மற்றஜாதிகளெல்லாம் எந்தத்தேசத்திலும் எந்த நாட்டிலும், தங்களுக்கு உபபலமாய் இருக்கக் கவர்ன்மெண்டு துரைத்தனத்தில் எந்தக்கோர்ட்டிலும் எந்தநாட்டிலும் தங்களுடைய வம்சத்தாராகிய விப்பிராள்தானே சகலத்துக்கும் அதிகாரிகளாயிருக்கிறார்களாகையால், அவர்களைக்கொண்டு இந்தக் கம்மாளரை வெகுலேசாய் ஜெயிக்கலாமென்று மேற்படிகுண்டையன் முதலான விப்பிராள் விஸ்வப்ரம்ம குலத்தாரை வேதவிதிப்படி விவாகமுதலானது செய்யக்கூடாதென்று கலகம் விளைத்தார்கள். மேலும்தாங்களே அழைத்துக்கொண்டுவந்தபஞ்சாயத்தார்முன்னிலையில் பஞ்சாங்கங் குண்டையன்கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பண்டிதராகிய மார்க்கசகாய ஆசாரியார் விடைகொடுத்து நிராகரித்தும், விஸ்வப்ரம்ம குலத்தார் வேதவிதிப்படிச் செய்யுஞ் சுபாசுபங்களைப் பஞ்சாங்கங் குண்டையன் முதலியபேர் தடுக்க ஞாயமில்லையென்று ஷை பஞ்சாயத்தார் தீர்ப்புக்கொடுத்தார்கள். இந்தத் தீர்ப்பை மீறி பஞ்சாங்கங் குண்டையன் முதலியோர் துராக்ரதமாக பஞ்சாநோற்பவர்களை அடித்துப்பிடித்துச் சண்டைசெய்ததற்காகப் பண்டிதர் மார்க்கசகாய ஆசாரியார் மாஜிஸ்ட்ரேட்டில் பிரியாதுசெய்தார். மாஜிஸ்ட்ரேட்துரைகள் பஞ்சாங்கங் குண்டையன் முதலான விப்பிராளுக்கு அபராதம்போட்டு விவாஹ நஷ்டபாபத்தைக் குறித்துச் சித்தூர்ஜில்லா அதாலத்துகோர்ட்டில் தாவாசெய்து கொள்ளுங்களென்று டைரிகொடுக்கப்பெற்றார். அதின்பேரில் பிராதுசெய்த பண்டிதராகிய மார்க்கசகாய ஆசாரியையும் பஞ்சாங்கங் குண்டையனையும், சாஷிசாதக சுருதிப்பிரமாணமாய் விசாரணைசெய்து வாதிகள் பட்சத்தில் தீர்ப்புக்கொடுத்திருக்கிறார். அந்தத் தீர்ப்பு சென்னப்பட்டணம் விஸ்வப்ரம்ம சபையாரால் பிரசித்தஞ் செய்யப்பட்டிருக்கின்றதென்றறிக.

இந்தத் தீர்ப்புமுதலானதை மித்துரு-சத்துரு-அயலாரென்று எண்ணாமல் ஆதியோடந்தமாய்ப் பார்வையிட்டால் துன்மார்க்க மற்றுச் சன்மார்க்கத்துக் காளாவதற்கு யாதொரு சந்தேகமில்லை.

முகவுரை - முற்றிற்று.

உ

கடவுள்துணை.

சித்தூர் ஜில்லா

அதாலத்துகோர்ட்டு தீர்ப்பு.

சென்னப்பட்டணத்தைச் சார்ந்த
சித்தூர் ஜில்லா சதுர்ப்பேரியில்
பண்டிதர்-மார்க்கசகாய ஆசாரியாருக்கும்,
பஞ்சாங்கம்-குண்டையனுக்கும்,
பஞ்சாயத்தார் முன்னிலையில் பிராமணீகத்தைக் குறித்து
நடந்த சம்பாஷணை.

முதலாவது.

சித்தூர் ஜில்லாவைச்சார்ந்த சதுர்ப்பேரியில் விஸ்வப்ரம்ஹ வம்மிசத்தில் பண்டிதர் மார்க்கசகாய ஆசாரியார் முதலியவர்கள் நடாத்துகின்ற விவாகஸ்தம்பப் பிரதிஷ்டை வைபவத்தில் பஞ்சாங்கம் குண்டையன் முதலான விப்பிராள் கும்பல் கூடிவந்து ஆக்ஷேபனை செய்தார்கள்.

அவன் போதனைக்குட்பட்டு வந்த புத்திமான்கள், இந்தப் பஞ்சாங்கம் குண்டையனை நீக்கி நீங்கள் வேதவிதிப்படி விவாகஞ்செய்ய யத்தனித்தபடியால் எங்களைப் பஞ்சாயத்தாராகக் கோரிக்கொண்ட இந்தப் பஞ்சாங்கம் குண்டையன் கேட்கும் கேள்விகளுக்கு நீங்கள் வேத சுருதிப் பிரமாணமாக உத்திரவு கொடுத்து உங்களினத்தில் உபாத்தியாயரை வைத்து விவாகஞ் செய்துக் கொள்ளலாம்; இல்லாவிட்டால் இந்த குண்டையனைக் கொண்டு விவாகம் நடத்திக்கொள்ள வேண்டுமென்று சொன்னதின்பேரில் பஞ்சாங்கம் குண்டையனுக்கும், பண்டிதர் மார்க்கசகாய ஆசாரியாருக்கும் பஞ்சாயத்தார் முன்னிலையில் நடந்த சம்பாஷணைகள்.

1.—பஞ்சாங்கம்-துண்டையன், ஓ மார்க்கசகாய ஆசாரி! இந்த அண்ட புவன சராசரங்கள் யாவையும் படைத்தவர் யார்?

பண்டிதர்-மார்க்கசகாய ஆசாரி: ஓமெனும் பிரணவ ஓங்காரமாய் ஒலிக்காநின்ற விராட் விஸ்வப்ரம்ஹமே அண்டபுவன சராசரங்களை யெல்லாம் படைத்தவர்.

2.—ப - து. அந்த விராட்புருஷ விஸ்வப்ரம்ஹம் எப்பேர்க்கொத்தது?

மா - ஆ. யஸுர்வேதம் மூன்றாவது உபநிஷதத்தின் சூத்திரார்த்த வாக்கியத்தில்,

தஸ்யமத்யேவந்ஹிசிகா அணீயோர்த்வாவ்யவஸ்தித:
ஓம் இத்தியேகாக்ஷரம் ப்ரம்ஹவியாஹரந்.

తస్యమద్ధ్యేవహ్నిశిఖా అణీయోర్ధ్వాఽవ్యవస్థితః
ఓంయిత్యేకాక్షరంబ్రహ్మవ్యాహరన్.

என்று சொல்லியபடி அந்த விராட் விஸ்வப்ரம்மமாகிய பரப்ரம்மம் ஆதியந்தமும், அருவ உருவங்களும், குணங்குறிகளும் இல்லாதவராய் நிர்மல நிராமய நிஷ்கள வஸ்துவாயிருக்கின்றனர்.

3.—ப-து. அந்தப் பரப்ரம்மம் அருவ உருவங்க ளற்றவரென்றீரே! அப்படிக்கிருக்க விஸ்வப்ரம்மமென்று சொல்லும் விதியென்ன?

மா - ஆ. அந்த விராட் விஸ்வப்ரம்மத்தை அந்தர்முகமாய் நோக்குகையில் அருவ உருவங்க ளற்றவரென்றும், பகிர்முகமாய் நோக்குகையில் ரூபமுடையவரென்றுஞ் சொல்ல நியாயமிருக்கின்றது. அது எப்படியென்றால், உலகத்தில் காணும் சிருஷ்டிகள் யாவும் அவரல்லாமல் இல்லையாகையால் அதுகள் அவரேயென்றும், அந்த சிருஷ்டிகர்த்தாவை ரூபில்காண நமக்குத்திடமில்லையாகையால் அரூபமென்றுஞ் சொல்லலாயிற்று.

4.—ப - து. ப்ரம்மத்திற்குப் பகிர்முகத்தில் ரூப முண்டென்றீரே! அதை விபரமாய்த் தெரிவிக்கக் கோருகிறேன்?

மா - ஆ. விராட்விஸ்வப்ரம்மத்திற்கு அண்டரண்ட பிரம்மாண்டங்களே சரீரம். அதுயெப்படியென்றால், பிரமமென்று சொல்லும் பிருதிவு-அந்த விராட் விஸ்வப்ரம்மத்திற்குப் பாதமென்றும், விஷ்ணுவென்னும் அப்பு-தொப்புளென்றும், உருத்திரனென்னுந் தேயு-மார்பென்றும், மஹேஸ்வரனென்னும்

வாயு - மார்புமுதல் புருவமத்தியமென்றும், சதாசிவமெனச் சொல்லும் ஆகாயம்-சிரசென்றுஞ் சொல்லப்படும்.

அந்த ப்ரம்மத்திற்குச் சந்திரன் - மனது, திக்குகளே - காது, விஷ்ணுவே - தோள்கள், அக்கினியே - வாக்கு, மிருத்புவே - குதம், வாயுவே - தொக்கு, சூரியனே - கண்கள், வருணனே - நாவு, பூமிதேவியே - மூக்கு, அந்தர்யாமியே - புருஷன், இவைகளே அப்பிரமத்திற்குத் தேகம், அந்த விஸ்வப்ரம்மமானது சிற்றுருவாகிய ஜீவன்களில் ஸ்தூலம் - சூக்ஷமம் - காரணம்-கூடஸ்தம்-ப்ரம்மமெனப் பஞ்சஅங்கங்களைப் பெற்று இருப்பதால் பஞ்சேந்திரியத்தில் மனதைச்செல்லவொட்டாமல் நிறுத்திப் பிரணவவேதத்தில் கற்பித்திருக்கும் விதிப்படியனுஷ்டித்தால் அந்தப்ரம்மத்தைத் தெரிசிக்கலாம்.

5.—ப - கு. பிர்மாண்ட பிண்டமாகிய அப்பிரம்மம் வேறு சீவன்களாகிய நாம் வேறு ஆகியிருக்க நம்மில் அவர் சிற்றுருவாய் நிறைந்திருக்கின்றூரென்றீரே அதுஎப்படி?

மா - ஆ. சுருதிப்பிரமாணம்:—

இருஷிகேசவிபு:நாநோபாதிகடாத்தத்பேதாத்
ஆகசா:யதாததாபின்னவத்தந்நாஸேஸதிகேவலாபவதி.

హృషీకేశవిభుఃనానోపాదిఘటాత్తద్భేదాత్।
ఆకాశఃయథాతథాభిన్నవత్తన్నాశేసతికేవలాభవతి॥

என்கிற இதிலே, மனுதி இந்திரியங்கள் அனைத்துக்கும் அதிபதியாய்ச் சர்வவியாபகனுகிய விஸ்வப்ரம்மமானது நானுவிதமான ஸ்தூல சூட்சும காரண கூடஸ்ததேகமாகிய உபாதிகளிலே ப்ரம்மமாக பிரதிபலித்தவனுகிய அந்த உபாதிபேதத்தினுலே கடாதிகளால் வேறுபட்ட ஆகாயமானது எப்படியிருக்கின்றதோ அப்படியே வேறுபட்டவனைப்போல அந்த விஸ்வப்ரம்மம் ஜீவர்களில் பிரகாசிக்கின்றது. அந்த உபாதிகளுக்கு நாசம்வந்தபோது ஏகவஸ்துவேயாகின்றூர். இவர் அனுதிவஸ்துவென்பதற்கு மூலஸ்தம்பம் பிரமாணம்.

நபூமிநஜலஞ்சைவா நதேஜோ நசவாயவ:
நசாகாஸநசித்தஞ்சா நபுத்தியாக்ருணகோசர:
நசப்ரம்மநவிஷ்ணுச்ச நசருத்ரஸ்சதாரகா:
சர்வசூன்யநிராலம்ப ஸ்வயம்பூவிஸ்வகர்மண:

నభూమినజలంచైవన తేజోనచవాయవః
నచాకాశనచిత్తంచనబుద్ధ్యాఘ్రాణగోచరః
నచబ్రహ్మనవిష్ణుశ్చనచరుద్రశ్చతారకాః
సర్వశూన్యనిరాలంబస్వయంభూవిశ్వకర్మణః.

என்னும் இதிலே பூமியும்-ஜலமும்-அக்கினியும்-வாயுவும்-பிரகாசமும்-ஆகாசமும்-புத்தியும்-நக்ஷத்திரமும்-ப்ரம்மாவும்-விஷ்ணுவும்-ருத்திரனும் இவை முதலானவை ஒன்றுமில்லாத சர்வசூன்யமா யிருந்தகாலத்தில் ஸ்வயம்பு விராட்விஸ்வப்ரம்மாவானவர் ஸ்வரூபமாயிருந்தார். அந்த ஸ்வரூபத்தில் நின்றும் பஞ்சமுக சம்ராட்டாகிய விஸ்வப்ரம்மா உண்டாயினர். அவருடைய ஸ்வயரூபதியானமேோவென்றால் சத்யோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருஷம், ஈசானியமென்னும் பஞ்சமுகதியானத்தால் சாநக-சநாதந - அபுவநச - பிரத்நச-சுபர்நச என்னும் நாமதேயமுடைய மநு - மய - துவஷ்டா-சில்பி-விஸ்வக்ஜீய - என்னும் பஞ்சப்ரம்மாக்கள் உற்பவமானர்கள். இந்த பஞ்சப்ரம்மாக்களாலும், பஞ்சசத்திகளாலும், சிருஷ்டி-திதி-சங்காரம் - திரோபவம் - அநுக்கிரகமென்னும் பஞ்சகிருத்தியங்கள் நடந்தேறிவருகின்றன.

6.—ப - த. பஞ்சகிருத்தியத்தில் சிருஷ்டி எவ்வாறு?

மா - ஆ. பூமிசார பூதவியற்கையால் தேவர்-மக்கள்-விலங்கு-புள்-ஊர்வன-நீர்வாழ்வன-தாபர மென்னும் எழுவகைத் தோற்றமாகி, அவ்வவைகளில் ஆண் பெண் இரண்டுஜாதியாய் ஜீவாத்துமாக்கள் பிரதிபலித்து வாழையடிவாழையாய் உற்பவித்து வருவதே சிருஷ்டி; பிருதிவியின் செய்கையாகிய இது தான் ப்ரம்மாவென்று சொல்லப்படும்.

7.—ப - த. திதி கிருத்தியஞ் செய்பவர் யாவர்?

மா - ஆ. அப்புவின் அம்சம் பிருதிவியின் செய்கையை அதிகரிக்கவொட்டாமல் எங்கும்தானே வியாபித்து பிருதிவியினால் உற்பவித்த ஜீவாத்மாக்களுக்குக் காமத்தை விளைவித்துக் காப்பாற்றுவதுதான் திதித்தொழில். இதுதான் அப்பு. இந்த அப்புத்தான் விஷ்ணுவென்று சொல்லப்படும்.

8.—ப - து. சங்காரகிருத்தியஞ் செய்பவரார்?

மா - ஆ. தேயுவின் அம்சம் அப்புவின் செய்கையை அதிகரிக்கவொட்டாமல் அடக்கிப் பிருதிவியின் செய்கையா லுற்பவித்த ஜீவாத்மாக்களில் கலந்து விஸ்ரம்பிக்கும்போது வாதபித்தமென்னும் பிணிகள் ஒவ்வாமல் அழிப்பதுவே சங்காரம்; இதுதான் தேயு வாகையால் ருத்திரனென்று சொல்லப்படும்.

9.—ப - து. திரோபவ மாவதென்ன?

மா - ஆ. திரோபவமாவது வாயுவின் அம்ஸம் எங்குந் தானுயுலாவித் தேயுவின் அம்சத்தை அதிகரிக்கவொட்டாமல் உலகத்தைப் பாதுகாத்து ஜீவாத்துமாக்களின் பரிசவேதியிற் கலந்து விஸ்ரம்பிக்கும்போது, சத்துவகுணம் பிரதானமாகி அந்தக்கரணங்கள் அடங்கியிருப்பது திரோபவ மாகையால்; இதுதான் மயேஸ்வரனென்று சொல்லப்படும்.

10.—ப - து. அநுக்கிரகமாவ தென்ன?

மா - ஆ. அநுக்கிரகமாவது ஆகாயத்தின் செய்கை விராட் விஸ்வப்ரம்மம் ஜோதிசொரூபமாகிய பரவெளியில் உதயமாகி வாயுவின் செய்கையை அதிகரிக்கவொட்டாமல் தனக்குட்படுத்திக்கொண்டு அவ்வாயுவின் அம்சம் விஸ்ரம்பிக்கும்போது அதிதீவர பக்குவமுள்ள சுத்த ஆத்மாக்களுக்கு ஒளியாக வெளிப்பட்டு விஸ்வப்ரம்மத்தின் கிருபாநோக்கத்தால் யாலொடுநெய்போலப் பரவி முத்தியைத் தருவது ஆகாயத்தின் செய்கையாகிய அநுக்கிரகம் என்றறிக, இந்த அநுக்கிரகந்தான் சதாசிவமென்று சொல்லப்படும்.

11.—ப - து. ப்ரம்ம வம்மிசத்தின் விதியாவதென்ன?

மா - ஆ. ப்ரம்மவம்மிசத்தில் மநுவாசாரியென்பவர் அயசிருஷ்டியும், ருக்குவேத பாராயணமும், அவுபாசநமும், ஓமகுண்டங்களில் சிருஷ்டித்தெழுந்தருளிய சம்ஹாரகர்த்தாவென்கிற ருத்திரசிருஷ்டியென்று சொல்லப்படும். அதன்செய்கை வேதம்.

அயாமநுருக்ஜாதம். అయామనురుగ్జాతం.

என்னும் வேதவாக்கியப்படி ருத்திரரூபமாகிய சுத்தியினல் சமஸ்த வர்ணுசிரமங்களும் சிருஷ்டி பரிபாலனமாகும்

படிக் கெற்பத்திலுற்பவித்த சிசுவின் உந்திக்கொடியைத் தாய் வேறு பிள்ளைவேருகக் கண்டித்தபின் தர்மார்த்த காமமோக்ஷமென்கிற சதுர்வித புருஷார்த்த சித்திகளும் விளங்கும்படி கார்முனை - கத்திமுனை - கதிர்முனை - திராசுமுனை - எழுத்தாணிமுனை இவ்வைந்திஞல் உலகசம்ரக்ஷணை செய்து வருவது ருத்திரன்தொழிலென்று யசுர்வேதத்தில் சொல்லியிருக்கின்றது. இவர்தான் மநுவாசாரியார்.

12.—ப - கு. மயாசாரி நிர்ணய மாவதென்ன ?

மா - ஆ. மயாசாரி நிர்ணயமாவது

மயாதாரு யஜுஸ்ததா. మయాదారుయజుస్తథా।

என்னும் வேதவாக்கியப்படி யசுர்வேத பாராயணமும், சகலஜீவாத்துமாக்களும் உயிர்வாழும்படி தாருசிருஷ்டியும், தேவானுகூலமாகிய சகலவித சாமான்களும் விஷ்ணுதொழிலென்று சொல்லுகின்றது. அவ்விரக்ஷிப்பையுடையவர்தான் மயாசாரியார்.

13—ப - கு. துவஷ்டாசாரி நிர்ணயமாவதென்ன ?

மா - ஆ. துவஷ்டாசாரி நிர்ணயமாவது வேதம்.

தாம்ரத்வஷ்டாரஜாஸாமம். తామ్రత్వష్టారజాసామం.

என்னும் வேதவாக்கியப்படி தாம்பிர சிருஷ்டியும், சாமவேதபாராயணமும், கருக்கட்டி புருக்காட்டிய ஷண்மதஸ்தாபன விக்கிரகங்களும், யாகசாலையில் கலசாவாகம் - தூபதீப முதலிய கருவிகளும், ப்ரம்மாவினுடைய தொழிலென்று யசுர்வேதத்திற் சொல்லுகின்றமையால் அந்தப்ரம்மாதான் துவஷ்டாசாரியார்.

14—ப - கு. சிற்பியாசாரி நிர்ணயமாவதென்ன ?

மா - ஆ. சிற்பியாசாரி நிர்ணயமாவது வேதம்.

சிலாசில்பி: அதர்வண: శిలాశిల్పిఅధర్వణః

என்னும் வேதவாக்கியப்படி அதர்வண வேதபாராயணமும், முப்பத்திரண்டு சில்பமும், சண்மதஸ்தாபனமும், கோபுரஸ்தூபி முதலிய சதகோடி தேவதா நிர்மிதோத்தாரணமும், வேதமந்திரபீஜ ஆவாஹனமும், அஷ்டதிசைக்கிரியையும் நிர்

மாணித்து மோக்ஷார்த்தமாகிய ப்ரம்மக்கியானங்களுக்கு நியம - நிஷ்டா - கிரஷ்டா-அஷ்டாங்கயோக சமாதிகிரியா ஸம்ப்ரத அத்வைத ப்ரம்மசொரூப மென்கிற விராட் விஸ்வப்ரம்மத்தை வணங்குவதற் கேதுவாகியும், தேவர்களுக்கு ஸ்தபதியாசாரியார் இருந்து சமஸ்தமந்திர அம்சையினுல் சர்வாதாரதேவதைகளும் அஷ்டாதசவர்ணமும் மோக்ஷமடைவதென்று சிற்பாசாரியினுடைய சிருஷ்டியே தேவேந்திரனுடையசிருஷ்டியென்றும், யசுர்வேதத்திற் சொல்லியிருக்கின்றது. அந்த இந்திரன் தான் சிற்பாசாரியார்.

15—ப - து. விஸ்வக்ஞஆசாரி நிர்ணயமாவதென்ன?

மா - ஆ. விஸ்வக்ஞஆசாரி நிர்ணயமாவது வேதம்.

ரௌப்யஸ்வர்ணற்கப்ரணவம், பஞ்சப்ரஹ்ம விதீயதே.

రౌప్యస్వర్ణాత్కర్ణప్రణవం పంచబ్రహ్మావిధీయతే.

என்னும் வாக்கியப்படி பிரணவவேத பாராயணமும், திரயத்திரிம் சதகோடி தேவதைகளும், சமஸ்த வர்ணாசிரமத்தார்களும், பிரகாசம்பொருந்தின சுவர்னங்களினுல் ரத்தினாபரணாதிகள் சிருஷ்டித்தலும், அஷ்டாதசவர்ணங்களும், அஷ்டவிவாகத்திற்குட்பட்ட வர்ணாசிரமங்களில் துன்மார்க்க மாதர்களால் உற்பத்தியான அனுலோமன் - பிரதிலோமன் - அந்தராளன் - கன்னன் - குண்டன் - கோளகன் முதலான வர்க்க பீஜ நிஷிதமில்லாமல் மாங்கல்யமென்கிற முத்திரியைச்சிருஷ்டித்து மேற்சொல்லிய வர்க்கங்களை குலபுத்திரர்களாக்கி சதுர்வித புருஷார்த்தங்கள் அடையும்படி அனுக்கிரகஞ்செய்வது சூரியசிருஷ்டி யென்று எசுர் வேதத்திற் சொல்லுகின்றது. அந்த சூரியன்தான் விஸ்வக்ஞ ஆசாரியார். இந்த ஐந்துவித ப்ரம்மகர்மங்களை யனுஷ்டித்து வருவதினுல் உலகசம்ரக்ஷணையென இருக்கு - யசுர்-சாமம் - அதர்வணம்-பிரணவம்-மூலஸ்தம்பம் - ஷட்சாஸ்திரம் - அஷ்டாதச புராணங்கள்-ஆகமசித்தாந்த இதிஹாசங்கள் - வச்சிரசூசி - நாகரகாண்டம் - சிற்பநூல் முப்பத்திரண்டில் விச்சுவகருமம் - விச்சுவேசம் - விச்சுவாசாரம்-விருத்தம்-தாவட்டம் - நளம்-மயம் - அநுமான் - பானு-கற்பாரியம் - சிருட்டம் - மானசாரம் - வத்துவித்தியாபதி - பாரா

சரியம் - அரிடிகம் - சயித்தகம் - வாத்துபோதம் - வித்தாரம் - இந்திரம் - வச்சிரம் - சௌமம் - விச்சுவகாசிபம் - மகத்திரம் - விசாலம் - சித்திரம் - காபிலகாலயூபம் - நாமசங்கிதை - சாத்திகம் - விச்சுவபோதம் - ஆதிசாரம் - வெகுச்சுருதம் - மானபேதம் முதலிய பலநூல்களிலுஞ் சொல்லியிருக்கிறது. மேலும் இந்த ஐந்து சிருஷ்டிக்கும் மிஞ்சி உலகமில்லையென்றும், அதுவே பஞ்சகர்த்தாக்கள் அவதாரசொரூபமென்றும் யசுர் வேதத்திற் சொல்லியிருக்கின்றது.

அஃதாவது.

மநுப்பிரம்மணே உமாமஹேஸ்வராப்யாம்நம:
மயப்பிரம்மணே லக்ஷ்மிநாராயணாப்யாம்நம:
துவஷ்ட்றுபிரம்மணே வாணிஹிரண்ணிய கர்ப்பாப்யாம்நம:
சில்பிபிரம்மணே சசிபுரந்தராப்யாம்நம:
விஸ்வக்ஞப்ரம்மணே ஸவிதாபாஸ்கராப்யாம்நம:

మనుబ్రహ్మణేఉమామహేశ్వరాభ్యాంనమః
మయబ్రహ్మణే లక్ష్మీనారాయణాభ్యాంనమః
త్వష్టృబ్రహ్మణే వాణీహిరణ్యగర్భాభ్యాంనమః
శిల్పిబ్రహ్మణేశచీపురంధరాభ్యాంనమః
విశ్వజ్ఞబ్రహ్మణేసవితాభాస్కరాభ్యాంనమః

என்னும் வேதவாக்கியத்தின் பொருள் மநுப்ரம்மாவினுடைய சிருஷ்டியே உமாமஹேஸ்வரராகிய ருத்திரன் தொழிலென்றும்,

மயப்ரம்மாவினுடைய சிருஷ்டியே லட்சுமி நாராயணஸ்வரூபமாகிய விஷ்ணு தொழிலென்றும்,

துவஷ்டப்ரம்மாவினுடைய சிருஷ்டியே வாணி ஹிரண்ய கற்பனாகிய ப்ரம்மாவினுடைய தொழிலென்றும்,

சில்பப்ரம்மாவினுடைய சிருஷ்டியே சசிபுரந்தரனாகிய தேவேந்திரன் தொழிலென்றும்,

விஸ்வக்ய ப்ரம்மாவினுடைய சிருஷ்டியே சவிதாபாஸ்கரனாகிய சூரியன் தொழிலென்றும்,

விராட்விஸ்வ கர்மணே நம:	విరాడ్విశ్వకర్మణేనమః
ஸ்வராட்விஸ்வ கர்மணே நம:	స్వరాట్విశ్వకర్మణేనమః
ஸம்ராட்விஸ்வ கர்மணே நம:	సమ్రాడ్విశ్వకర్మణేనమః.

என்னும் விராட் ப்ரம்மமே விஸ்வப்ரம்மா ஸ்வரூபமென்றும், சுராட் ப்ரம்மமே விஸ்வப்ரம்மா ஸ்வரூபமென்றும், சம்ராட்ப்ரம்மமே விஸ்வப்ரம்மா ஸ்வரூபமென்றும், ப்ரம்மமென்பதும்-ப்ரம்மகர்மமென்பதும் வேதமுதலியவற்றால் விளங்கியிருக்கின்றன.

16.—ப - து. க்ஷத்திரியருடைய விதியாவதென்ன?

மா - ஆ. க்ஷத்திரியர்களில் சூரியவம்சம் - சந்திரவம்சம்-அக்கினிவம்ச முதலான அநந்தம் க்ஷத்திரியர் ஐம்பத்தாறு தேசமுதலான தீவுகளில் அரசாளுகின்றவர்கள் முடி கொடை முதலிய தசாங்கத்துடன் வேதமோதலும், யாகஞ்செய்தலும், இரப்பவர்க்கீதலும், ஆயுதவித்தையிற் பழகுதலும், பகைவரை யழித்தலும் ஆகிய ஷட்கர்மமுடையராய் வீரமுள்ள சேனைகளும், செல்வமுள்ள குடிகளும், மாறாத பொருள்களும், மதிநுட்பமுள்ள மந்திரியும், அன்புள்ள நட்பும், பகைவரால் அழிக்கப்படாத கோட்டைகளும், பதினெண்வழக்குகளை மநுநீதியின்படி விதிக்கின்றவர்களே க்ஷத்திரியர்கள்.

17.—ப - து. வைசியர்களின் மார்க்கமென்ன?

மா - ஆ. வைசியர்களின் மார்க்கமாவது:— தராசுநிறையும், தர்மதான நிதானமும், ஜீவகாருண்யமும், தேவதாபக்தியும், காரியசித்தியும், சத்தியநாவும், நித்தியசீலமும், புத்தி யுக்தியும், வேதவித்தையும் பெற்றவர்களே வைசியர்களென்னப்படும்.

18.—ப - து. சூத்திரர்களுடைய விதியாவதென்ன?

மா - ஆ. சூத்திரர்களுடைய விதியாவது:—ஆதியில் விஸ்வப்ரம்ம வம்சத்தார் இந்தப் பூச்சக்கரத்தைக் குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதமென்னும் பஞ்சநிலமாகப் பகுத்தளித்ததில் இன்னகாலத்தில் இன்னபொருள் விளையுமென்றும், அதனை இன்னவிதமாய்ப் பயிரிடவேண்டுமென்றும், கற்பித்தபடியே உயிர்களைக் காப்பாற்றுவது சூத்திரன் பெருமையாகையால், அந்தச் சூத்திரன் தேவர்கள்முதலாகிய பிதுர்க்கள் யாவருக்கும் நித்திய நைமித்திய உணவுகளைத்தருபவன்; வேதாகமங்களுணர்ந்த விதிவழுவாதவனே சூத்திரனென்று சொல்லப்படும்.

19.—ப-து. பிரமசாரி விதியாவதென்ன?

மா-ஆ. குருபத்தியில் தொண்டுபூண் டிருப்பதும், வேதம் வாசித்தலும், நிலத்திற் படுத்தலும், நித்தியஸ்நான விரதமும், உத்தமர்நேசமும், தேவாலயதரிசனப் பணிவிடைகளும், சத்தியவாக்கும் பெற்றிருப்பவன் நித்தியபிரமசாரி.

ப-து. இந்த பிரமசாரிக்குப் பதவியென்ன?

மா-ஆ. சாலோக பதவி.

ப-து. சாலோகபதவியாவதென்ன?

மா-ஆ. விராட்விஸ்வப்ரம்மம் உலகத்தில் வாழ்வதுவே சாலோகபதவி.

20.—ப-து. கிரகஸ்தன் விதியாவதென்ன?

மா-ஆ. தருமமாகத் தேடிய பொருளைப் பிரமசாரி முதலிய பதின்மருக்கும் பகிர்ந்துகொடுத்துத் தேவாலயப்பணிவிடை திருவிழாசெய்து வேதவிதிவழுவாது விரதநோன்பியற்றி அசத்தியம் மாற்றி ஆசாரியரை வாழ்த்திச் சொல்தவறுதவனுடன் கூடி வாழ்வது இல்லறதருமமாம்.

ப-து. இந்தக் கிரகஸ்தனுக்குப் பதவியென்ன?

மா-ஆ. சாமீபமென்னப்பட்ட பதவி.

ப-து. சாமீபமென்பதென்ன?

மா-ஆ. விராட் விஸ்வப்ரம்மத்தின் அருகில் வாழ்வது சாமீபபதவியாம்.

21.—ப-து. வானப்பிரஸ்தன் விதியாவதென்ன?

மா-ஆ. கற்புடைய மனைவியுடனாவது தனித்தாவது ஐம்புலன் அவாவில் உழலாமல் தன்வசத்தனாகி விரதமுதலிய தவம்புரிந்து ஏகபுக்தனாக இருப்பதுதான் வானப்பிரஸ்தன் விதி.

ப-து. இவர்க்குப் பதவியென்ன?

மா-ஆ. சாரூபமென்பது.

ப-து. சாரூப பதவியாவதென்ன?

மா-ஆ. விராட் விஸ்வப்ரம்மம்போல் ரூபித்திருப்பது சாரூபபதவியாம்.

22.—ப-து. சந்நியாசி விதியாவதென்ன?

மா-ஆ. பிரணவவேத விதிவழுவாமல் தத்துவ பேதாபேதங்களறிந்து, இருவினை மும்மலமகற்றிப் பாசபந்தத் தொடக்

கறுத்துத் தேகாபிமானம் வெறுத்துப் பற்றறச் சுத்தசைதந்ய புதமானதே சந்நியாசி விதியாம்.

ப - த. இவர்களுக்குப் பதவியென்ன?

மா - ஆ. சாயுச்சிய பதவியாம்.

ப - த. சாயுச்சிய பதவியாவதென்ன?

மா - ஆ. ஆ ஆ குண்டையனே! நானுமில்லை நீயுமில்லை நாமரூபந் தானுமில்லை, தானுந்தானுயிருக்கும் சாயுச்சியம். அந்த சாயுச்சியமாவது விராட் விஸ்வப்ரம்மத்தில் ஐக்கியமாம்.

ஜீ வ சி ரு ட் டி.

23.—ப - த. ஆண்பெண் உற்பத்தி பேதமாவதென்ன?

மா - ஆ. ஆண்பெண் உற்பத்தி பேதமாவது:—மாதவிடாஆனபின்பு சு-அ-௧0-௧௨-௧௪-௧௬ - இவ்விரட்டித்த நாள்களில் கற்பந்தரித்தால் ஆணாகவும், ஐந்து முதல் ஒற்றைப்பட்ட நாட்களில் தரிப்பது பெண்ணாகவும் உற்பவமாம். இதன்றியில் இடைகலை பாயுமாகில் பெண்; பிங்கலை பாயுமாகில் ஆண்; சுழிமுனை சொக்குமாகில் அலி, அல்லது சூனியம். மேலும் புணர்ந்தவுடன் இடதுபக்கம் படுப்பாளாகில் பெண், வலதுபக்கம் படுப்பாளாகில் ஆண், மல்லாந்து படுப்பாளாகில் இரட்டைப் பிள்ளைகள் அல்லது பூச்சியமென்று மநுஸ்மிருதியிற் சொல்லுகின்றது.

24.—ப - த. விஸ்வப்ரம்மத்தின் நிலையாவதென்ன?

மா - ஆ. அளவிடப்படாத சமுத்திரத்தினிடத்து அலை - நுரை - திவலை - குமிழிகளைத் தோன்றச்செய்து மறுபடியும் அந்தச் சமுத்திரத்தில் தானே யொடுக்கிக்கொள்வ தெவ்வாறோ! அவ்வாறே அண்டபுவன சராசரங்களையும் படைத்து மாயா சொரூபதேக ஆன்மகோடிகள் யாவும் ஒன்றென் றறிந்தொடுங்கும் உணர்வே விராட் விஸ்வப்ரம்ம நிலையென்னப்படும்.

வியாசன் உற்பத்தி.

25.—ப - த. ஓ மார்க்கசகாய ஆசாரி! "வியாசோநாராயணோ ஹரீ" என்னும் வாக்கியப் பிரகாரம் நாராயணனே என் குருசுவாமியாகிய வியாசபகவானாய் அவதரித்து, நான்கு வேதங்களைச் சிக்கறுத்துப் பதினெண் புராணங்களை உற்பவஞ் செய்தனரென்பது மெய்மையல்லவோ?

மா - அ. பஞ்சாங்கம் குண்டையனே! உமக்குரிய குலஞ்கிய அந்த வேதவியாசரின் உற்பவம் அறிந்திலேயோ! அதை நான் சுருதிப் பிரமாணமாக அறிவிக்கின்றேன். அஃதாவது:— ஊர்வசி என்னும் தாசிவயிற்றில் பிறந்தவன் வசிஷ்டமுனி; வசிஷ்டமுனிக்கும் சக்கிலிச்சிக்கும் பிறந்தவன் சத்திமுனி; சத்திமுனிக்கும் புலைச்சிக்கும் பிறந்தவன் பராசாமுனி; பராசரமுனிக்கும் மீன் வாணிச்சிக்கும் பிறந்தவன் வியாசமுனி. இந்த வியாசமுனி அக்கியானத்தைக் கியானமாகவும், கியானத்தை அக்கியானமாகவும், அமூர்தத்தை விஷமாகவும், விஷத்தை அமூர்தமாகவும் செய்யத்தக்க தந்திர இந்திரஜால முடையவன். இந்தவியாசன் ஆதியில் விஸ்வப்ரம்ம குலத்தாரையடுத்து வேதாகம புராணங்களைப் படித்து (குப்பை உயர்ந்தது கோபுரந் தாழ்ந்தது) என்னும் பழமொழிக்கிணங்க விப்பிரசீல வியாசனென்னும் சிறப்புப் பெயரைப் பெற்று, வேதாகம புராணங்களைத் தன்னொத்த குலத்தாருக்குப் போதித்து, வியவகாரம் பேசியவர்களை வாதித்து, (தன்னினந் தன்னைக்காக்கும் வேலி பயிரைக்காக்கும்) என்பதுபோ லாகிவிட்டது மல்லாமல் தனக்கு வேதம் ஓதிவைத்த விஸ்வப்ரம்மகுலத்தாரைப் பகைத்துச் சகலருந் தன்னை நகைத்து, குருத்துரோகி யென்று சொல்லும் பெயரை வகித்து, ஆதியான ஐந்துவேதங்களை நான்கு வேதங்களாகவும், பஞ்சமுகப்ரம்மாவை நான்முகப்ரம்மாவென்றும், பஞ்சமூர்த்திகளை திரிமூர்த்திகளென்றும், பழமையாகிய பதினெண்புராணக் கருத்துகளையும் மாற்றித் திரிமூர்த்திகளை இகழ்ந்தும், சில இடங்களிற்புகழ்ந்தும், தன் மதங்கோடலெனமகிழ்ந்தும், ரஸாபாஸம் பண்ணிவிட்டதுமல்லாமல் நான்காசிரமக்கிரமத்தையும், நான்குவர்ண ஒழுக்கத்தையும், சமயபேதமில்லாத மார்க்கத்தையும், சாதிபேதமில்லாத ஊக்கத்தையும், தத்துவபோத உத்தமநோக்கத்தையுங் கெடுத்துப் பலவித மித்திரபேதங்களினால் சுயம்பு விராட் விஸ்வப்ரம்மத்தைத் தொழவொட்டாமற் றடுத்து உன்தெய்வம் சிறிது என்தெய்வம் பெரிதென்று இவ்வாறு உலகம் வாதுசெய்ய பேதப்படுத்திக் கெடுத்து ஒருவர்க்கொருவர் போஜனப்பிரதி போஜன மில்லாமலும், கொள்வன கொடுப்பன வில்லாமலுங் கெடுத்து விரோதப்படுத்தித் தானுந் தன்னினத்தாரும் வாழ்ந்துவந்தார்கள்.

இந்த வியாசன் தாயாகிய மச்சகெந்தி யென்னும் பரிமள கந்தியை இரண்டாவது சந்தனுராஜன் கலியாணம் பண்ணிக் கொண்டு அவளிடத்தில் சித்திராங்கதன் - விசித்திரவீரியன் என்னும் இரண்டு பிள்ளைகள்பிறந்து சிலநாளைக்குப் பின்பு சந்ததியில்லாம லிறந்தபோது விசித்திரவீரியன் பெண்சாதிகளான அம்பிகை-அம்பாலிகையான மூண்டைச்சிகளை வியாசன் புணர்ந்து திருதராட்டிரன்-பாண்டுவென்பவர்களைப் பெற்றுனென்று பாரதத்திற் சொல்லியிருக்கின்றது. இந்த வியாசன் கைம்பெண்களைப் புணருவதற்கெண்ணியோ பதினெண்புராணமுதலிய நூல்களிலும் கெர்ப்பாதானமென்று சொல்லியிருக்கிறுன்.

இந்த வியாசன் வம்மிசமுதலானதும் கலியுகம்பிறந்த வெகுகாலத்திற்குப் பிறகு பலவித மாதருக்கும் பிறந்திருக்க இவனெப்படித் துவாபரயுகத்தி லிருந்ததாகவும், தான் பாண்டுவம்மிசக் கைம்பெண்களைச் சேர்ந்து குலவிருத்திசெய்ததாகவும் கற்பித்திருக்கிற பொய்க்கதைகளை ஒருபோதும் நம்பமாட்டார்கள். காலப்புரட்டன் கட்டிய கட்டுக்கதைகளை அவன் குலமாயிருக்கிற குண்டையனே! கவனமாய்க்கேள். அந்தவியாசன் அக்காலத்தி லிருந்த அரசர்களைச் சாலவித்தையினுலே ஏமாற்றித் தன்வசப்படுந் தந்திரமியற்றிச் சதுர்யுகங்களிலுந் தானேயிருந்து வர்ணுசிரம தருமங்களை வகுத்த மஹாரிஷியென்று போற்றிவணங்கி வாழ்த்தும்படி செய்துக்கொண்டு ஆதியாயிருந்த மனு - மய - துவஷ்ட - சில்பி - விஸ்வக்கிய என்னும் இவ்வைந்து ப்ரம்மாக்களையும் மாற்றிப்போட வேணுமென்று தாங்களே மஹாரிஷிகளாயிருந்து காலக்கியான கணிதங்களைச் சொல்லுங் காரியஸ்தாரிகளென்று கலங்கா வுலகத்தைக் கலக்கிவிட்டார்.

தேவர்களுற்பத்தி.

26.—ப - சு. ஓ மார்க்கசகாய ஆசாரி! எமது வியாசபகவான் திரிமூர்த்திகளையு மெந்தப்புராணத்தி லிகழ்ந்திருக்கின்றுர்?

மா - ஆ. ஓ பஞ்சாங்கங் குண்டையனே! சிவபுராணத்தில்,

ஆதிசக்தி மயம்பீஜம் பீஜசக்தி மயம்சிவ:
சிவசக்தி மயம்விஷ்ணு சர்வம்விஷ்ணு மயம்ஜகத்.

ఆదిశ క్తిమయంబీజం బీజశ క్తిమయంశివః
శివశ క్తిమయంవిష్ణు సర్వంవిష్ణుమయంజగత్.

(இதன்கருத்து) ஆதிசக்தியினிடத்திலிருந்து ஒருபீஜம் பிறந்தது, அதனுடைய வல்லமையினாலே சிவன்பிறந்தான், சிவனிடத்தில் விஷ்ணுபிறந்தான், அவ்விஷ்ணுமயம் சர்வலோக முழுதுமென்றிருப்பதினால் சிவன் விஷ்ணுவுக்குத் தகப்பனல்லவோ?

மமயோனிர்மஹத்ப்ரம்ஹ தஸ்மின்கற்பேகதாம்யஹம்.
మమయోనిర్మహత్బ్రహ్మ తస్మిన్గర్భందధామ్యహం॥

(இதன்கருத்து) என் யோனியில் மஹாப்ரம்மம், அதிலிருந்து நான் உருவாக்கி விடுகிறேனென்பதாம்.

மச்சபுராணம்.

குணேப்யக்ஷோப்யமாணேப்ய: த்ரயோதேவாபிஜக்ஞிரே
ஏகமூர்த்திர்த்ரயோபாகா ப்ரம்மாவிஷ்ணுமஹேஸ்வர:.
గుణేభ్యక్షోభ్యమాణేభ్యః త్రయోదేవాభిజజ్ఞిరే।
ఏకమూర్తిత్రయోభాగాబ్రహ్మవిష్ణుమహేశ్వరాః।

(இதன்கருத்து) ராஜச - தாமச - சாத்வீக குணங்களினால் ஆதிமூர்த்தியும், அந்த ஏகமூர்த்தியினால் திரிமூர்த்திகளும் தோன்றியதென்பது.

கேளும்; ப - குண்டையனே! இவ்விரண்டு சாஸ்திரங்களில் ஒன்றில் ஏகமூர்த்தியானவர் ஆதியிலே யாதொருகுணமும் இல்லாமல் ஏகமாயிருந்தாரென்றும், மற்றொரு சாஸ்திரத்தில் முக்குணங்களுள்ளவரானார் என்றுஞ் சொல்லியிருப்பதினாலே, அநேக ஆக்ஷேபனைகளுக் கிடமாயிருக்கின்றதே! அஃதெப்படி யென்பீரோ? அந்தமூர்த்தி ஒரு குணமுமில்லாதவரென்றால் அவருடைய பரத்துவமகத்துவத்திற்குக் குறைவும், அவருடைய பூரணதன்மைக்குப் பின்னமும் ஆகிறதல்லவோ! ஏனென்றால் ஒருசாஸ்திரம் நிர்க்குணரென்றும், மற்றொருசாஸ்திரம் முக்குணரென்றுஞ் சொன்னால் மகாபேதமல்லவா! ஆகையால் இதையோசித்தால் தெரியலாம்.

மச்சபுராணம் இந்த ஆதிமூர்த்திக்குரிய திரிகுணாத்துமாவின் உற்பத்தி காரணங்களைக் குறித்துச் சொல்லியிருக்கிற சுலோகங்களை உமக்கு விவரிக்கவேண்டுமாகில், அவைகள் அநேகமாயிருப்பதால் மற்றப்புராணங்களில் இருக்கிற வழுக்களிற்

சிலதைமாத்திரம் இங்கே சுருக்கிக்காட்டுவேன். அவைகளில் ஒருபுராணத்திலே ஆதிசக்தியினின்று இந்தத் திரிமூர்த்திகள் தோன்றினார்களென்றும், அந்த ஆதிசக்தி இவர்களை மோகித்துத் தனக்கே இவர்களைப் புருஷர்களாகப் பாவித்துக்கொண்டாளென்றும், பாகவதத்திலும் இன்னுஞ்சில புராணங்களிலும் விஷ்ணுவினுடைய நாபியிலே ஒருதாமரை தோன்றி அதிலிருந்து ப்ரம்மா உற்பத்தியானானென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அது எப்படியென்றால்: ஆதியிலே ப்ரம்மா முந்தி தண்ணீரைச் சிருஷ்டித்துத் தன்னுடைய விந்தை அந்தத்தண்ணீரிலே விட்டார். அது முட்டையாகி மிதந்தது, அந்தமுட்டையை முக்கண்ணனாகிய சிவன்தோன்றி உடைத்தான். அந்தக்ஷணமே குற்றமில்லாத பஞ்சபூதங்களும் உண்டாயினவாம்.

மற்றொரு புராணத்திலோ! ஆதிசக்தியிலிருந்து ஒருவித்து உண்டாகி அதிலிருந்து சிவன் தோன்றினாரென்றும், மச்சபுராணத்திலோ! ப்ரம்மாவிலிருந்து சிவன்தோன்றினாரென்றும், இன்னம் இப்படிப் பலவிதஞ் சொல்லியிருப்பதால் எது மெய் எதுபொய் என்பதை யார் கிரகிக்கக்கூடும்? இதினால் சகலமும் பொய்யென்றே தெளிவாய் விளங்குகின்றது.

ததோசிருஜத்வாமதேவம் திரிபுண்ட்ரவரதாரிணம்.

తతోసృజద్వామదేవం త్రిపుండ్రవరధారిణం.

(இதன்கருத்தாவது) ப்ரம்மம் திரிபுண்டரதாரியென்கிற வாமதேவனை உண்டாக்கினானென்பதே.

நாரதபுராணத்தில் நாராயணனுடைய வலதுபக்கத்திலிருந்து ப்ரம்மாதோன்றினாரென்றும், இடதுபக்கத்திலிருந்து விஷ்ணு தோன்றினாரென்றும், நடுவிலிருந்து சிவன் தோன்றினாரென்றும் சொல்லியிருக்கின்றது.

இலிங்கபுராணத்தில் இவ்வுலக அண்டத்திலிருந்து சிவனைவன் ரூபீகரித்துப் பிறகு தனது இடதுபக்கத்திலிருந்து விஷ்ணு லக்ஷ்மி என்பவர்களையும் தனது வலதுபக்கத்திலிருந்து ப்ரம்மா சரஸ்வதி என்பவர்களையும் உண்டாக்கினானென்றுஞ் சொல்லியிருக்கின்றது.

மேற்சொன்ன லிங்கபுராணத்தில் மற்றொருபக்கத்தில் ப்ரம்மா சிருஷ்டிக்கிரியை முடிக்கச் சக்தியில்லாமல் கண்ணீர்விட்டழுதா னென்றும், அந்தக் கண்ணீர்களில் ருத்திரன் தோன்றி அந்த சிருஷ்டிக்கிரியையைத் தானும் முடிக்கக்கூடாமல் வருந்துவதை அவன் தகப்பனாகிய ப்ரம்மாகண்டு அவனுக்குத்துணை செய்ததாகவுஞ் சொல்லியிருக்கின்றது.

மார்க்கண்டபுராணத்தில் லட்சுமியிலிருந்து விஷ்ணுவும், காளியிலிருந்து சிவனும், சரஸ்வதியிலிருந்து ப்ரம்மாவும் தோன்றினார்களென்றுஞ் சொல்லியிருக்கின்றது.

வராகபுராணத்தில் திரிமூர்த்திகளிலிருந்து சக்தி தோன்றி அந்தசக்தியிலிருந்து லட்சுமி, காளி, சரஸ்வதி மூன்றுபெயினர்களென்றும், இப்படிப்பலவிதமாகச்சொல்லிய பலபுராணங்களில் எதை மெய்யென்று சொல்லக்கூடும்? இவ்வித மாறுபாடுகள் அநேகம் வியாசன்முதலான ரிஷிகள் தங்கள் புராணங்களிற் சற்பனை செய்திருக்கிறபடியால் இதைமெய்யென்று நம்புகிறவர்களைப் பேதைகளென்றே சொல்லப்படும்.

பரத்துவம்.

சர்வவ்யாபீஸபகவான் தஸ்மாத்ஸர்வகதஸ்சிவ:

సర్వవ్యాపీశభగవాన్ తస్మాత్సర్వగతశ్శివః॥

(இதன்கருத்து) அந்த பகவானென்னப்பட்ட சிவன் சர்வவியாபியாகி எவ்விடத்திலும் நிறைந்திருக்கின்றான் என்பது பாகவதத்தில் இதற்கு முழுவிரோதமா யிருக்கின்ற சுலோகத்தைக் கேளும்.

பவவ்ரததராயேசா ஏசதாம்சமநோவ்ரத:
பாஷாண்டின:தேபவந்து சஸ்சாஸ்திரபரிபந்தன:
முமுக்ஷுவோகோரரூபாந த்வாபூதபதிர்நதா:
நாராயணா:களாசாந்தா பஜந்திஹ்நசூயவ:.

భవవ్రతదరాయేచాయేచతాంసమనోవ్రతః
పాషాండినఃతేభవంతుసశ్చాస్త్రపరిబంధనః
ముముక్షువోఘోరరూపానత్వాభూతపతిర్నధాః
నారాయణఃకళాశ్శాంతాభజంతిహ్యనసూయవః॥.

(இதன்கருத்து.) சிவனைப் பூசித்துத் தியானிப்பவர்களைப் பாஷாண்ட பதிதர்களென்றும், மோக்ஷம் அடையார்களென்றும், நாராயணனைத் தியானிப்பவர்கள் மோக்ஷமடைவார்களென்றும், சிவனை இகழ்ந்து ஹரியைப்புகழ்ந்து பேசியிருக்கின்றது, பதுமபுராணத்தில் சிவனை இகழ்ந்திருக்கின்றது.

விஷ்ணுதர்ஸனமாத்ரேண சிவத்ரோஹப்ரஜாயதே
சிவத்ரோஹநசந்தேஹோ நரகம்யாந்த்திதாருணம்
தஸ்மாத்தத்விஷ்ணுநாமாபி நவக்தவ்யம்கதாசந.

విష్ణుదర్శనమాత్రేణ శివద్రోహప్రజాయతే
శివద్రోహనసందేహో నరకంయాంతిదారుణం
తస్మాత్తద్విష్ణునామాపినవక్తవ్యంకదాచన॥

(இதன்கருத்து.) சிவத்துரோகஞ்செய்து விஷ்ணுவைத்தரிசித்தால் சிவன் உக்கிரங்கொண்டு நரகத்துக்காளாக்குவான்; ஆதலால் விஷ்ணுவினுடைய பெயரை உச்சரிக்கலாகாதென்பதாம்.

இதிலே சிவனைப்புகழ்ந்தும் விஷ்ணுவை இகழ்ந்தும் இருக்கின்றதல்லவா? மேற்படி புராணத்தில் நிந்தையாகிய தந்திரவிந்தை சுலோகத்தைக் கேளும்.

யஸ்துநாராணய்ம்தேவம் ப்ரம்ஹருத்ராதிதேவதா:
சமமந்வைர்வீரோக்ஷேதா ஸபாஷாண்டிபவேத்பதா
திரிமந்த்ரபகுமோக்தேநா ப்ரம்ஹணய்யேப்யவைஷ்ணவ:
நஸ்பஷ்டவ்யாநவக்தவ்யா நத்ருஷ்டவ்யா:கதாசந.

యస్తునారాయణందేవం బ్రహ్మరుద్రాదిదేవతాః
సమమన్యైర్నిరీక్షేతా సపాషాండిభవేత్పదా
త్రిమంత్రబహుమోక్తేనా బ్రహ్మణయ్యేభ్యవైష్ణవాః
నస్పష్టవ్యానవక్తవ్యానదృష్టవ్యాఃకదాచన॥

(இதன்கருத்து.) எவனொருவன் ப்ரம்மா உருத்திரனுக்கு நாராயணனைச் சமமென்று சொல்லுகின்றானோ, அவன் என்றென்றைக்கும் பதிதபாஷாண்டனுவானென்றும், லட்சுமிமந்திரஞ் செபிக்கின்ற விஷ்ணுபக்தாளாகிய வேதியர்களைத் தூஷிக்காமல் ப்ரம்மக்கியானமுள்ளவரென்று போற்றி வாழ்த்திப் பணியவேண்டியது. கேட்டீரோ! பஞ்சாங்கங் குண்டையரே!

சிவனை நீக்கி விஷ்ணுவைப்போற்றிப் புகழவேண்டுமென்றும், விஷ்ணுவை நீக்கிச் சிவனைத் துதிக்கவேண்டுமென்றும், விஷ்ணு பக்தாளைக் கண்ணாலே பார்க்கவும், தொடவும் படாதென்றும், பேசவுங்கூடாதென்றும், அவரவர்களுக்கேற்றபடிப் புராணங்களைக் கற்பித்த உங்கள் முன்னோர்களின் புத்தியீனத்தை என்னென்று புகல்வேன்.

அந்யதேவம்பரத்வேநா வதந்த்யக்ஞானமோஹிதா:
நாராயணஜகந்நாதா தேவபாஷாண்டிநஸ்மிருதா:

అన్యదేవంపరత్వేనావదంత్యజ్ఞానమోహితాః
నారాయణజగన్నాథాద్దేవపాషాండినస్మృతాః

(இதன்கருத்து) ஜகநாதனுயிருக்கிற நாராயணனைப் பார்க்கிலும் முக்கியமாயிருக்கிற அந்நியதெய்வமும் உண்டென்று சொல்லுகிறவர்கள் அறிவீனரும், வஞ்சகரும், பதிதபாஷாண்டரும், பாவிகளுமாவார்கள்.

ரமதேவோமஹாதேவோ விஜ்ஞேயஸ்துமஹேஸ்வர:
நதஸ்மாத்பரமங்கஸ்சித்பதம்சமதிகம்யதே.

రమదేవోమహాదేవోవిజ్ఞేయస్తుమహేశ్వరః
నతస్మాత్పరమంకశ్చిత్పదంసమధిగమ్యతే.

(இதன்கருத்து.) மஹேஸ்வரனுக்கு மேலானவஸ்து ஒன்றுமில்லை யென்பதாம். இதிலே சிவனைப் புகழ்ந்திருக்கின்றது.

வாசுதேவம்பரித்யஜ்ஞ யேன்யதேவமுபாசதே
த்ருஷிதோஜாந்ஹவீதீறே கூபம்நகதிதுர்மதி:

వాసుదేవంపరిత్యజ్యయేన్యదేవముపాసతే
తృషితోజాహ్నవీతీరేకూపంనఖతిదుర్మతిః.

(இதன்கருத்து.) வாசுதேவனென்னப்பட்ட விஷ்ணுவை விட்டுவிட்டு அந்நியதேவனை வணங்குகிறவன் தாகமடைந்த மதியீனனுவான். அவன் கங்கைநதியின்கரையில் உட்கார்ந்து கிணத்தைவெட்டுகிறவனுக்குச் சமானமாக எண்ணப்படுவானென்பதாம், இதிலே விஷ்ணுவைப் புகழ்ந்திருக்கின்றது.

இவ்விதமாகவே உங்கள் புராணங்களெல்லாம் சிவனை இகழ்ந்தும் விஷ்ணுவைப்புகழ்ந்து மிருப்பதால் ஒன்றுக்கொன்று

ஒவ்வாமல் மாறுபாடா யிருப்பதென்பதற்கு மேற்சொல்லிய சிலதிருஷ்டாந்தமே போதுமென்றெண்ணுகிறேன்.

ஆனால் பாகவதமுதலிய புராணங்களில் விஷ்ணுவின் நாபிகமலத்தில் ப்ரம்மா உற்பத்தியானனென்றும், வேறு சிலநூல்களில் ஆதிசக்தி உண்டாகிய ஒருவிதத்தில் விஷ்ணுவின் பிதாவாகிய சிவன் உற்பத்தியானனென்றும், மச்சபுராணத்தில் ருத்திரன் ப்ரம்மாவால் சிருஷ்டிக்கப்பட்டானென்றும், நாரதீயபுராணத்தில் நாராயணனுடைய வலப்புறத்தில் ப்ரம்மாவும், இடப்புறத்தில் விஷ்ணுவும், மத்தியத்தில் சிவனுந் தோன்றினார்களென்றும், லிங்கபுராணத்தில் பிரமாண்டத்திலே ருத்திரன் ரூபிகரமாய்த் தோன்றித் தனது இடப்புறத்தில் விஷ்ணுவையும் இலக்குமியையும், தனது வலப்புறத்தில் ப்ரம்மாவையும் சரஸ்வதியையுந் தோன்றப்பண்ணினனென்றும், மேற்படி புராணத்திற்றானே வேறோரிடத்திலே ப்ரம்மா தனது சிருஷ்டிகிர்த்தியம் மந்தப்பட்டதி னிமித்தியம் விட்ட பெருமூச்சிலே பிறந்த ருத்திரன் அந்தத்தொழிலை நடப்பித்தும் அதுமீளவும் மந்தப்பட்டதுகண்டு ப்ரம்மா அந்தத்தொழிலை மீண்டுந் தானே நடப்பித்தானென்றும், மார்க்கண்டேய புராணத்தில் மகாலக்குமியிலிருந்து ப்ரம்மாவும், மகாகாளியிலிருந்து ருத்திரனும், மகாசரஸ்வதியிலிருந்து விஷ்ணுவும் தோன்றினார்களென்றும், வராகபுராணத்தில் ப்ரம்மா விஷ்ணு ருத்திரனென்ற மூவர்களிலும் ஒருசக்தியுண்டாகி மூன்றுபகுதிபட்டு லக்குமி-சரஸ்வதி-காளி யென்பவர்களுண்டானார்களென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது மெய்யல்லவோ?

ஆமென்றாற் கேளுங் குண்டையரே! பாகவதம், மார்க்கண்டேயபுராணம், வராகபுராணம், நாரதீயபுராணம், லிங்கபுராணமுதலான புராணங்களிலுள்ள பேதாபேதமான கட்டுக்கதை புராணங்களை யெல்லாம் பொய்யென்று உமக்கும் மற்றவர்களுக்கும் விசதமாய் விளங்குதற்கு யாதொரு சந்தேகமில்லையல்லவா?

திரிமூர்த்திமுதலான தேவர்கள்
நடபடிக்கை.

27.—தத்தாத்திரி மெய்ச்சகத்தில் அத்திரிமகாமுனியினுடைய ஸ்திரீ அநசூயையென்பவளைக் கற்பழிக்கத் திரிமூர்த்திகள் பிராமணவேடமாகவந்து அவளைப் பிச்சைகேட்டதாயும், அவள் பிச்சையிடவந்தபோது இவர்கள் அந்தப்பிச்சை வேண்டாம், நிர்வாணத்தோடே வந்துநின்றால் அதுவே எங்களுக்கு இச்சையான பிச்சையென்று சொன்னார்களென்றும், அந்த அநசூயை மிகவும் வெட்கி இவர்களைக் குழந்தைகளாகச் சபித்தாளென்றும், அப்போது நாரதமகாமுனி அந்த அநசூயையைமிகவும் வேண்டிக்கொண்டு சாபத்தைத்தீர்த்துத் திரிமூர்த்திகளைப் போகச்சொன்னாரென்றும்,

இந்தத் திரிமூர்த்திகள் பிருகுரிஷி பெண்சாதி நாகவல்லியைக் கற்பழிக்க எத்தனித்ததால் அவள் திரிமூர்த்திகளை குழந்தைகளாகச் சபித்து உருட்டிப்புரட்டி ஓர் மூலையில் தள்ளிவிட்டாளென்றும்,

ஆதியில் தேவர்களுக்கு அமுதளிக்க மோகினி ரூபமெடுத்த விஷ்ணுவைச் சிவன்கண்டு விரகங்கொண்டு மோகிக்க அரிஹரபுத்திரன் ஐயனார் பிறந்தாரென்றும்,

தாருகாவனத்து ரிஷிபத்தினிகளைக் கற்பழிக்கச் சிவன் புருடரூபமும், விஷ்ணு ஸ்திரீரூபமுமாகி ரிஷிகள் தபசைக்கெடுத்து ரிஷிபத்தினிகளின் கற்பையழிக்க, இருவரில் ரிஷிசாபத்தால் சிவனுடைய சிசினமற்றுப் போயிற்றென்றும்,

கண்டகியென்னும் வேசியின்பேரில் சொல்லியிருக்கிற சுலோகமாவது.

வேஸ்யாதரிசனம்புண்யம் ஸ்பர்ஸனம்பாபநாஸனம்
சும்பநம்சர்வதீர்த்தாஞம் மைதுனம்மோக்ஷசாதனம்.

వేశ్యాదరిశనంపుణ్యంస్పర్శనంపాపనాశనం
చుంబనంసర్వతీర్థానాం మైథునంమోక్షసాధనం

(இதன்கருத்தாவது.) வேசிகளைத்தரிசிக்கிறது புண்ணியம், அவர்களைத்தொடுகிறது பாபவிமோசனம், அதரபானஞ்செய்கி

றதாவது சகல தீர்த்தத்துக்குஞ் சமானம், மைதுனம் பண்ணு கிறதோ மோக்ஷத்தை அடையலாமென்பதாம். ஓய் பஞ்சாங் கங்குண்டையனே! இவ்வித அசுத்தமான வார்த்தைகளை ஜெ பிக்கும்படிச் சிலரை செய்கிறீரல்லவா?

தேவேந்திரன் நடபடிக்கை.

28.—தேவேந்திரன் கௌதமரிஷி பெண்சாதி அகலிகை யைக் கற்பழித்தானென்றும், கௌதமர் தேவேந்திரன் சிசின மற்றிடவும் அவன்தேகம் ஆயிரங்கண்ணாகவும் அகலியைக் கல் லாகவும் சபித்தாரென்றும், பின்பு தேவர்கள் ஆட்டின் சிசின த்தை அறுத்து ஒட்டிவைத்தார்களென்றும், அதினால் இந்திர னுக்கு மேஷாண்டனென்கிற பெயருண்டாயிற்றென்று சொல் லியிருக்கின்றதல்லவா?

அகலிகை தேவேந்திரனோடு விபசாரஞ் செய்தாளென்று ம், துரோபதை பஞ்சபாண்டவாளுக்குப் பாரியாயிருந்து கர்ண னையும் இச்சித்தாளென்றும், சீதையை இராவணன் எடுத்துக் கொண்டுபோன அபகீர்த்தியும், தாரை பிரகஸ்பதிக்கும் சந்திர னுக்கும் பாரியாளென்றும், மண்டோதரி ராவணன் பெண் சாதியென்றும், இப்படியாகக் கற்பழிந்த இவ்வைந்து ஸ்திரீ களையும் பஞ்சகன்னிகைகளென்று அந்தி சந்தியி லிவர்களை ஜெபித்துவரும்படி செய்ததந்திரம் பாமராளுக்குத் தெரியாம ற்போனாலும் பண்டிதாளுக்குத் தெரியாதா?

அகல்யாதுரௌபதீசீதா தாராமண்டோதரீஸ்ம்ருதா:
பஞ்சகன்யாஸ்மரேநித்யம் மஹாபாதகநாசனம்.

అహల్యాద్రౌపదీసీతా తారామండోదరీస్మృతాః
పంచకన్యాస్మరేనిత్యం మహాపాతకనాశనం.

(இதன்கருத்தாவது) அகலிகை, துரோபதை, சீதை, தா ரை, மண்டோதரி இந்த ஐந்து ஸ்திரீகளையும் நித்தியகாலமுந் துதித்து வருகிறவர்களுக்குச் சகலபாவங்களும் விமோசனமா கி விடுமென்பதாம். இவாளால் இகபரசாதக மடைவார்களா?

ப்ரம்மாவின் நடபடிக்கை.

29.—ப்ரம்மாவானவர் தான் சிருஷ்டித்த ஊர்வசியை யிச்சித்துக் கலைமான் ரூபமெடுத்துக் காட்டில் சம்போகஞ்செய்த குற்றத்திற்குப் ப்ரம்மாவின் ஐந்து சிரசில் ஒருசிரசை ஈஸ்வரன் துண்டித்தானென்றும், அந்தச்சிரசுதான் குருநாதனுகத்திரிகின்றதென்றும், அதுதான் மிருகசீரிட நக்ஷத்திரமென்றும்,

ப்ரம்மா, திலோர்த்தமையைச் சிருஷ்டித்து அவள் ரூபத்தைக்கண்டு மோகித்தபோது, அவள் தேவேந்திரன் கோட்டையிற்புகுந்திடக் காவற்காரர் கோட்டைக் கதவைச்சாற்ற அந்தக் கதவிலே ப்ரம்மாவினுடைய விந்து கலிதமாகிவிழ அதில் அகஸ்தியன் பிறந்தானென்றும்,

சுப்பிரமணியர் உற்பத்தி.

30.—சிவன் சப்தரிஷிகளுடைய பெண்டுகளைக் கற்பழித்ததில் அருந்ததிதவிர மற்ற ஆறுபேர் சிவனுக்குப்பெற்ற பிள்ளைகளைத்தங்கள் புருடருக்குப்பயந்து சிவனையே இட்டுக்கொண்டு போகச் சொன்னார்களென்றும், சிவன் இட்டுவந்ததை உமாமஹேஸ்வரி நோக்கி இந்தப்பிள்ளைகள் ஆரென்று கேட்க ; உன் மக்களென்றுசொல்ல, உமையவள் ஆறுபிள்ளைகளையும் அன்புடனே சேர்த்தெடுக்க, அந்த ஆறுபிள்ளைகள் உடலும் காலும் ஒன்றாய்ப்பொருந்தி தலையும் கையும் பொருந்தாததனால் ஆறுமுகமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

கிருஷ்ணன் நடபடிக்கை.

31.—ஆயர்பாடியில் அசோதையென்பவள் கிருஷ்ணனை வளர்த்தாளென்றும், அவன் பத்து வயதிற்றானே பால் 'தயிர் வெண்ணெய் திருடினதைக்கண்டு மாடுமேய்க்கக் காட்டில் துரத்திவிட்டாளென்றும்,

அவன் மாடுகளை மலையடிவாரத்தில் மேய்க்கையில் காளிங்கனென்கிற சர்ப்பம் காளிந்தி நதிக்கரையில் நாககன்னிகளை

வைத்துக் கொண்டிருந்தது. அதைக்கொன்று அந்தக்கன்னி கைகளின் கற்பை யழித்தபின்பு கலியாணஞ் செய்துக்கொண்டானென்றும்,

கிருஷ்ணன் தன் மாமன் கஞ்சனுடைய மந்திரிமார்பெண்கள் ஒன்பதுபேர் குளத்திலே ஸ்நானம் பண்ணும்போது அவாளுடைய வஸ்திரங்களை யெடுத்துப் புன்னைமரத்தில் கட்டிவைத்துக்கொண்டதை அவாள் கேட்கத் தன்னிஷ்டப்படி நடந்தபின் கொடுத்தானென்றும்,

கிருஷ்ணன் ஆயர்பாடியில் பதினாயிரம் ஸ்திரீகள் தங்கள் புருடர்களே தங்களை அனுபவிக்கிறார்க ளென்றெண்ணும்படி மாயலீலைகள் செய்தானென்றும்,

கிருஷ்ணன் துரியோதனனிடத்தில் தூதுபோனபோது விதுரன் வில்லையொடித்துக் குந்தியம்மாளுக்குக் கர்னன்முதற் பிள்ளை யென்றும், துரியோதனனுக்கு அசுவத்தாமர் பேரில் சந்தேகம் வரும்படிச் செய்தானென்றும்,

கிருஷ்ணன் ஒருவேடன் அம்பினு லிறந்து ஆற்றங்கரையில் தகனஞ்செய்யப்பட்டபோது வெள்ள மடித்துக்கொண்டு போன முண்டசொரூபத்தை ஜெகந்நாதத்தில் வணங்குகிறார்களென்றும் சொல்லியிருக்கின்றது.

32.—விஷ்ணு பத்தவதாரமெடுத்த சுலோகம்.

மத்ஸ்ய:கூர்மவராகஸ்ச நாரஸிம்மஸ்சவாமந:
ராமோராமஸ்யராமஸ்ச பௌத்த:கலிகமேகவசா.

మత్స్యః కూర్మ వరాహశ్చ నారసింహశ్చ వామనః
రామోరామస్యరామశ్చ బౌద్ధః కలికమేవచ.

விஷ்ணு பத்தவதாரத்தில் மச்சாவதாரம் வேதத்தை யெடுத்துக் கொண்டுபோன சோமுகாசுரனை வென்று வேதத்தைக்கொண்டுவந்தா ரென்றும்,

கூர்மாவதாரமெடுத்து அமுர்தங் கடையும்போது தான் மோகினி அவதாரமாய் அரக்கரை மோசஞ்செய்தபோது சிவன் அந்தமோகினியைக்கண்டு மோகித்ததினால் ஜனனதேவனும் வைரவதேவனும் பிறந்தார்களென்றும்,

வராக அவதாரத்தில் கனகாக்ஷனென்கிற அசுரன் பூமியைப்பாயாய்ச்சுருட்டிப் பாதாளத்திற் கொண்டுபோனபோது அவனையழித்துப் பூமியை மேலாகக் கொண்டுவந்தாரென்றும்,

நரசிங்க அவதாரத்தில் இரணியனையழித்துப் பிரகலாதனை ரக்ஷித்தாரென்றும்,

வாமன அவதாரத்தில் மாபலிச்சக்கிரவர்த்தியை மூன்றடிமண்கேட்டு அவன் சிரசின்மீதில் தன் பாதத்தைவைத்துப் பாதாளத்திலழுந்தச் செய்தாரென்றும்,

பரசுராமஅவதாரத்தில் க்ஷத்திரியனை ஜெமதக்கினிமுதலானவரைக்கொன்று தன்னைப்பெற்ற ரேணுகையையும் சகோதரர்களையுஞ் சங்கரித்தாரென்றும்,

இராம அவதாரத்தில் இராவணனைக்கொன்று சீதையைச் சிறையொழித்தாரென்றும்,

பல்ராம அவதாரத்தில் கலப்பை ஆயுதத்தால் அரக்கரை அழித்தாரென்றும்,

பௌத்த அவதாரத்தில் காசியில் சைவசமயத்தை விட்டு பௌத்த சமயத்தை யடைய முன் காசியை யாண்டிருந்த திவோதனனை நீக்கிச் சிவனையாளும்படிச் செய்து பூலோகத்தை யுண்டாக்கின கடவுளுமில்லை சிருஷ்டிகர்த்தருமில்லை யென்று போதித்தாரென்றும்,

இனி கற்கி அவதாரம் எடுக்கப்போகிறாரென்றும் பதினெண்புராணங்களில் வியாசன் முதலானவர்கள் செய்த கட்டுக்கதைகள் ஒருவிதமல்ல; பலவிதமாகையால் அதுகளை ஆதியோடந்தமாய்ப் பதினெண் புராணங்களில் பார்வையிட்டால் யாவருக்கும் நன்றாய்த் தெரியலாம்.

காந்தக் கற்கோட்டை.

33.—ப - த. ஆ ஆ மார்க்கசகாய ஆசாரி ! வியாசபகவான் காந்தக்கற்கோட்டையை அழித்த காரணமென்ன ?

மா - ஆ. மாந்தை யென்றொரு பட்டணத்தில் காந்தக்கற்கோட்டை யொன்று கட்டிக்கொண்டு அதில் விஸ்வ ப்ரம்ம

வம்மிசத்தார் ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்கும் பஞ்சகிருத்தியத்தினால் அவாளவாளுக்கு வேண்டியதை சம்ரக்ஷணை செய்துவருநாளில்,

வியாசனென்பவன் பர்த்துலஹரி ராஜனுக்கும் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாருக்கும் மித்திரபேதஞ்செய்து காந்தக்கற்கோட்டையைப் பிடிக்கும்படிச் செய்தான்.

பர்த்துலஹரிராஜன் ரதகஜ துரகபதாதிகளுடன் வந்து யுத்தஞ்செய்வதைக்கண்டு விஸ்வப்ரம்ம வம்சத்தார் பகற்காலத்தில் சூரியகாந்தத்தைக் காட்டியும், இராக்காலத்தில் சந்திரகாந்தத்தைக் காட்டியும் வந்த ரதகஜதுரகபதாதிகளை அதோகதியாக்குவதைக் கண்டு அரசன் துயரப்படும்போது வியாசன் ஸ்திரீவிஷயத்தினால் அந்தக்கோட்டையைப் பிடிக்கவேணுமென்று சிலவிபசாரிகளை ஆடையாபரண வலங்கிருதர்களாய் அந்தக் கோட்டைக்கருகில் வாசம்பண்ணும்படியாயும், கோட்டையின் மர்மத்தை யறியும்படியாயும், விஸ்வப்ரம்ம வம்மிசத்தாரைத் தங்கள் கைவசப்படுத்திவரும்படிச் செய்தான்.

அதிலொரு நாயகி தன்னருகில் நித்திரைசெய்யும் நாயகனை எழுப்பிக் கோட்டை பற்றிக்கொண்டதென்று கூக்குரலிட்டாள், புருஷன் திடுக்கிட்டு (விநாசகாலே விபரீதபுத்தி) என்கிற சுலோகப்படிக்கு வரகுவைக்கோலைப்போட்டு கொளுத்திவிட்டார்களோவென்கிற சத்தத்துடனே எழுந்திருக்க அந்தநாயகி தன்னெண்ணங் கைவல்யமாச்சுதென்று நகைத்து உமது நித்திரையினுடைய மிருதுவைப் பார்க்கப் பரிகாசஞ்செய்தேனென்று உடலுமுயிரும்போல் ஆலிங்கனஞ்செய்துக்கொண்டாள். அந்தநாயகன் நமது கோட்டைக்கு நாசகாலம் வந்து சம்பவித்ததென்று யோசித்துக்கொண்டு பிராதகாலத்தில் கோட்டைக்குட்சென்று அங்குள்ள பெரியவாளை நமஸ்கரித்து நமது கோட்டை பற்றிக்கொள்ளக் கனவுகண்டேனென்றான்.

அந்தப் பெரியவாள் காலக்கியான முதலான சாஸ்திரங்களை ஆராய்ந்து நேரிடப்போகிற காரணம் இன்னதென்றறிந்து கனவுகண்டேனென்று வந்துசொன்ன துன்மார்க்கனை நீங்கள்

பரஸ்திரீகளை நேசித்து நமது கோட்டைக்குத் தீங்குவரும்படிச் செய்தீர்கள்; உங்களுக்கு இன்றுமுதலாக ஸுவர்ண உற்பத்தி சூத்திரமுதலானதும் விருத்தியினமாய்ப் போகக்கடவதென்று சபித்து அவர்களையும் அவர்களுடன் சிநேகித்தவர்கள், அதற்குச் சம்மதித்தவர்கள், எண்ணங்கொண்டவர்கள் முதலிய யாவரையும் பிதுர்க்கள்-சகோதரர்கள்-புத்திரர்கள் முதலியவர்களோடு குடும்பசமேதராய் அவ்விடத்திலேதானே விட்டு, அதற்கருகே சீனு வென்றொரு பட்டணமுண்டுபண்ணி அதிற் சத்துருக்கள் பிரவேசிக்கவொட்டாமல் விசாலமாக மதிற்சுவர் நிருமித்துக் குடும்பசமேதராய் அதிற்போய்ச் சேர்ந்தார்கள்.

பர்த்துலஹரிராஜன் வரகு வைக்கோலைக் கொண்டுவந்து கோட்டையைச் சுற்றிப்போட்டுக் கொளுத்தக் கோட்டை குழைந்து போனதைக்கண்டு அதற்குள் ளிருந்தவர்கள் குடும்பசமேதராய்ச் சுரங்கத்தின் வழியாய்க் காட்டில்வந்து பர்த்துலஹரிராஜன் பட்டணமுழுதும் அழிந்துபோகும்படி ஆப்த்திற்காதாரமாகிய அதர்வண வேதத்தில் விளங்காநின்ற மாரண பீஜாக்ஷரத்தை யுச்சரித்து அவன் பட்டணமுழுதும் பாழாகச் செய்தார்கள்.

அந்தக் காந்தக்கற்கோட்டை யழிந்தபின்பு வேதசாஸ்திர மரியாதைகளெல்லாம் நசித்தது, வர்ணாசிரம தருமங்களும்-யாகாதி கர்மங்களும் முழுகிப்போச்சுது, ஸ்திரீகளுடைய பதிவிரதாதருமங்கள் பாழாய்ப்போச்சுது, சத்தியம் பறந்தது, அசத்தியம் நிறைந்தது, இயமநியமாதிகளும் - மைத்திரியாதிகளும்-சமதமாதிகளும் - ஆத்துமவிசாரணை - தபசுகளும் அழிந்தது, மாதமும்மாரி பொழிவதும் மறைந்தது, தேவலோகமும் பூலோகமும் கலங்கிப் பெரியோர்களுடைய சித்தம் பம்பரம்போல் சுழன்று லோகமெல்லாம் தோஷகர்மங்கள் வர்த்திச்சுது, வேதசாஸ்திர புராணாதி சிரவணங்களு மில்லாமல் தானதர்மம் - பச்சாத்தாபம் - இரக்கமுதலான நற்குணங்களில்லாமற் புலை - கொலை - களவு - கள் - காம முதலான துற்குணமுடையவர்க ளானார்கள்.

விஸ்வப்ரம்ம வம்மிசத்தார் தங்களுடைய ஸ்வயரூபங்களை மாற்றிக்கொண்டு அந்தந்த தேசாசாரப்படி வேஷங்களைப் போட்டுக்கொண்டு அறிவுடையோர்களும் அறிந்துகொள்வதற் கருமையாகவும், மாசுபடிந்த மாணிக்கம்போலவும், நீறுபூத்த நெருப்புப்போலவும், தர்மராஜா முதலான பஞ்சபாண்டவர்கள் அக்கியாதவாசஞ் செய்தபோது எப்படி உருமறைந்திருந்தார்களோ அப்படி உருமறைந்து பெருமையும்-ஒழுக்கமும்-இயற்கையும் மறைத்துக்கொண்டு ஐம்பத்தாறு தேசங்கள்முதலான பலதீவுகளிலும் அந்தந்த தேசபாஷையும், அந்தந்ததேசாசாரமும் உடையவராய் உலகசம்ரக்ஷணை செய்துக்கொண்டு வருகிறார்கள்.

தாணிமகாராஜன்.

34.—ப - கு. ஓ மார்க்கசகாய ஆசாரி! தாணிமகாராஜனுக்கும் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாருக்கும் நடந்த விரோதமென்ன?

மா - ஆ. ஐம்பத்தாறு தேசத்தரசர்கள் முதலானவர்களுக்கும் விஸ்வப்ரம்ம வம்மிசம் பஞ்சகிர்த்தியத்தால் நிர்மித்த சாமான்களைத் தேசாதிசெட்டிகள் மூலமாய் வியாபாரஞ்செய்து வருநாளில்; வியாசன் தாணிமகாராஜனை விஸ்வ ப்ரம்ம வம்மிசத்தாரிடத்தில் தீர்வை கேழ்க்கும்படி மித்திரபேதஞ் செய்தான். விஸ்வப்ரம்ம வம்மிசத்தார் இந்த ஐம்பத்தாறுதேசத்தரசர்களுக்கும் நாங்கள் தீர்வைகொடுக்கிறதில்லையென்றார்கள். அரசன் நீங்கள் தீர்வை கொடாதிருக்கிறது என்னகாரணமென்றான்? இந்த ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாராலே பஞ்சகிர்த்தியமும் நடத்திக்கொள்ளுகிற படியால் அந்தப் பஞ்சகிர்த்தியத்தினால் அரசர்கள் அரசாளுவதினாலும், அந்தந்த ராஜசபையில் ஆசாரிபீடமாயிருந்து மனுநீதி வழுவாமல் அரசுசெலுத்தவும், காலக்கியானப்படி திரிகாலவர்த்தமானங்களும் சொல்லுகிறபடியால் எங்களிடத்தில் தீர்வைவாங்க நீதியில்லை; ஆகையால் நாங்கள் நூதன்மாய் தீர்வைகேட்கிறது மனுநீதிக்கு விரோதமென்று சொன்னார்கள்; அரசன் அவாளையும் அவாளுடைய சாமான்களையும் சிறைச்சாலையில் வைத்தான்.

தேசாயி பெத்தண்ணராஜுகாரு.

35. தாணிமகாராஜன் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாரையும், அவாளுடைய பஞ்சகிர்த்தியசாமான்களையும் சிறைச்சாலையில் வைத்ததைக் கேள்விப்பட்ட தேசாதிபதிகளில் பெத்தண்ண ராசுகாரு தங்களுடைய ரதகஜதுரகபதாதி முதலான சேனைக ளுடன் வந்து தரணிமகாராஜன் சேனைகளை எதிர்த்து யுத்தஞ் செய்யும்போது திக்குமுக்கிட்டு திடுக்கிட்டோடுவதை தரணி மகாராஜன் கண்டு உக்கிரங்கொண்டு சிறைச்சாலையிலிருக்கும் துவஷ்டாசாரியை நீங்கள் தீர்வை கொடாவிட்டால் உங்களை சிரச்சேதஞ் செய்வேனென்றான், அதற்கு துவஷ்டாசாரி எங் களைச் சிரச்சேதஞ்செய்தால் உன் சிரம் அதோகதிக்கு ஆளாகு மென்று சொல்ல, அரசன் தன் கையிற் பற்றியிருந்த உடை வாளால் துவஷ்டாசாரி சிரசைத் துண்டித்தான்.

அந்தச் சிரமானது "கஞ்சி பிஞ்சுக்த சுங்கம் லேதேன்று" காமாக்ஷியம்மை பாதத்தில் முறையிட, அந்தக்காமாக்ஷியம்மை மாகாளி ரூபமாய் உக்கிரங்கொண்டு தரணிமகாராஜன் குடலை ப்பிடுங்கி அருகில் வாழ்த்துகின்ற தேசாதிசெட்டிகழுத்தில் ம லராரமென்று மாலையாய்ப்போட்டு அந்த அரசன் தோலையுரி த்துக் கம்பிளியாய்க் கொடுத்து விஸ்வப்ரம்ம வம்மிசத்தாரை நோக்கி நீங்களிருவரும் என்னைத் தியானித்து வந்தால் உங்க ளிஷ்டசித்தி நிறைவேறுமென்று அநுக்கிரகஞ்செய்தாள்.

அந்தக்குடல்தான் தேசாதிசெட்டி கழுத்தில் மலராரமெ ன்று வளையல்கோர்த்து மாலையாய் விளங்குகின்றது. அந்த அரசன் சர்மமானது கம்பிளியாகவும், அந்தக்கம்பிளி சத்து ருவின் தோலாகையால் நாளையும் தேசாதிசெட்டிகள் தங்கள் இடதுகால் பெருவிரலால் எடுப்பார்களேயொழிய வலதுகால் பெருவிரலினுலாவது அல்லது கையினுலாவது கீழேயிருக்கிற கம்பிளியை யெடுக்கிறதில்லையென்று யாவருக்கும் நன்றாய்த் தெரியுமல்லவா!

காளிங்கராஜன்.

36.—ப-து. ஒய் மார்க்கசஹாயஆசாரி! உங்களை இடங்கையென்றும் மற்ற ஜாதிகளெல்லாம் வலங்கை யென்றுஞ் சொல்லவேண்டிய காரணமென்ன ?

மா - ஆ. பரிமளச்சோழனென்னும் அரசனிடத்தில் வியாசன் தங்கள் வம்மிசத்தாரை அரசர் சபையில் ஆசாரிபீடமாய் வைத்தால் காலக்கியானப்படித் திரிகால வர்த்தமானங்களும் சொல்லுவார்களென்றான். அரசன் திரிகால வர்த்தமானங்களும் பஞ்சகிருத்தியங்களும் அறிந்திருக்கிற விஸ்வப்ரம்ம வம்மிசம் இருக்கிறதென்று வியாசனை அனுப்பிவிட்டார்.

அந்தவியாசன் மேற்சொல்லிய பரிமளச்சோழன் பரகதியடைந்தபின்பு அவர்சகோதரன் பண்புரிச்சோழனுக்குப் பட்டமாகி அரசு செலுத்தும் நாளில் தன்னினத்தை ஆசாரி பீடமாய் வைக்க எத்தனித்தான்.

பண்புரிச்சோழன் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாராலே பஞ்சகிருத்தியமும் நடப்பதினால் உலகசம்ரக்ஷணை நடந்துவருகின்றது, அப்படியிருக்க ஜோகிஜங்கமரைப்போல் யாசஞ்செய்யும் கிராமபாச்சகாளாகிய உங்களினத்தை ஆசாரிபீடமாய் வைப்பது உலகத்தாருக்கு யாதொரு பிரயோஜனமுமில்லை.

ஆதியில் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாரை நீங்கள் அடுத்து வேதாகமங்களைக் கற்று அவர்களாலே மந்திர உபதேசங்களைப் பெற்று அவாளுக்குத் துரோகஞ்செய்ய நினைக்கிறபடியால் உங்களைத்தான் குருத்துரோகியென்று சொல்லப்படுமென்றனுப்பிவிட்டார்.

இந்த வியாசன் பரிமளச்சோழனுக்குப் பிறந்த வைப்பாட்டிகுமாரன் காளிங்கனுக்கும் பண்புரிச்சோழனுக்குஞ் செய்த மித்திரபேதமாவது: இந்தப்பட்டம் நியாயமாய் உன்தகப்பன் உனக்குக் கட்டவேண்டியது, அப்படியிருக்க தன்சகோதரனுகிய பண்புரிச்சோழனுக்குப் பட்டங்கட்டினான், ஆனால் நம்முடைய தமையன் நமக்குப் பட்டங் கட்டினபடியால் நாம்

காளிங்கனுக்கு இளவரசுபட்டங் கட்டவேண்டுமென்றெண்ணுமல், தன்பிள்ளை பாலனைச் சோழனுக்குப் பட்டங்கட்ட யோசித்தான். நான் காளிங்கராஜனுக்குப் பட்டங்கட்டவேண்டியது, உன்பிள்ளைக்குக் கட்டுவது மனுநீதியல்லவென்றேன்.

உன்சிறியதகப்பன் விஸ்வப்ரம்மவம்மிசத்தில் ஆசாரிபீடமாயிருக்கிறவனுடன் நான் உனக்கு இளவரசுபட்டங் கட்டச் சொல்லுகிறே னென்ருன். அதற்கவன் விபசாரி பிள்ளைக்கு இளவரசுபட்டங் கட்டச்சொன்னரே ! இவர்தான் ப்ரம்மரிஷியென் றேளிதஞ்செய்தான்.

ஆகையால அந்தப்பட்டம் உனக்கு வருகிற வாரத்துக்குள் யாகன் கட்டுவதற்கு யாதொரு சந்தேகமில்லை, ஆனல் இந்தக் கம்மாளன் உன்னை வைப்பாட்டி பிள்ளையென்று இழிவாய்ச்சொன்னபடியால் இந்தக்கம்மாளனை இவ்வுலக மிகழும்படி நான் செய்வதற்கு யாதொரு சந்தேகமில்லையென்ருன்.

கல்வியறிவில்லாத காளிங்கன் இந்தத் துன்மார்க்கனை வியாசனை நோக்கி எனக்கே ராஜபட்டாபிஷேகம் ஆகத்தக்கத் தந்திரஞ் செய்வாயாகில், அப்போது இந்தக் கம்மாளனைச் சபையைவிட்டு நீக்கி நமதுமரபில் உற்பத்தியான ரிஷிகளை ஆசாரிபீடமாக வைத்துக்கொள்வதற்கு யாதொரு தடையிராதென்ருன்.

வியாசனுனவன் பண்புரிச்சோழன் வேட்டையாடப்போகும்போது நீயுங் கூடப்போய்த் தருணம்பார்த்து தனித்திருக்குங் காலத்தில் ஒரேவெட்டாய் வெட்டிப்போட்டு வந்தால், அப்போது நானே முன்னின்று உனக்குப் பட்டங்கட்டிவைப்பேனென்ருன். காளிங்கன் வியாசன்சொற்படி பண்புரிச்சோழன் வேட்டையாடப்போய் சேனைகளைவிட்டுத் தனியாய் அரசன் தாகசாந்திசெய்யத் தடாகத்தைக்கண்டு தாகசாந்தி செய்யும்போது, காளிங்கன் அரசனை ஒரேவெட்டாய் வெட்டிக்குளத்தில் தள்ளிவிட்டுச் சேனைகளிடம்வந்து அரசனைப் புலியடித்துக்கொன்றுவிட்டதென்று ஓலமிட்டழுதான், சேனைகள் மெய்

யென்று நம்பி மிகவுந் துயரமாய்ப் பட்டணம் வந்து சேர்ந்தார்கள்.

வியாசன் பண்புரிச்சோழன் இறந்ததைக் கேட்டு காட்டிலிருந்த தன்வம்மிசத்தாராகிய ரிஷிக்கூட்டங்களை நாட்டில் வரவழைத்து மங்களவாத்தியமுழங்கக் காளிங்கனுக்கு ராஜபட்டங்கட்டிவைத்தான்.

காளிங்கன் அரசாளும் நாளில் வியாசனுக்குச் சொன்ன வாக்குத்தப்பாமல் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாரை இன்றுமுதல் பஞ்சகிருத்திய மாத்திரம் நீங்கள் செய்யவேண்டியது. பஞ்சாங்கம், புரோகிதம், சுபசோபனம், அபரவிஷய கர்மாதிகள், தேவாலயபூசை முதலானதும் எங்கள் ரிஷிகளைக்கொண்டே நாங்கள் செய்துக்கொள்வோ மென்றான்.

விஸ்வப்ரம்ம வம்மிசத்தார் நாங்கள்செய்யும் பஞ்சகிர்த்தியமும் அந்தரிஷிகளைக்கொண்டே தாங்கள் செய்துகொள்ளலா மென்றார்கள்.

உழுது பயிரிடும் உழவர் முதலான தொழிலாளிகள் ஒருவாரம் வரையில் பஞ்சகிர்த்தியம் நடவாதிருந்ததினால் ஜீவனஞ்செய்வதற் கில்லாமல் மிகவும் வருத்தப்படும்போது வியாசனென்பவன் குடிகளைத் தன்வசப்படுத்தி அரசனைச் சார்ந்தவர்களெல்லாம் வலங்கையென்றும் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாரை இடங்கையென்றும் ஏற்படுத்தி விஸ்வப்ரம்ம வம்மிசத்தார் வீட்டில் இராநின்ற வேதாகமங்களைக் கொள்ளையிடுவதும் கொலைசெய்வது மானார்கள்.

தேசாதிபதி ஜெயவீரராசுகாரு.

37. அக்காலத்தில் அடுத்ததேசத்தில் அரசுசெலுத்தும் தேசாதிபதியாகிய ஜெயவீரராசுகாரு தன் சேனையுடன் வந்து கொள்ளையடிக்கும் துன்மார்க்கரைக் கண்டதுண்டமாய் வெட்டி ராஜபட்டங் கட்டிக்கொண்ட காளிங்கனென்னுங் கயவனைக் கைப்பிடியாய்ப் பிடித்து, நீ அந்தத் துன்மார்க்கனான வியாசன் சொற்படி சிறியதகப்பனைக் கொலைசெய்தாய், இரண்டாவது

விஸ்வப்ரம்ம வம்மிசத்தார்செய்யும் பஞ்சகிர்த்தியத்தால் சகல உயிரும் உயிர்வாழ்வது உனக்கு நன்முய்த்தெரியும், அப்படிக்கிருக்க நீ எப்படி அவாளை நீக்கி ஜோகி ஜங்கமர்களான வியாசன் முதலானவாளை ஆசாரிபீடமாய் வைத்துக்கொள்ளலாம்? அப்படிவைத்துக்கொண்டபடியால் அந்தத் துன்மார்க்கனுன வியாசன் விஸ்வப்ரம்ம வம்மிசத்தை இடங்கையென்றும், மற்ற சகலஜாதிகளும் வலங்கையென்றும் பிரித்து விஸ்வப்ரம்ம வம்மிசத்தார் வீட்டில் கொள்ளையிடவும் கொலைசெய்யவுமானீர்கள்.

இந்தத் துன்மார்க்கனுன வியாசன் சொற்படி நடந்த உன்னைக் கண்டிக்கவேண்டியது ராஜநீதி, அந்தராஜநீதி நான் உனக்குச்செய்யவேண்டிய கடமையென்று காளிங்கனைத் தன் வாளால் வெட்டி வியாசன் முதலானவர்களைத் தேடும்போது வியாசன் முதலானவர்கள் விஸ்வப்ரம்ம வம்மிசத்தார் வீட்டில் அகப்பட்டவளாயில் வேதாகமசாஸ்திரங்களைச் சுற்றிக்கொண்டுத் தலைமறைவாய் ஓடிப்போய்விட்டார்கள்.

மேற்சொல்லிய பண்புரிச்சோழன் குமாரன் பாலனைச் சோழனுக்கு மங்களவாத்திய முழங்க ராஜபட்டங்கட்டி முன்போல் விஸ்வப்ரம்ம வம்மிசத்தை ஆசாரிபீடமாய் மனுநீதிவழுவாமல் அரசுசெலுத்தும்படி ஜெயவீரராஜன் செய்து தான் பட்டணம்போய்ச் சேர்ந்தான்.

விஸ்வப்ரம்ம வம்மிசத்தார் மனுநீதிவழுவாமல் வேதசாஸ்திரவிதி - வர்ணுசிரம தர்மங்களும் நடத்திவருவதினுல் ஆஸ்திகாளென்றும்; விப்பிராள் மாறுபாடாய் நடக்கிறபடியினுலே நாஸ்திகா ளென்றும் சாஸ்திர சித்தாந்தமானபடியினுல் ; விப்பிராளுக்கு துன்மார்க்காள் உதவியால் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாரை வஞ்சித்தபடியால் உலகத்திலே வேதசாஸ்திர விதிகளும், யாகாதிகர்மங்களும், இயமநியமாதி ஆசாரங்களும், சமதமாதி சற்குணங்களும், மைத்திரியாதி சுகுணங்களும், தீர்த்தஸ்தல தான விரத உபவாசாதி தர்மங்களும் நஷ்டப்படுத்திப் போட்டபடியினுல் லோகத்திலே அவாளவா ளிஷ்டப்படி வர்ணுசிரமதர்மமில்லாமல் வேதாகமங்கள் சூத்திராள் வாசிக்கக்

கூடாதென்று விப்பிராள் சொன்னதை மெய்யென்று நம்பினார்கள்.

வியாசன் மித்திரபேதஞ்செய்தது.

38. விஸ்வப்ரம்ம வம்மிசத்தாருக்கும் அரசர்கள் முதலானவர்களுக்கும் உள்ள ஒருமையை வியாசன் கண்டு தன்மரபில் வந்த விப்பிரர்களும் விப்பிரரிஷிகளும் மேன்மையடையும்படி எண்ணியும்முடியாமல் கடைசியில் அவர்களுக்கு வசியம்-பேதனம் - மோகனம் - தம்பனம் - ஆக்ரிஷணம் - உச்சாடனம்-வித்துவேஷணம் - மாரணம் என்னும் அஷ்டகர்மங்களில், வசியமாவது ஸ்திரீ புருஷர்களையாவது அரசனையாவது விலங்கு முதலிய பிராணிகளையாவது மந்திரசாதனையால் வஜீகரப்படுத்துகையாம். பேதனம் இருவருக்கு ஊடாக யிருக்குஞ் சிநேகத்தை இயந்திரங்களாற் பிரித்தலாம். மோகனம் மந்திரவலிமையால் மயங்கச்செய்தலாம். தம்பனம் மந்திரஜெபத்தினல் ஆணைசெய்து தடுத்தலாம். ஆக்ரிஷணம் மந்திரோச்சாரணையினல் அழைத்தலாம். உச்சாடனம் தேவதையை உருவேற்றலாம். வித்துவேஷணம் மந்திரவலியால் படைவெல்லுகையாம். மாரணம் மந்திரயெந்திரமூலமாகப் பில்லி சூனிய மியற்றிக் கொலைபுரிதலாம். இவைகளால் ஒருவருக்கொருவ ரொருமையில்லாமல் விரோதப்படும்படி சாஸ்திரபுராண கற்பனைகளாலும் கலகமே செய்துவிட்டான்.

வியாசன் காமற்றது.

39. இந்த வியாசன் உடலு முயிருமாயிருந்த விஸ்வப்ரம்ம வம்மிசத்தாருக்கும் மற்ற அரசர் முதலானவர்களுக்குங் கலகஞ்செய்துவிட்டுத் தான்தலைமறைவாய் ஓடிவதைக்காசியில் ப்ரம்மரிஷிகள் கண்டு ஆதியில் அண்டபுவன சராசரங்களையும் படைத்த பஞ்சமுக சாம்ராட் விஸ்வப்ரம்மாவாலே யாவரும் இகபரசாதந மடையும்படி அளித்த ஐந்துவேதத்தை நான்கு வேதமென்றும், பஞ்சமுகப்ரம்மாவை நான்முக ப்ரம்மாவென்றும், பஞ்சமூர்த்திகளை திரிமூர்த்திகளென்றும், ஜாதிபேதம்,

சமயபேதமில்லாதிருந்ததைப் பலஜாதியென்றும், பலசமயமென்றும், ஒருவருக்கொருவர் ஒருமையில்லாமல் பதினெண்புராணக் கட்டுக்கதைகளைச்செய்து இவ்வுலகத்தைக் கெடுத்தாயே! இதனால்உனக்கு இசபரசாதநமுண்டாவென்று இகழ்ந்தார்கள்.

வியாசன் ப்ரம்மரிஷிகளை நோக்கி என்விதி அனுகூலமான காலத்தில் யான்செய்த பதினெண்புராணமும் பயன்படும், பிரதிகூலமான காலத்தில் இகழப்படும், ஆகையால் இந்நாட்டில் அவமானப்படுவதை விட இனி வனவாசத்தைப் பார்க்கிலும் சுகமில்லையென்றான்.

ப்ரம்மரிஷிகள் நீர்பேசுவதிற் சமர்த்தனென்றெங்களுக்குத்தெரியும், வேதாகம புராணங்கள் விராட் விஸ்வப்ரம்மமே பரத்துவமன்றி மற்றொரு பரத்துவமில்லை யென்று சொல்லியிருக்க, அதை மறைத்து மனம்போனபடி துன்மார்க்கத்தால் பலவிதமாய் உளறியிருக்கிறபடியால் எவ்விதத்திலும் நீ துன்பத்துக்காளாவாயென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை, ஆனால் சாதுக்கள் எங்கேபோனாலும் மரியாதைகிடைக்கும், நீயோவென்றால் திரிபுரங்களையெரித்த தீயைப்போலவும், அனேகவிதமான அவுஷதங்களாலேயும் தீராக் கொடியரோகம்போலவும், திரிமூர்த்தி முதலான தேவர்களைத் தாஷித்த பழியானது நாள்தோறும் வளர்ந்து வருவதற்கு யாதொரு சந்தேகமில்லை. உம்முடைய சாமபேத தானதண்ட மென்னும் சதுர்வித உபாயத்தால் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாரை ஒருவரும் மதியாமல் உங்கள் வம்மிசத்தை மதிக்கும்படி நீசெய்த தந்திர மந்திர எந்திரமானது ஒருக்காலும் பயன்படமாட்டாது.

ஒருவேளை இவ்வுலகத்தின் மாயையற்றுத் தேவரீர் காட்டிக்குப் போனாலும் அவ்விடத்தில் வாசமாயிராநின்ற வேடர்-வில்லியர்-கள்ளர்-மறவர்-குறவர்-இருளர் முதலானவாள் உங்களினங்களாகையால் அவ்விடத்திலும் பேதாபேதங்களை ஏற்படுத்தி ஒருவருக்கொருவர் மித்திரபேதஞ் செய்தால் பிராண்சங்கடம் நேரிடும். ஆகையால் தாங்கள் பாரதமுதலான பதினெண்புராணக் கட்டுக்கதைகள் செய்த பண்டிதராகையால்

தங்களுக்குத் தெரியாத ஆலோசனை நாங்களென்ன சொல்லப் போகிறோம்.

அந்த ப்ரம்மசபையில் விளங்காநின்ற ஒரு வீரமுஷ்டியானவர் எழுந்து ஐயா வியாசபகவானே! எனக்கு மற்றொன்றும் தாங்கள் போதிக்கவேண்டியதில்லை; திரிமூர்த்திகளில் எந்தமூர்த்தியை நான் தியானிக்கவேண்டுமென்றான்.

வியாசன் ஸ்ரீவிஷ்ணுவே தெய்வமன்றி மற்றொரு தெய்வமில்லை யென்றான்.

வீரமுஷ்டி விஷ்ணுவே தெய்வமென்றீர்; மற்றொரு தெய்வமில்லையென்றீர். அப்படிக்கிருக்க, நீங்கள் அந்த விஷ்ணுவைக்கூட பற்பலவிதமாய் உமது பதினெண்புராணங்களில் தூஷித்த காரணமென்ன ?

வியாசன் அந்த வீரமுஷ்டியை நோக்கி வலதுகரத்தை ஆகாயத்தில் தூக்கி அந்த விஷ்ணுவே தெய்வமென்று சத்தியமாய்ச் சொன்னேனென்றான். அந்த வீரமுஷ்டி நீ சத்தியமாய்ச் சொல்லியிருந்தால் அந்த விஷ்ணுவை நீ யேன் தூஷித்தாயென்று தன்கரத்திற் பற்றியிருந்த உடைவாளால் வியாசன் வலதுகரத்தை மணிக்கட்டுவரையிற் கண்டித்தான். அந்தவலதுகரந்தான் வீரமுஷ்டிகளின் விருதுக்கொடிகளில் அடையாளமாக விளங்குகின்றது.

கலியுக அதர்மம்.

40.—ப-தூ. ஓ மார்க்கசஹாய ஆசாரி! எங்கள் முன்னோர்கள் பூதபவுஷியத் வர்த்தமானங்களைப்பற்றி முன்னமே எழுதியிருக்கிறார்கள், அந்தவுண்மை கமலாலயபுராணத்தில் சதுர்த்தராகிய சூத்திரர் கலியுகத்திலே வேதமோதி வேதபோதகராவார்கள், வைசியர்கள் வேதநூல்களின் விதிப்படி நடவாமல் அதிகலாபஞ் சம்பாதிக்கப் பொருள் வாங்கிக்கொண்டு திரிவார்கள்.

க்ஷத்திரியரும் வேதமுதலிய நூல்நெறி வழுவி கொடுந்திறை வாங்குவார்கள், தயாளசிந்தை யுடையோராய் உலகத்தை

அரசாள மாட்டார்கள், குருவைச் சீஷன் பகைப்பான், அரசரை அமைச்சர்கள் விரோதிப்பார்கள், அடிமை எஜமானுடனே கடுஞ்சொற்பேசி பகைசாதிப்பான், மனைவி தன் கணவனை வெறுப்பாள், குலத்திற்பிறந்த பெண்ணும் பிள்ளைகளும் மாதாபிதாவின் சொற்கேளார்கள், சூத்திராள் பிராமணர் முதலிய மேற்குலத்தோருக்கு எழுந்து தெண்டஞ் செய்யாதிருப்பார்கள், இராஜ அதிகாரம்பெற்று அரசாக்ஷி செய்வார்கள், சிலர் சிவமுத்திரையைத் தரித்துக்கொண்டு ப்ரம்மாவையும் விஷ்ணுவையும் நிந்தனைசெய்வார்கள், சிலர் விஷ்ணுமுத்திரையைத் தரித்துக்கொண்டு சிவநிந்தை செய்வார்கள், சிலர் அருகசமயிகளாகி வேதவிதிகளை அபத்தமென் றிகழ்ச்சிசெய்வார்கள், மேகம் அரிதாக மழைபெய்யும், பூமி விளைவு குன்றிப்போம்; குறைவாகவிளையும், நீசஜாதியார் முறைமைதவறி மற்றவர்களுக்குத் துன்பமே செய்வார்கள்.

மா - ஆ.—ஓ பஞ்சாங்கங் குண்டையனே! கலியுகத்தில் நடக்கப்போகிற அதர்மங்களைப்பற்றித் தெரியலானேன். ஆனுலிதற்குமுன் மூன்றுயுக தர்மத்தையும் விளம்பும்படி கோருகின்றேன்.

கிரேதாயுக தர்மம்.

41.—ப - கு. ஓ மார்க்கசஹாய ஆசாரி! கிரேதாயுகத்திலேயுள்ளவர்கள் ஆசையுங்கேடுமற்றவர்கள். சிவபூசை வேதவொழுக்கம் இவைகளில் வழுவார்கள். மோக்ஷத்தையே நாடுவார்களேயன்றி நரகத்தை நாடுவதில்லை. ஸ்திரீ மலடியாவதில்லை, அவள் பெற்றபிள்ளை மரணத்தைக் காண்பதில்லை. வயோதிகத்தில் மரணமடைவதன்றி மத்தியில்மரிப்பதில்லை. மாதமும்மாரிபெய்து செல்வம் விருத்தியாகும். பூமியிலெங்கும் தரித்திரரில்லை. அரசர்கள் ஆறிலொரு கடமைவாங்கிக் குடிகளை ரக்ஷிப்பார்கள். போர்த்தொழில் புரிவதில்லை. ஒருவரும் தண்டனையடைவதில்லை. நால்வகை வருணத்தவரும் தங்கள் குலாசாரம் வழுவாமல் நடப்பார்கள். கலியுகத்தில் தர்மமில்லாமையாலும் இராஜநீதி யில்லாமையாலும் பகை சாதித்தல் முதலிய விரோதமுண்டாமென்று எங்கள் முன்னோர்கள் சொல்லியபடி நீங்

கள் புராணவிதிகளை விலக்கி வேதவிதிப்படி விவாகஞ்செய்ய எத்தனித்து உங்களிலேயே வாத்திமார்களை நியமகஞ்செய்திருக்கிறீர்கள், இந்த உண்மைக்கென்ன சொல்லுகிறாய்?

யுகதர்ம வித்தியாசம்.

42.—மா-ஆ. ஓ பஞ்சாங்கக்குண்டையனே! இதுகளை உண்மையென்று சொல்லுவதெப்படி? உங்கள் ஜீவனவிர்த்திக்காக உங்கள் முன்னோர்கள் கற்பித்த கட்டுக்கதைகளே யல்லாமல் வேறல்ல; அது எப்படியென்றால், பாரதம் கலியுகத்திற்பாடியதாயிருக்க, மேலிடுங் கலிகாலமே யென்று விசேஷிப்பதென்ன? பாரதத்திற்குக் காரணரா யிருந்தவர்களும், அந்த யுத்தத்தை நடாத்தின கிருஷ்ணனுமே புன்மை நிகழ்த்தும் வஞ்சநெஞ்சராயிருக்கக் கலியுகத்தார் அப்படிப்பட்டவர்களா யிருப்பார்களென்பது என்னவிபரீதம்! கௌதமன் முதலிய ரிஷிகள் தவநெறியிற் பிறழ்ந்ததில்லையா? பராசர் வலைமகளைப் புணர்ந்ததும், பீமன் இடிம்பியை மணந்ததும், கிருஷ்ணன் கோபிகாஸ்திரீகளை வரைவின்றிப் புணர்ந்ததும், ஜாதிவரம்பழிந்து நீதிதவறியதல்லவா? சந்திரன் தனது குருபத்தினியைக் கவர்ந்ததும், இந்திரன் கௌதமரிஷி பத்தினியைக் கூடினதும் நீதிதவறல்லவா? விஷ்ணு பலகாலஞ்செய்த மித்திரபேதங்களும், சூரன்-ராவணன்-துரியோதனன் முதலியோர் தேவருக்கும் மனிதருக்கும் செய்த அநியாயங்க ளெல்லாம் வஞ்சகமல்லவா? அகலிகையும், ஏனைய பரஸ்திரீகளும் அவர்களுடனே போகம் பண்ணின தூர்த்தர்களும், ஸ்திரீ புருஷர்கள் கற்புநெறி தவறினவர்களல்லவா? விஷ்ணுபக்தனாகவும் - வியாசராகவும்-காசிபராகவும் அவதரித்து சமையபேதங்க ளியற்றினது வேதவிரோதமல்லவா? சூத்திரரும் வேதத்தைக் கற்பார்களென்பது அதிசயமா? இருக்கு வேதசாரமாகிய ஸ்தோத்திரப் பிரகரணங்கள் முன்னுகங்களிலே சூத்திரருக்கு வெளியாயிற்றென்று சொல்லியிருக்கவில்லையா? எசுர்வேத உபதேசங்கள் பரம்பியிருக்கவில்லையா? சாமவேதசாரமாகிய கூடஸ்த ப்ரம்மமென்பதைக்குறிக்கும் மகாவாக்கியப்பொருள் வெளிவந்ததில்லையா?

அதர்வணவேத மந்திரங்களைச் சூத்திரர் கற்றிருக்கவில்லையா? இவ்விதமாகவே கிரேதாயுகம்-திரேதாயுகம்-துவாபரயுகம் என்று சொல்லும் முன்னுகங்களிலேயே வேதம் நாலுவர்ணத்தவர்களுக்கும் வெளிவந்து கற்று அனுஷ்டிக்கப்பட்டதா யிருக்க, நான்காம் யுகமாகிய கலியுகத்தில் சூத்திரரும் அதைக் கற்பார்களென்று சொல்லும் உங்கள் தந்திரம் எப்பேர்க்கொத்தது?

அந்தணர்முதலிய மூற்குலத்தோர் மூவரும் தத்தமதுகுல தருமங்களையும், நீதிநெறிகளையும், ஆசாரங்களையும் வழுவிப் போவார்களென்று சொல்லில், அம்மூக்குலத்தவர்களுக்குள் அநேகர் முன்னுகங்களிலேயே வழுவிநடப்பார்களென்று உங்கள் விப்பிரகுலபுராண இதிஹாசங்களில் வேணசாக்ஷிகளிருக்க, நான்காம் யுகத்திலே மாத்திரம் வழுவிநடந்தார்களென்று கூறுவது மோசமல்லவா? இத்தனைத் தந்திரங்களும் நீங்கள் வயறுவளர்க்கும் பொருட்டேயாம் என்றறி.

தேவேந்திரன் தன்குருவாகிய பிரகஸ்பதியை அவமதித்தானென்றும், பிரமகற்பனைப்படி குருவாகக் கைக்கொண்ட விச்சுவவுருவனை யாகமுகத்திற் சூலாயுதத்தால் வதைத்தானென்றும், சந்திரன் தன் குருபத்தினியைக் கவர்ந்து அக்குருவுக்கு விரோதமாக யுத்தஞ் செய்தானென்றும், இரண்டாம் யுகமாகிய திரேதாயுகத்தில் சூரியகுலத்தரசனுகிய திரிச்சங்குமகாராஜன் தன்குருவாகிய வசிஷ்ட முனியுடனே எதிர்த்து வார்த்தையாடினுனென்றும், மூன்றும் யுகமாகிய துவாபரயுகத்திலே வீட்டுமாச்சாரியர் தனது குருவாகிய பரசுராமருடனே எதிர்த்துப் பத்துநாள் யுத்தஞ்செய்து அவரைமுறிய அடித்தானென்றும், பஞ்சபாண்டவர்கள் தங்கள் குருமாராகிய துரோணுசாரியர் கிருபாசாரியர்களுடன் பகைத்து யுத்தஞ்செய்தார்களென்றும், திருஷ்டத்தியும்நன் தன் குருவாகிய துரோணுச்சாரியரைக் கொலைசெய்தா னென்றும், ஜெனமேஜெய மஹாராஜன் வேதவியாசர்மேல் கோபங்கொண்டு அவரை ஏகதேசமாய்ப் பேசினுனென்றும், நீங்கள் செய்த புராணகாவியங்கள் முறையிட நான்காம் யுகத்திலே மாத்திரம் சீஷர் குருமாரைப் பகைப்பார்களென்று பேசுவது என்ன விவேகம்?

பிரகஸ்பதியின் மனைவியாகிய தாரை யென்பவள் சந்திரனுடனே விபசாரஞ்செய்து புதனைப் பெற்றாளென்றும், கௌதமமுனியின் மனைவியாகிய அகலிகை இந்திரனுடனே களவுப்புணர்ச்சிசெய்து கல்லாகச் சபிக்கப்பட்டாளென்றும், ஊர்வசியென்னும் தேவரம்பை அர்ச்சுனனுடனே களவிற்கூட வருந்திக்கேட்டும் அவன் அதற்கு உடன்படாததினால் அவனைப் பேடியாகச்சபித்தாளென்றும், இன்னும் இப்படி அநேகம் ஸ்திரீகள் முன்னுகங்களிலே பலருடைய ஸ்திரீகளாயிருந்தார்களென்று சொல்லப்பட்டிருக்க கலியுகத்தில் மாத்திரம் பெண்கள் சற்புநெறிதவறி நடப்பார்களென்பது என்ன விபரீதம்?

பிருகுரிஷி தன்னைப்பெற்ற மாதாவை வாளினாற் கொலைசெய்தாரென்றும், பரசுராமர் தாயைச் சிரச்சேதம் பண்ணினாரென்றும், பப்பரவாகன் தன் பிதாவாகிய அருச்சுனனைக் கொன்றானென்றும், அருச்சுனன் பிதாவாகிய இந்திரனுடனே எதிர்த்து யுத்தம்பண்ணினானென்றும், விஷ்ணு தான் பெற்ற பிள்ளைகளை அருச்சுனனைக்கொண்டு கொல்லுவித்தாரென்றும், ப்ரம்மதேவர் தன்மகனாகிய நாரதமுனியைச் சபித்தாரென்றும், வசிஷ்டமுனிவர் தான்பெற்ற பிள்ளைகள் நூறுபேரையும் சண்டாளராய்ப் போகும்படிச் சபித்தாரென்றும், இப்படியே முன்னுகங்களில் பிள்ளைகள் பிதா மாதாக்களுக்குக் கீழமையாதிருக்கக் கொலைபுரிந்தனரென்றும், சாபங்கொடுத்தனரென்றும் புராணங்களிற் கூறியிருக்க, கலியுகத்திலேமாத்திரம் அப்படி நடக்குமென்பது உண்மை யெனப்போமா? இவ்வாறாக உங்கள் விப்பிரகுலரிஷிகள் பதினெண் புராணங்களையும், மற்ற இதிஹாச சாஸ்திரங்களையும் உங்கள் சுயப்பிரயோசனத்திற்கும் சௌக்கியத்திற்கும் கற்பித்த கட்டுக்கதைகளை நாங்களனுசரிப்பது நீதியா? தர்மமா? எங்களாதி வேதமே உண்மையாகையால் அந்த வேதவிதிப்படி வழுவாது நடப்பது விஸ்வப்ரம்ம வம்சஸ்தருக்குரிய கடமையென்று திருஷ்டாந்தர தாஷ்டாந்தரமாய் வேதவிதியிருப்பதால் புராணோக்தப் பிரகாரம் ஒருக்காலும் நடக்கவொண்ணாது.

34.—மா-ஆ. ஓ மார்க்கசஹாய ஆசாரி! நீங்கள் விஸ்வப்ராம்ம வம்மிசமா? பஞ்சமசாதியல்லவா!

மா-ஆ. ஓ பஞ்சாங்கங் குண்டையனே! வேத சுருதிப் பிரமாணமாய்ப் பஞ்சமுக விஸ்வப்ரம்மாவால் பஞ்சகிர்த்திய த்திற்குந் தலைவராய் விளங்காநின்ற விஸ்வப்ரம்ம வம்மிசத்தாரை விஸ்வப்ராமணுளென்று வேதாகமம் முறையிடுவது நிச்சயம். கிராமபாச்சகளாகிய உங்களுக்கு வேதோக்தமேது? கர்மாதிகாரமில்லை. விஸ்வப்ராமணுளுக்கே அதர்வணவேதத்திலிருக்கிற பீஜாக்ஷரம் ஓம், அம், ஐம், ஊம், கிலியும், வீம், மௌம், சாம் இந்த பீஜாக்ஷரமும் காயத்திரி யென்னப்பட்டதில், உச - வது அக்ஷரத்தில் தகாரமெனச் சொல்லப்பட்ட அக்ஷரந்தான் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாருக்குக் கர்த்தவ்யம். இதன்றியில் தேவதைகளுக்கு துவஷ்டப்ரம்மா பஞ்சாங்கம், புரோகிதம் செய்ததினுல் தேவப்ராமணு ளென்றும், தேவர்களுக்கு ஆதிஉற்பவம், சைவம், வைஷ்ணவம் உண்டாகச்செய்தது எசுர்வேதம் இரண்டாவது அஷ்டகம் ஐந்தாவது பநசையில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதற்குச் சுருதிப்பிரமாணம் தேவர்களுக்கு த்வஷ்டப்ரம்மா புரோகிதஞ் செய்ததினுல் தேவப்ராமணுளென்றும், கர்மாதிகாரத்திற்குச் சிருஷ்டி கர்த்தாவாகையால் விஸ்வப்ராமணுளென்றும் நாமமாச்சுது. வேதோக்தமாய் கர்மாதிகாரம் விஸ்வப்ராமணுளுக் கிருக்க, அசேதனமாய்ப் பிறந்த கிராமபாச்சகளாகிய நீங்கள் புராணுேக்தமென்று கர்மங்கள் ஏற்படுத்திய வியாசன் முதலான ரிஷிவம்மிசத்தில் உற்பத்தியான உங்களுடைய வம்மிசபரம்பரையைக் கேள்.

அஃதாவது,

ருஷியஸ்ருங்கோம்ருகோஜாத: கௌசிகோகாதிநந்தந:
ஜம்புகோஜம்புகோத்பத்தி: கௌதமோகௌதசம்பவ:
வால்மீகோபரோத்பத்தி: அகஸ்தியகும்பசம்பவ:
வியாசோலுப்தசம்பூதோ வசிஷ்டாவூர்வசிசுத:
நாரதோப்சகிபுத்ரோ கௌண்டந்யோமுண்டகிசுத:
மதங்கஸ்யமதங்கஸ்யாத் மாண்டவ்யோமண்டுகிசுத:
சாங்க்யாசப்சகம்பூதோ கார்க்கேயோகார்த்தவசுத:
சுநகிகர்ப்பசம்பூதோ சௌநகாதி மஹாரிஷி:

ఋష్యశృంగో మృగోజాతః కౌశికో గాధినందనః।
జంబుకో జంబుకోత్పత్తిః గౌతమో గౌతసంభవః।
వాల్మీకో పరోత్పత్తిః అగస్త్యకుంభసంభవః।
వ్యాసోలుబ్ధసంభూతో వసిష్ఠా ఊర్వశీసుతః।
నారదో రసకీపుత్రో కౌండిన్యోముండకీసుతః।
మతంగస్యమతంగస్యాత్ మాండవ్యోమండుకీసుతః।
సాంఖ్యాసప్పసంభూతో గార్గ్యే యోగాతఽవస్సుతః।
శునకీగర్భసంభూతో శౌనకాదిమహాఋషిః॥

என்னும் மனுஸ்மிருதிப்படிக்குக் கலைக்கோட்டார் மான் வயிற்றிலும், கௌசிகர் காதிமஹாராஜாவுக்கும், ஜம்புகர் நரியின் வயிற்றிலும், கௌதமர் பசுவின் வயிற்றிலும், வான்மீகர் வேடச்சிக்கும், அகஸ்தியர் கும்பத்திலும், வியாசர் செம்படச்சிவயிற்றிலும், வசிஷ்டர் தாசிவயிற்றிலும், நாரதர் வண்ணாத்தி வயிற்றிலும், கௌண்டந்யர் முண்டைச்சி வயிற்றிலும், மதங்கர் சக்கிலிச்சி வயிற்றிலும், மாண்டவ்யர் தவக்களை வயிற்றிலும், சாங்கயர் பறைச்சி வயிற்றிலும், கார்க்கேயர் கழுதை வயிற்றிலும், சௌநகர் நாயின்வயிற்றிலும் இப்படிப் பிறந்து, அசேதனமாயும் நிர்மூடத்னமாயும் யாதொரு கதியும் பதியும் மதியும் ஜீவனமுமில்லாமல் காய் - கனி - கிழங்கு - வேர்களைப் பிடுங்கித்தின்னுகிறது மல்லாமல் பலவித மிருகங்களையும் பக்ஷிகளையும் பிடித்துச் சுட்டுத்தின்கிற உங்களுக்கு ஐந்து வேதமுதலானதில் ஒருமொழிகூட பாத்தியமில்லாததை அறியீர்களோ!

44—ப-கு. ஓ மார்க்கசகாய ஆசாரி! வியாசரிஷி வேதத்தைச் சிக்கறுத்தாரென்றும், புராணமுதலான இதிகாசங்களைச் செய்து வேண்டிய அற்புதங்களைக் காண்பித்தாரென்றும், சாஸ்திரங்களில் முறையிட்டிருக்க அவரையும் மற்றரிஷிகளையும் நீங்கள் இழிவாய்ச்சொல்வது தர்மமல்லவே!

மா-ஆ.—ஓ பஞ்சாங்கக் குண்டையனே! அந்த ரிஷிகள் செய்த அற்புதங்களைக் கிஞ்சிற்றுச்சொல்லும், உண்மையானதா யிருந்தால் நாங்களதற் கிணங்கவேண்டியதே.

45.—ப-த. ஓ மார்க்கசகாய ஆசாரி! அகஸ்தியர் விந்தமலையைப் பாதாளத்திற்புக அழுத்தினுரென்றும், பரமசிவன் பார்வதியை இமயமலையிலே கலியாணமுடித்தபோது, ஜனத்திரளின் பாரத்தினுல் உத்தரபூமி தாழ்ந்து தக்ஷணபூமி உயர்ந்ததைக்கண்டு அவரைச் சிவன் அனுப்பப் பொதியமலையிலே போயிருந்து பூமியைச் சமமாக அகஸ்தியர் செய்தாரென்றும், சமுத்திரநீரைக் கையிலேந்தி ஆசமனம் பண்ணினுரென்றும், தூர்வாசமுனிவர் விஷ்ணுவை வைரவர் சூலாயுதத்தால் நெற்றித் துளையுண்ணவும், இலக்குமியைப் பிரிந்து வருந்தவும் சபித்தாரென்றும், கௌதமர் தேவேந்திரனுக்கு ஆயிரம் யோனியுண்டாகச் சபித்தாரென்றும், பிருகுரிஷி விஷ்ணுவைப் பூலோகத்திலே பல பிறவிபிறந்து வருந்தச் சபித்தாரென்றும், இன்னும் பலரிஷிகள் பற்பல அற்புதங்களைச் செய்தனரென்றும் அநேக நூல்களில் முறையிடுவதை நீங்கள் வாசித்துணர்ந்ததில்லையா?

மா-ஆ.—ஓ பஞ்சாங்கங் குண்டையனே! இக்கதைகளை எவர்கள்தான் நம்புவார்கள். (சொல்லுவார் சொன்னாலும் கேழ்ப்பவர்க்குமதியில்லையா) அசரவஸ்துவான கல்மலை செருக்குக்கொண்டதும், விஸ்வரூபம் பெற்றதும், சூரியனைமறைத்ததும் எவ்வாறு? இது நியாயவிரோதமான கட்டுக்கதை யென்பதற்குச் சந்தேகமா! விந்தமென்னுஞ் சிறுமலை ஒன்பதுகோடி ஐம்பதுலக்ஷ யோஜனைதூர மளவுக்குமேலே தானுயுயர்ந்ததென்பதை யார் நம்புவர்? மேலும் சூரியன் ஓர் பிரமாண்ட ஜோதியாகி வானவீதியின் மத்தியிலே நிலைபெற்றிருக்க அதனைச் சுற்றியோடுகின்ற கிரகங்களுளொன்றாகிய பூமியின் ஒரு சிற்றிடத் தமைந்துகிடந்த விந்தமென்னுஞ் சிறுமலை உன்னதங்கொண்டெழும்பிச் சூரியனை மறைத்து நிற்பது எவ்வாறு? பூமியுருளவே மலையும் அப்பூமியுளுள்ளதே யாதலால் அத்துடன் தானும் கீழ்மேலாயுருளுமே! அப்படிக்கிருக்க இந்தப்பொய்யை மெய்யென்றங்கீகரிக்கும் விவேகிகளுக் கென்னபெயரை வகிக்கலாம்?

கந்நியாகுமரி தொடங்கி மிலேச்சதேசத்தி னிறுதிவரைக்கும் கிடக்கிற பூமியின் செம்பாதி பகிர்ந்து பார்க்கில் இமயகிரி

தக்ஷணபாகத்தில் நிற்பதேயன்றி உத்தரபாகத்தில் நிற்பதல்லவே! இமையந் தக்ஷணமே தாழ்வதன்றி ஒருபோதும் உத்தரந் தாழாதே! அப்படிக்கிருக்க உத்தரந் தாழ்ந்ததென்பது ஒருபோதும் ஒவ்வாத பொய்யென்பதற்குச் சந்தேகமில்லை.

ஆதலால் குருமுனியாகிய அகஸ்தியர் விந்தமலையைப்பாதாளத்திற்புக அழுத்தினாரென்பதும், பாரக்குறைவினால் மிதந்ததக்ஷணபூமியைத் தாழ்த்தி சமனாக்கப் பொதியமலையிற் போனாரென்பதும் பொய்க்கதைகளேயன்றி உண்மையல்ல.

இவர்செய்த மற்றைய அற்புதங்களும், மற்றைய ரிஷிகள் செய்த அற்புதங்களும் யாது நியாயத்தாலும் நம்பத்தகாத கட்டுக்கதைகளா யிருப்பது வெளியரங்கமாகையால் அவைகளிலொவ்வொன்றிற்கும் விசேஷதிருஷ்டாந்தம் வேண்டுமென்பது அவசியமல்ல.

மேற்கூறிய அகஸ்தியமுனிவர் எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகுவாரென்றிருந்தும், தனது சொற்கமைந்த சிஷனாயிருந்து தானிட்ட ஏவல் பழுதறச்செய்து நிறைவேற்றிய தொல்காப்பியருக்குச் சாபங்கூறி நெடுங்காலமாக அவர்மேல் சலம் சாதித்தும் இன்னும் அனேகர்மேல் கோபசாபங்களைச் செலுத்தியும் வந்தாரென்று உங்கள் நூல்களே சாக்ஷியிடுகின்றது.

துருவாசமுனிவர் இந்திரன்முதலிய தேவர்களுக்கும் பற்பல மனிதர்களுக்கும் அநியாயமாகச் சாபமிட்டுக் கொடுங்கோப முடையவராய்த் திரிந்தனரென்று சொல்லப்படுகின்றது.

இவ்விதமாகவே ரிஷிகளென்று நீங்கள் வியந்து பேசுகிற உங்கள் ரிஷிகளில் அனேகர் பிறர்மேற் கோபஞ் சாதிக்கிறவர்களாகவும், சிலர் கொலை செய்கிறவர்களாகவும் நடந்து மனிதர்களிலும் அதிக துஷ்டநடையினராகவே இருந்தார்களென்று அவரவர் சரித்திரங்களிற் கண்டிருப்பதினால் இவர்கள் பகல்வேஷக்காரரைப்போல் மனிதரை வஞ்சிக்கும்படி ரிஷிக

ளென்கிற வேஷம்பூண்டவர்களே யல்லாமல் இவர்கள் ரிஷிகளுமல்ல; அவ்வற்புதங்களைச் செய்தார்களென்பதும் அதுகளைப் பலவிதமாக இகழுகிறபடியால் உங்கள் முன்னோர்செய்தது வீண்கற்பிதங்களே.

46.—ப-த. ஓ மார்க்கசகாய ஆசாரி! எங்கள் முன்னோர்களைப் பலவிதமாக இகழுகிறபடியால் உங்கள் முன்னோர்களின் பெருமையைப்பற்றிக் கிஞ்சிற்றுத் தெரியப்படுத்தவேண்டும்.

மா-ஆ.—ஓ பஞ்சாங்கங் குண்டையனே! பஞ்சாநநோத்பவாளாகிய எங்களுக்கு ஸாநக-ஸநாதந-அபுவநஸ-பிரத்நஸ ஸுபர்நஸ வென்னும் நாமதேயங்கள் ஆஸுலாயந-ஆபஸ்தம்பம்-திராமியாயநம்-காத்தியாயநம்-ரௌப்யாயநம்-போதாயநம்-இருக்கு-எசுர்-சாமம்-அதர்வணம்-பிரணவமென்னும் ஐந்துவேதமும் சத்தியோஜாதம்-வாமதேவம்-அகோரம்-தத்புருஷம்-ஈசாநியமென்னும் பஞ்சமுகத்தி லுற்பவித்த பஞ்சப்ரம்ம வம்மிசமான விஸ்வப்ராமணாளுக்கு வேதோக்தமாய் ஐந்துகோத்திரம், ஐந்துசூத்திரம், ஐந்துசாகை, ஐந்துபிரவரை முதலானது முண்டென்று சொல்லப்படும்.

சாமவேதத்தில் துவஷ்டம்ரம்மா அவதாரம் சங்கராசாரியாரென்று சொல்லப்படும். அவர் சரஸ்வதிபீடம், அந்தப் பீடத்திற்குச்சாமவேதசுருதிப்பிரமாணம். காண்டவசநம் பிரகஸ்பதிவனத்தில் அர்த்தராத்திரியில் இரண்டரை நாழிகையானபிறகு பாருகாசத்தியமென்று சொல்லப்பட்ட இரண்டாஞ்சாமம் பிரகஸ்பதி விராட்டென்று சொல்லப்பட்ட சாமத்தில் ஓம்-கிலீம்-கிறீம்-ஸ்ரீம்-அம்-கரும்-மரும்-சரும் மௌம்-டம்-சம்-டலூம்-வம்-ஆம்-ஹம்-யம் இந்தப்பதினேழு பீஜாக்ஷரம்; அதில் எட்டு பீஜாக்ஷரத்திற்கு ஏகமாத்திரை, துவிதமாத்திரை, திரிமாத்திரை, சதுர்மாத்திரை யென்னும் இந்தவருணமும், உதாத்தா-அநுதாத்தா-தீர்க்காசுரமென்னும் அச-ருக்கில்-ஈஉஅ-ஓங்காரத்தில்-அகார-உகார-மகார-மென்று சொல்லப்பட்ட உகாரத்தில்-தகார உகார-ஓகாரமென்னும் இந்தமூன்றுக்கு அதர்வணவேதத்

தில் சில்ருக்குள் - கம் - கம் - கம் - கம் - கம் - டம் - டம் - டம் - டம் - டம் - பம் - பம் - பம் - பம் - பம் - இந்தப் பீஜாக்ஷரத்தினுடைய ஸப்த - ஸ்பரிஸ - ரூப - ரஸ - கந்த மஹாபாஷாப் பிரமாணத்தினுடைய வித்தியாரண்யபாஷியத்திற் பார்த்தால் விராட்டு பஸ்மபாகம் மேற்கு விஸ்வப்ரம்மாவுக்கு உபநிஷத் வாக்கியமும் சொல்லப்படும்.

47—பஞ்சமுகமான அகோரமுகத்தில் துவஷ்டப்ரம்மா அவதாரமெடுத்து சங்கராசாரி சரஸ்வதிபீட ஸ்தாபநஞ் செய்தது ருக்கு ஙஉஅ - ஓங்காரத்தில் இந்த பீஜாக்ஷரத்தால் எந்திரஸ்தாபகம்-பீடஸ்தாபகம் - ஜலஸ்தம்பம் முதலானதுஞ் செய்தார்.

கிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனனுக்குப் பகவற்கீதையில் ஞானோபதேசஞ் செய்தார். அதை ஏழாவது அத்தியாயத்தில் அறியலாம்.

பிராணவஹா, சர்வவேதஸ்யா, சப்தபுருஷனுவரி ஓங்காரமென்று சொல்லப்பட்டது. ஐந்துவேதத்திற்குத் தாயாய் பாவிக்கப்பட்ட ஓங்காரம் - பிரணவம் மூலஸ்தம்ப ப்ரமாணமாய்ச்சொன்னது. விஸ்வப்ரம்மாவாலே ஓம் - றீம் என்று சொல்லப்பட்ட பீஜாக்ஷரத்தைப் பார்வதி சமேதராகிய சிவசாம்பவமூர்த்தி பிரமாநந்தம் பெற்றபோது, ஓம் - றீம் - என்ற மூலமந்திரமான பஞ்சாக்ஷரம் விஸ்வப்ரம்மாக்களுடைய நாமபீஜமாயிருக்க இதை நாநாகோத்திரத்தில் உற்பவித்த உங்கள் முன்னோர்களான வியாசன் முதலான விப்பிராள் விஸ்வப்ராமணனை அடுத்து இந்தமந்திர உபதேசத்தைப் பெற்றபடியால் விப்பிராளென்று சொல்வதேயல்லாமல் பிராமணுளென்றும் பிரம்மரிஷியென்றும் விவேகிகள் ஒருக்காலுஞ் சொல்லார்கள்.

அதேனெனில், பஞ்சசிருஷ்டியில் கிஞ்சிற்றுவது உங்களுக்கில்லாமல் ஜோகி ஜங்கமனைப்போல் யாசகஞ் செய்கிறீர்கள். நாங்கள் பஞ்சசிருஷ்டிக்குத் தலைவர்களாய்க் காரணகர்த்தவ்யம், நித்தியாநித்யம், யக்கியகர்த்தா, யக்கியபக்தா, சக

லசராசர ப்ரபஞ்சலயபோஷண விராட்விஸ்வரூபோ நாராயணராகிய விஸ்வப்ராமணுளாகிய எங்களுக்கு வேதவிதியில்லையென்று நீங்கள் சொல்வது நியாயமல்ல; எங்களாலே இவ்வுலகசம்ரக்ஷணை நடந்துவருகின்றது. எங்களை விஸ்வப்ரம்ம வம்மிசமென்று வேதம் முறையிடுகின்றது. நீங்கள் அந்த ஐந்து வேதத்தை வியாசன் நான்குவேதமாய்ச் சிக்கறுத்தானென்று விஸ்வப்ரம்ம வம்மிசத்தாருடைய உற்பத்தி முதலானவைகளை வெகுவாய் மறைத்து உலகத்திற்கு விபரீதபோதனையையே செய்துவருகிறீர்கள் மேலும் சுருதிப்பிரமாணமாய்.

திதிரூப மநுப்ரோக்தம் வாரஸ்யமயசம்பவ :
நக்ஷத்ரம் த்வஷ்டரூபஞ்ச சில்பியோகந்ததேவச
விஸ்வஜ்ஞகரணஞ்சைவ பஞ்சாங்கோமதிதேவத :

తిథిరూపమనుప్రోక్తం వారస్యమయసంభవః।
నక్షత్రంత్వష్ట రూపంచ సిల్పియోగంతదేవచ।
విశ్వజ్ఞ కరణంచైవ పంచాంగోమతిదేవతః।

என்னும் திதி - மனுப்ரம்மாவினுலும், வாரம் - மயப்ரம்மாவினுலும், நக்ஷத்திரம் - துவஷ்டப்ரம்மாவினுலும், யோகம் - சிற்பிப்ரம்மாவினுலும், கரணம் - விஸ்வஜ்ஞ ப்ரம்மாவினுலும் உற்பத்தியாகையால், இந்த ஐந்துபேரும் பஞ்சாங்கத்திற்கு அதிதேவதாளானதுமன்றி பிருதிவி - மநுரூபம், அப்பு - மயரூபம், தேயு - துவஷ்டரூபம், வாய்வு - சில்பிரூபம், ஆகாயம் விஸ்வஜ்ஞரூபம்; இவர்கள் ஐந்துபேரும் நிர்ணயம், நிர்மர்ணம், வேதோக்தப் பிரகாரம் உதகும்பம், வேதிகை, பாத்திரம் முதலான மாங்கல்யமென்னும் விதிக்கிரமங்களும் பூசாவிக்கிரக ஆலயக்கிரகம், சாஸ்திரம், ஷோடசகர்மமும் சகலவர்ணத்தாருக்கும் ஜீவத்தொழில் கரமுத்திரையும், சர்வாதார உற்பத்தியும்; இகபரமடையும்படி வேதவிதிகளும், ஜயம், அபஜெயம், ஜநநமரண உற்பத்தி ஏற்பாடுகளும், ஆதியிலளித்தவர்கள் பஞ்சப்ரம்ம வம்மிசத்தாராகிய நாங்களேயல்லாமல் நீங்களல்ல. அப்படியிருக்க எங்களுக்கு வேதவிதியில்லையென்று எப்படிச்சொல்லலாம்? உங்களால் உலகத்தாருக்கு யாது

ம்பிரயோசனமில்லை. எங்களாலேயே சகலரும் சௌக்கியத்தை அநுபவிக்கிறார்கள். நீங்கள் ராக்ஷதாள் முதலாகிய பத்துகுலத்தில் உற்பவித்தவர்களென்று சொல்லுகின்றது.

தேவோமுனித்விஜோராஜோ வைஸ்யசூத்ரோபிடாலக:
பசும்லேஸ்சச்சசண்டாளோ தசவிப்ரபரகீர்த்திதா:

దేవోమునిద్విజోరాజో వైశ్యశూద్రోబడాలకః।
పశుమ్లేశ్చశ్చచండాళో దశవిప్రప్రకీర్తితః॥

48.—மாலகுலமுநபுட்டி மாலனிதூஷிஞ்சு
த்விஜுலகேலனிட்டி தொங்கதனமு
ஆதிபுட்டினதாவு அரஸிதாகூடரா
விஸ்வதாபிராம வினரவேமா.

గీ। మాలకులమునబుట్టి మాలనిదూషించు। ద్విజులకేలనిట్టిదొంగతనము।
ఆదిబుట్టినతావు యరసేతా జూడరా। విశ్వదాభిరామవినరవేమా॥

என்னும் வேமநசதகத்தின்படிப் பிறந்தார்களென்றும்,

பௌரோஹித்யம் ரஜகஜநநம் கிராமணித்வம் நியோகம்
மடாதிபத்யம் ஹ்ருதவசநம்ஸாக்ஷிவாதம்பராந்நம்
ப்ரம்ஹத்வேஷம் கலுரஜநிதம் ப்ராணிநாம் நிர்த்தயத்வம்
பூதிஹோமம் பசுபதே ஜந்மஜந்மாந்தரேபி.

పౌరోహిత్యం రజకజననం గ్రామణిత్వంనియోగం।
మఠాదిపత్యంఅనృతవచనం సాక్షివాదంపరాన్నం।
బ్రహ్మద్వేషం ఖలురజనితం ప్రాణినాంనిర్దయత్వం।
భూతిహోమంపశుపతే జన్మజన్మాంతరేపి॥

என்னும் தருமசாஸ்திரப்படி ஆமசிரார்த்தங் கொடுப்பவனுக்கும் வாங்குபவனுக்கும் மஹாபாபமென்று சொல்லியிருக்கத் தங்கள் ஜீவனவிர்த்தியைக் குறித்து எந்தவர்ணத்திலிறந்துபோனாலும், அவர்களுடைய பிதுர்க்களுக்குப் பிதுர்ப்பாவனையாகவும், ஸ்திரீகளுக்கு ஸ்திரீபாவனையாகவும் காலாழி, பீலாழி, கருவளையல், பொட்டு, ரவிக்கை, சேலைமுதலானதற்கு இச்சித்துப் பெற்றுக்கொள்வதும், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் மூவரும் புருஷசூக்த வேதோக்தப்படிக்கு பிரம்மவம்மிசமாயிருந்தும், இவர்கள் நமஸ்காரம் பண்ணினால் பிராமணன்கூட சரிநமஸ்காரம் பண்ணும்படி வேதவிதியிருக்க அப்

படிச்செய்யாமல் நீங்கள் இடதுகரத்தைத் தூக்கிக்காட்டுகிறது வலதுகர மற்றுப்போன வியாசன் கற்பித்த உங்கள் ஆகாரகாண்டத்தி லிருக்கின்றதோ? அல்லது திரிமூர்த்திகளைத் தூஷித்த வியாசன் வீரமுஷ்டியால் வலதுகரமற்றுப்போனுன்; உங்களுக்கு இரண்டு கரங்களுமிருக்க இடதுகரத்தை மாத்திரம் காட்டுகிறகாரணமென்ன? நீங்கள் எப்பேர்ப்பட்டவர்களென்ருல்: யானையானது தன் மத்தகத்தைக்கொத்துகிற நிமித்தம் அங்குசத்தைத் தானே யெடுத்துப் பாகன்கையிற் கொடுக்கிருப்போலாயிற்று. சொன்னபொருளை பக்ஷி மிருகங்க ளறிந்துகொள்ளும், சொல்லாம லறிகிறவனே பண்டிதன். அப்படி அறியாவிட்டால் புத்தியாற் பிரயோசனமன்று. ஆகையால் நாங்கள் வேதவிதிப்படிச்செய்யும் விவாகத்தை நீங்கள் புராணவிதிப்படிச்செய்ய ஆக்ஷேபணைசெய்தால் துன்பத்துக்காளாகுவீர்கள். அது எப்படியென்ருல், தனக்கு இதம்பண்ணுகிற மித்திரன் பேச்சைக் கேளாதவன் மருந்து தின்னுத நோயாளியைப்போல் துன்பத்துக்காளாவான். மேலும் வேட்டல், ஓதல், கொடுத்தல், தவம், சத்தியம், உறுதி, பொறுமை, ஆசையின்மை யென்னும் இவ்வெட்டுத்தருமங்களை அறிந்திருந்தும் பிரயோசனமில்லை. அதேனெனில், துஷ்டர்கள்வேதாத்தியாயனம் பண்ணியிருந்தாலும் தர்மசாஸ்திரம் படித்திருந்தாலும் அவர்கள் வார்த்தையில் நம்பிக்கை வைக்கலாகாது, ஏனென்ருல் எவன் சுபாவகுணம் எப்படியோ அப்படியே நடக்குமே யல்லாமல் அதற்கு விரோதமாய் நடவாது.

அந்தியஜாதித்விஜாதிச்ச ஏகயேவஸஹோதர:
ஏகயோநிப்ரஸூதச்ச யேகசாகேநஜாயதே.

అంత్య జాతిద్వి జాతిశ్చ ఏకయేవసహోదరః।
యేకయోని ప్రసూతశ్చ యేకశాఖేనజాయతే॥

என்னும் சுலோகப்படி அசேதனமாய்ப் பலபீஜத்திற்குப் பிறந்த வம்மிசமாயிருக்கிற நீங்கள் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாராகிய எங்களுக்கு வேதவிதியில்லை யென்றும், அவ்விதி உங்களுக்கே உரியதென்றும் சொல்லுகிறீர்கள். அது உண்மையானுல் இது சங்கதிகளைப்பற்றி வேதத்தில் ஓர்மொழியாவது

உங்களைக்குறித்துக் கூறுதிருக்கக் காரணமென்ன? ஒரு பதியுங் கதியும் மதியுமில்லாத ஜோகி ஜங்கமனைப்போல் கிராமபாச்சகாளாகிய உங்களை அறியாதவர்கள் உங்கள் பகல்வேஷங்களைக் கண்டு ப்ரம்மித்து நீங்களே ப்ரம்மவம்மிசமென்று சொன்னாலுஞ் சொல்லுவார்கள். இதற்குப் பிரமாணம்,

49. பிராம்ஹறுேபகவான்ருத்ரோ க்ஷத்ரியோபரமோஹரி:
வைசியோபிதாமகஞ்சைவா இந்த்ரசூத்ரஸ்சஜாயதே.

బ్రాహ్మణోభగవాన్రుద్రో క్షత్రియోపరమోహరిః।
వైశ్యోపితామహంచైవ యింద్రశూద్రశ్చజాయతే॥

என்னும் சுலோகப்படிக்கு ப்ரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திராளென்னும் நால்வரும் ஒரு பிரமத்தினிடமாகப் பிறந்திருக்க, ஒருவருக்கொருவர் சமமரியாதையிருக்க, நீங்கள் இந்த நான்குவர்ணத்திலும் இல்லாத இழிகுலமாதருக்கு உற்பத்தியானவாள்.

ஜன்மநாஜாயதேசூத்ர: கர்மணஜாயதேத்விஜ:
வேதபாடேநவிப்ராணும் ப்ரம்மக்யானந்துப்ராம்ஹண:

జన్మనాజాయతేశూద్రః కర్మణాజాయతేద్విజః।
వేదపాఠేనవిప్రాణాం బ్రహ్మజ్ఞానంతుబ్రాహ్మణః,

என்னும் சுலோகப்படி உங்களுக்கு ஜன்மமே சூத்திரனென்றும், பிரமக்கியானத்திலே பிராமணனென்றும் வழங்கிவருவதால் ஜென்மமே க்ஷத்திரியனாகிய விஸ்வாமித்திர மஹாரிஷி சாபானுக்கிரக சாமர்த்தியமுடையவனா யிருந்தும் பிராமணனெனப் பேருமில்லாமல் ப்ரம்மரிஷியென்கிற நாமமில்லாமல் போனதற்குக் காரணமென்ன?

க்ஷத்திரியனான தசரதமகாராஜாவுக்குப் பிள்ளையாய்ப்பிறந்த ராமன் அரசுசெலுத்துநாளில் ஒருசூத்திரன் தபஞ்செய்ததினால் விப்பிராள் வீட்டுப் பிள்ளை பிறந்ததென்று ராமனிடத்தில் முறையிட ராமன் அந்தச்சூத்திரனை சம்ஹாரம் பண்ணதாயும், பின்பு விப்பிராள் வீட்டுப்பிள்ளை உயிர்வாழ்ந்ததாயும் நீங்கள் செய்திருக்கிற புராணங்களை பாமராள் நம்புவார்களே யொழிய பண்டிதாள் நம்பமாட்டார்கள்.

ஸ்ரீராமர் நாளேயில் வசிஷ்டன் வியாசன்முதலான ரிஷிகள் இருந்தார்களா ? கலியுகம்பிறந்த வெகுகாலத்தில் இவாள் உற்பத்தி உண்டாயிருக்க, இவாள் நாளேயிற்றுனு ராமர் முதலான சக்கிரவர்த்திகள் இவ்வுலகத்தையாண்டது? அக்காலத்தில் இந்தவசிஷ்டன்தானு இருந்து ராமர்முதலான அரசர்களுக்கு ஆசீர்வாதஞ்செய்து முடிசூட்டினது ? அந்த ஆசீர்வாதத்தினுற்றுனே கூ௯௰-௱௰-லக்ஷம், கோடி, சங்கம், வருடமிருந்து அவாளரசாண்டது ? இப்பேர்க்கொத்த வல்லவர்களாகிய நீங்கள் இப்பொழுது பூமியின்கண்ணிருக்க இக்காலத்திலிருக்கும் அரசர்களுக்கு வயது நூறுக்குள் இருக்கவேண்டிய காரணமென்ன ?

50. இராமாயணம், விஷ்ணுபுராணம், பாரதம் முதலிய நூல்களே ஒன்றுக்கொன்று ஒத்திட்டுப் பார்க்குமிடத்தில் அவைகளில் சொல்லிய சரித்திரங்களும் காலப்பிரமாணங்களும் ஒன்றுக்கொன்று உயர்வாயும் தாழ்வாயும் மாறுபட்டேயிருக்கின்றது. அது எப்படியென்றுல், இலங்கையில் வானரப்படையுடனே யுத்தத்திற்குப்போய் இராக்ஷசசங்காரஞ்செய்து ஜயமடைந்தானென்று சொல்லப்படும் இராமச்சந்த்ரனைவன் சூரியகுமாரனுகிய வைவச்சுதமனுவின் மகன் இக்ஷுவாகுவின்மரபிலே ௫௫-ம், தலைமுறையிற் பிறந்து அயோத்திமாநகரத்தை அரசாண்டானென்று சொல்லப்படுகின்றது.

பாரதயுத்தஞ்செய்த துரியோதனன் முதலிய சுற்றத்தவர்களேக் கொன்று குருக்ஷேத்திர முழுவதையும் ஒருகுடைக்கீழ் அரசுபுரிந்த உதிஷ்டிரனென்னும் அரசன் அரசுபுரிந்தானெனக்குறிக்கப்பட்ட காலத்திற்கும் இராமச்சந்த்ரன் அரசுபுரிந்தானெனக் குறிக்கப்பட்ட காலத்திற்கும் இடையே அ-லக்ஷத்து கூச-ஆயிரம் வருடகாலத்துக்கு உகூ-அரசர்கள் அரசாண்டார்களெனப்படுகின்றது, இக்கணக்கின்படி பார்த்தால் ஏகசதட்டுக்கு ஒவ்வொருவன் ஏறக்குறைய ௩௦-ஆயிர வருடமளவாக விருந்து இராஜரீகம் பண்ணினுர்களென் றெண்ணவேண்டும்.

இதுநிற்க, மநுச்சக்கரவர்த்தி அரசாண்டகாலத்தில் இராமச்சந்த்ரன் அரசாண்டகால பரியந்தம் இடையேயுள்ள தலை

முறை ஏற்க்குறைய சுா0-சென்றதென்றும் அந்த மநுச்சக்கர வர்த்தியின் காலந்தொடங்கி உதிஷ்டிரன் அர்ச்சுனன் முதலியோரிருந்த காலபரியந்தம் ருo - தலைமுறை சென்றதென்றும் சொல்லப் படுகின்றது, இக்கணக்கின்படி இராமச்சந்த்ரன் இருந்தரசாண்ட காலத்திற்கு எட்டுலக்ஷத்தறுபத்து நாலாயிரம் வருஷத்தின் பின் இருந்தாரென்று சொல்லப்படும் உதிஷ்டிரன் முதலியோர் இராமச்சந்த்ரன் இருந்தகாலத்திற்குப் பத்து தலைமுறைக்கு முன்னிருந்தாரென்று சொல்ல வேண்டியதா யிருக்கின்றது.

பாரதயுத்தம் நடந்தது துவாபரயுகாந்தத்திலே யென்று பாரதமுதலிய நூல்களால் விளங்குகின்றது, இராமச்சந்த்ரன் மரணகாலத்திலே துவாபரயுக மாரம்பித்து உதிஷ்டிரமகாராஜனது தம்பியான அர்ச்சுனனுடைய பேரப்பிள்ளையாகிய பரிக்ஷித்துமகாராஜன் மகுடாபிஷேகம் பெற்ற காலத்தில் முற்றுப்பெற்றதென்று இதிஹாச காவியங்கள் கூறுகின்றன. அந்த துவாபரயுகத்திற்கு எட்டுலக்ஷத் தறுபத்து நாலாயிரம் வருஷமென்று சோதிடங்களிலும் கணித நூல்களிலும் வரையறையாகக் கூறியிருக்கின்றது. ஆகவே அக்காலந்தொடங்கி இக்காலம்வரைக்கும் ஐயாயிரம் வருடகாலம் சென்றதாகவேணும்.

கௌசிக இராஜனுக்கும் வசிஷ்டமுனிக்கும் நடந்தயுத்தம் இராமச்சந்த்ரன் இருந்தகாலத்திற்கு அனேக தலைமுறைகளுக்கு முன்னே திரேதாயுகமத்தியில் அயோத்திமாநகரத்தை அரசாண்ட திருச்சங்கு மகாராஜனின் நாள்களிற் சம்பவித்ததென்று இராமாயணத்திற் சொல்லுகின்றது. பாரதத்திற் சொல்லியபடிக்கு துவாபரயுகத்திலே உதிஷ்டிர மகாராஜனிருந்து அரசாண்ட சிலகாலத்திற்கு முன் குருக்ஷேத்திரத்தை அரசாண்ட குருவென்னும் அரசனின் காலத்திற்கும் சகுந்தலையின் கணவனாகிய துஷ்டியந்த மகாராஜனின் காலத்திற்கும் இடையே நிகழ்ந்ததாகச் சொல்லப்படுகின்றது. ஆகையால் இவ்விருகணக்குகளுக்கும் அனேகம் இலக்கம் வருடங்கள் விகற்பப்படுகின்றன. இவ்வாறாக உங்கள் முன்னோர்களாகிய விப்பிரர்கள் செய்திருக்கும் புராணங்களும் இதிஹாசங்களும் மற்றநூல்

களும் ஒன்றுக்கொன்றுவ்வாமல் பேதப்பட்டிருக்கும் பிரட்டுருட்டுகளை விஸ்வப்ரம்ம வம்சஸ்தர்களாகிய நாங்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்திருக்க எங்களில் நடக்கும் சுபாசுபங்களில் உங்களையும் உங்கள்புராணவிதிகளையும் எவ்வாறு அங்கீகாரஞ்செய்யத் துணிவோம். எங்களுக்காதியாகிய வேதமிருக்க அதின்படி நடப்பதே சரியென்று இச்சபையிலுள்ள பஞ்சாயத்தாரே தங்களுக்கு விசிதமாய்த் தெரியப்படுத்துவார்கள்.

மதுமாமிச பக்ஷணம்.

51.—ப-த். ஒருவன் சுபாவமான விவேகத்தை தன்னியல்பிலிருக்கவொட்டாமல் கெடுப்பதற்கேதுவாகிய லாகிரி சாப்பிடப்பட்டவானுக்கு புத்தி எவ்வளவு தெளிவுள்ளதாகவிருந்தாலும் அவனைச் சான்றோர்கள் அறிவிலா மிருகங்களுக்குச் சரியாய் மதிப்பார்களே யல்லது குணவானாக மதிக்கமாட்டார்கள், அப்படிப்பட்ட லாகிரி செய்பவருக்குத் துணைப்படுகிறவனையுங் குடியயொன்றே இவ்வுலகமிகழுமல்லவா?

மா-ஆ.—ஓ பஞ்சாங்கங் குண்டையனே! உங்கள் வம்மிசம் குடியருக்கெல்லாம் குருபீடமல்லவோ! அவாளாரெனில் சத்திபூசை யென்று சாராயத்தை மூன்றுபாத்திரங்களில் வார்த்துச் சத்தியின்முன்வைத்து பலவிதமாமிசங்களுடனே ஆராதனைசெய்து மங்கில்யஸ்திரீகளுடைய பாதங்களைப் பூசைசெய்து மதுமாமிசங்களை நைவேத்தியஞ்செய்து அந்த ஸ்திரீகளுக்குச் சாராயத்தைக் கொடுத்து அதில் மீந்த எச்சிற்சாராயத்தை குருக்கள் குடித்து மற்றவர்களுக்குப் பானையிலிருக்கிற சாராயங்களைப் பாத்திரத்தில் வார்த்து மூன்றுவிசை குடிக்கக் கொடுக்கிறார்கள், அந்தச்சமயத்தில் எல்லாரும் ஐயுங்-கலீம்-சௌம் என்ற மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே தங்கள் இடதுகையினாலே பாத்திரத்தைப் பிடித்துக் குடித்துக்கொண்டு வலதுகையினால் மாமிசங்களைப் புசிக்கிறார்கள், அப்பொழுது உங்கள்குருக்களுக்கு அடிக்கடிசாராயங்களைக்கொடுக்கும்போதெல்லாம் அவருக்குச் சீஷர்கள்மாமிசத்தை ஊட்டுகிறார்கள், லாகிரியினாலே ஸ்மாரகந்தப்பி ஆணும் பெண்ணும் ஏகமாய் விழுந்துகிடப்பார்கள், அச்சமயத்திலே விப்பிரராகிய குருக்கள் எங்

தஸ்திரீயை அனுபவித்தாலும் தோஷமில்லையென்று வியாசபகவான் தர்மசாஸ்திரத்திற் சொல்லியிருக்கிறாரென்று தனக்கு இஷ்டமான ஸ்திரீகளை அனுபவிப்பார்கள். துறந்தவனைப்போல் வாசாஞானம்பேசி சிலஸ்திரீகளை தங்களுக்கு சிஷராக்கிக்கொண்டு பாலைபூசை, புவனபூசை, திரிபுரைபூசை, சக்திபூசை, காலவைரவபூசை, சொர்னவைரவபூசை யென்று சுக்கிரவாரம்-ஆதிவாரம்-பௌர்ணமி - பஞ்சபர்வம்-மாதப்பிரவேச முதலிய விசேஷநாட்களில் தங்களோடொத்த ஸ்திரீகளும் சிஷர்களும் அப்பூசையில் மாறுபாடாக சாராயத்திற்கு வஸ்துவென்றும், சாராயபுட்டிக்குக் கடமென்றும், அதைக்குடிப்பதற்கு வஸ்துதரிசனையென்றும், தென்னங்கள்ளுக்கு ஆகாசப்பாலென்றும், பனங்கள்ளுக்குக் கற்பகத்தேனென்றும், கெஞ்சாவுக்குக் கற்பமென்றும், அதைக் குடிப்பதற்கு தூபசாந்தியென்றும், மாமிசத்திற்கு சுத்தியென்றும் மச்சத்திற்கு ஜலபுஷ்பமென்றும், கருவாட்டிற்குக் காந்தமென்றும், கோழிக்குக் குப்பைக்கீரையென்றும் இதுமுதலிய கள்ளப்பெயர்களை ஸ்தாபித்து அதில் முதற்கொடுக்கிறதற்கு ஸ்தூல பாத்திரமென்றும், இரண்டாவது கொடுக்கிறதற்கு சூக்ஷ்மபாத்திரமென்றும், மூன்றாவது கொடுக்கிறதற்குக் காரணபாத்திரமென்றும் பெயராம். இப்படி அதைக் குடித்தபின் யாவரும் போசனஞ்செய்து எழுந்திருக்கும்போது முன்குடித்த பாத்திரத்திலுள்ள சேஷத்தை ஒருபாத்திரத்தில் வார்த்து மூன் குருக்கள் குடித்தபின் யாவருக்குங் குடிக்கக் கொடுக்கிறான். இதற்கே வைரவபாத்திரமென்றுபெயர், இதன்றியில் இவனைப்போல் சிலகள்ளமதஸ்தாள்

அஸ்மத்குருப்யோநம:

என்பதை யுச்சரித்து எல்லாரும் லாகிரிகொண்டு தன்னிடஸ்திரீ - பரஸ்திரீ, சுயசாதி-புறசாதி, விபசாரி - சமுசாரி யென்று பார்க்கிறதற் கிடமில்லாமல் தங்களிஷ்டப்படி நடக்கின்ற குடியருக்கெல்லாம் நீங்கள் குருபீடமாயிருக்க (அவன்கேட்டான் துடியன் எனக்கு இரண்டு தீராம் வாரேன்று) சொல்வதுபோல் உன்னை நிதானியாமல் சொல்லுகிறாய், அப்படிச் சொல்வது நீதியல்ல, மேலும் லீலாசுகர்சொன்ன மூன்றாவது சுலோகம்.

காமக்ரோதஞ்சலோபஸ்ச தேஹேதிஷ்டதிதஸ்கற:
க்ஞானரத்நாபஹாரேண தஸ்மாஜாக்ரதஜாக்ரதா:

కామక్రోధంచలోభశ్చ దేహేతిష్ఠతితస్కరః।
జ్ఞానరత్నాపహారేణ తస్మాజ్జాగ్రతజాగ్రతః॥

என்னும் பிறன்மனையாளை விரும்புவது பாவமென்றெண்ணுமல் சீதேவியை இச்சித்தராவணன் தாஎிறந்தும்அபகீர்த்திக்காளானுனல்லவா! பாண்டவர்களுடைய பத்தினி திரௌபதையை இச்சித்த கீசகன் மடிந்தும் அபகீர்த்திக் காளானுனல்லவா! பிரகஸ்பதி பகவானுடைய பத்தினி தாரையென்பவள் சந்திரனை இச்சித்தபோதிலும் குருபத்தினியென்றெண்ணுமல் அனுபவித்த பாவம் அவனைவிட்டு நீங்கவில்லையல்லவா! ரிஷிபத்தினியாகிய அகலிகையை இச்சித்த இந்திரன் நடந்த இழிவு இன்னம் அவனைவிட்டு நீங்கவில்லையல்லவா! வாலி தன்தம்பி சுக்ரீவனுடைய மனைவியை அனுபவித்து உயிரிழந்து அந்த இழிவு இன்னும் அவனைவிட்டு நீங்கவில்லையல்லவா! வியாசன் தன் சகோதரர்களாகிய சித்திராங்கதன்-விசித்திரவீரியன் இறந்தபின்பு அவாள் பாரியாளாகிய அம்பிகை அம்பாலிகையென்னும் மூண்டைச்சிகளைப் புணர்ந்து உற்பத்தியான பாண்டுவம்மிச மென்னும் இழிவு இந்தவியாசனை விட்டு இன்னம் நீங்கவில்லையல்லவா! இந்தவியாசன் வம்மிசத்தில் உற்பவித்த நீங்களாகையால் பிறர்க்குரிய ஸ்திரீகளின் தோள்களைச் சேருவதும் கஷ்டப்படாமல் சோம்பேறிகளைப்போல் இரந்துண்பதும் உங்கள் சுபாவகுணமே.

(ஏற்பதிகழ்ச்சி) யென்றெண்ணு திருப்பதென்ன? உங்களுக்குக் கடவுளளித்த அவயவங்களும் புத்தியுக்திகளும் செவ்வையாயிருக்கையில் அவைகளைக்கொண்டு கஷ்டப்பட்டு ஜீவனஞ்செய்யாமல் மானத்தைவிட்டிரப்பது மதியீனமல்லவோ! உங்களைப்போலிராநின்ற பஞ்சகவுடாள் பஞ்சதிராவிடாள் கஷ்டப்பட்டுக்கல்வியைக்கற்று மேன்மையான உத்தியோகஞ்செய்யவில்லையா! நீங்கள் பிச்சை எடுப்பதே பெருமையென்று எந்நேரமும் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாரோடே வம்புசெய்து வழ

க்காடுவது இழிவல்லவோ! இப்பேர்ப்பட்டஜநநமெடுப்பதை விட இரப்பது நலமல்லவோ.

52.—ப - சு. நாங்கள் நான்கு வர்ணாசிரமத்தாருக்குங் குருபீடமாயிருந்து தர்மார்த்த காமமோக்ஷமடையும்படி உபதேசஞ்செய்கிற சற்குருவென்றெண்ணாமல் பக்திவிசுவாசமில்லாமல் எங்களை இகழ்வது உங்கள் புத்தியீனமல்லவோ!

மா - ஆ.—ஓ பஞ்சாங்கக் குண்டையனே! நீங்கள் குருபீடமாயிருந்து நான்குவர்ணாசிரமத்தாருக்கும் இகபரசாதனமடையும்படி உபதேசஞ் செய்கிறீர்களல்லவா! அந்தக் குருவினுடைய செய்கை நான்குவிதமாகையால் அந்த நான்குவிதத்தில் ஒருவிதமாவது உங்களிடத்திலில்லை. அஃதெப்படி யெனில், க-வது மீனைப்போலவும், உ-வது ஆமையைப்போலவும், ந-வது பறவையைப்போலவும், ச - வது குளவியைப்போலவுந் தானே யானல், இவைகளுக் கெதுகையாக விப்பிராளான குருக்களுடைய செய்கையும் ச - விதமுண்டு. முதலாவது வித்துவான்களைப்போலவும், உ - வது வேசிகளைப்போலவும், ந-வது வியாபாரிகளைப்போலவும், ச-வது ராஜாக்களைப்போலவுந்தானே. அஃதெப்படியெனில், முதலாவது வித்துவான்களோ தங்களுக்குப் பணங்கொடுக்கிறவர்களைத் தேவனென்றும் ராஜனென்றும் பாடிப்புகழ்ந்துகொண்டாடுவார்கள். பணங்கொடாதவர்களையோ நாயென்றும் பேயென்றும் லோபியென்றும் மிகவும் நிஷிதமாகப்பாடி இகழுவார்கள். அதுபோலவே உங்கள் குருக்களும் காசுகொடுக்கிற சீஷனைக் கொண்டாடி காசுகொடாதவனை நிஷிதமாயிகழுவார்கள். உ-வது வேசிகள் பணங்கொடுக்கிற இழிகுலத்தானையும் நேசிப்பார்கள்; பணங்கொடாத உயர்குலத்தானையும் தூஷிப்பார்கள்; அப்படியே உங்கள் குருக்கள்மார் செய்கிறார்களல்லவோ? ந-வது வியாபாரிகள் கால்காசு லாபம் வருகிற சரக்காயிருந்தால் காதவழிநடந்துபோய் வாங்கிவருவார்கள்; அப்படியே உங்கள் குருக்கள்மார் செய்கிறார்களல்லவோ? ச-வது ராஜாக்களைக் காண விரும்புகிறவர்கள் காணிக்கைவைத்துக் காணவேண்டுவதைப்போல் உங்கள் குருக்கள்மாரையும் காணிக்கைவைத்

துக்காணவேண்டுமாம். ஆகையால் இச்செய்கையுடைய குருக்கள்மாரைக் குறித்து வேமையர்சொன்ன தெலுங்குசுலோகம்.

தன்னுதானெருகடு தானெவ்வரிகிகுருடு பாலுமாலிநட்டி பனசகொடுகு காசுவீசமுகொறகு கட்டுனேகர்மம்பு விஸ்வதாபிராம விநரவேமா.

తన్నుతానెరుగడు తానెవ్వరికిగురుడు । పాలుమాలినట్టి పనసకొడుకు।
కాసువీసముకొఱకుగట్టునెకర్మంబు । విశ్వదాభిరామవినరవేమా॥

(இதன்கருத்தாவது) தன்னையும் தன்னையுண்டாக்கின கடவுளையும் அறியாத குருக்கள் மற்றொருவனுக்குக் குருவாயிருந்து அவனையுண்டாக்கின கர்த்தனை அவனுக்கு எப்படிக் காண்பிக்கக்கூடும். ஆகையால் பணிசவனுடைய மக்களைப்போல் இந்த விப்பிராள் காசுக்குக் குருவேஷம் போட்டுக்கொண்டு பாவத்தைக் கட்டிக்கொள்ளத் திரிகிறார்களென்று இவர்சொல்லுகிறார், ஏனென்றால் சன்மார்க்கமில்லாத துன்மார்க்காளான குருக்கள் ராஜாக்களுக்கும் பிரதிஷ்டை-காணி-பூமி கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறார்கள், கள்ளருக்குத் தீக்ஷை கொடுக்கிறபொழுதே புலை, கொலை, களவு, கள், காமஞ் செய்யவேண்டாமென்று போதியாமல் நீங்கள் களவுசெய்யுமிடங்களில் உயர்ந்த வஸ்துக்களகப்பட்டால் நமக்குக்கொண்டுவந்து கொடுங்களென்றும், அப்படிக் கொடாவிட்டால் உங்களுக்குக்களவு சித்திக்காதென்றும் போதித்து தீக்ஷையைக் கொடுத்தனுப்புகிறீர்கள். அவாளுக்குத்துர்க்குணமற்று நற்குணம்வரும்படி நீங்கள்போதிப்பதில்லை. அவாள்கொலைசெய்துகொள்ளையடிப்பதில் உயர்ந்த வஸ்துக்களகப்பட்டால் கொண்டுவந்து கொடுக்கிறார்கள். அதைமிகவுஞ் சந்தோஷமாய் வாங்கிக்கொள்ளுகிறீர்கள். வேசிகளுக்குத் தீக்ஷைகொடுத்தால் இதுவரையில் நீங்கள் செய்தபாவம் தீரவேண்டுமென்றும், இனியாவது ஒருவனைவஞ்சித்து மோசஞ்செய்யாமல் இல்வாழ்க்கையிலொருவனை அடுத்திருங்களென்றும் போதிக்காமல், அவர்கள் விபசாரத்தால் சம்பாதித்த பொருளைப் பலவித மோசடியால் சூதடிசெய்து அபகரித்துக்கொள்வதுமன்றியில் உங்களிஷ்டப்படி அவாள் நடக்கும்படி செய்துகொள்ளுகிறீர்கள்.

ஒருவனுக்கு நீங்கள் உபதேசஞ்செய்தால் அஷ்டாக்ஷரம், பஞ்சாக்ஷரம், சடாக்ஷரம், அநுஷ்டானம், மூலமந்திரம், ஆசமநமந்திரம், திக்குமந்திரம், பிரணவம் முதலானவைகளில் எதையாகிலும் ஒன்றை மணியடிக்கிற சத்தத்திலே கேட்டுங் கேளாமலும் அவன் காதிலே குசுகுசுவென்று சொல்லிவிட்டு இந்த உபதேசங்களை வெளிவிட்டால் சிரசு வெடிக்குமென்று பயமுறுத்திக் காணிக்கைகளைக் கிரகித்துக்கொள்வதுமன்றியில் ஒருவன் மனைவி உபதேசம்பெற்றுக்கொள்ள வந்தால் அவளைத்தங்கள் வைவசப்படுத்திக்கொள்வதும், ஒருவன் ஏன் குருக்களே இளைத்துப்போனீரென்று கேட்டால், (ஆனசீஷன் சாகவுலீலை அந்திரஷ்டைபடிக்குக் கருமஞ்சேய்வாருமில்லை) யென்று சொல்வது உங்கள் துர்க்குணம் ஒருவிதமல்ல, பலவிதமாகையால் அதுகளை என்னால் சொல்லிமுடியாது.

53.—ப - கு. இராஜராஜாக்கள் முதலானவாளுங் காணிக்கை கப்பணங்கட்டி எங்கள் பாதத்தில் தீர்க்கதெண்டஞ் செய்கிறார்கள். உங்கள்பாதத்தில் ஒருவருஞ் செய்யவில்லையல்லவா ?

மா - ஆ.—மாதாசில்பி பிதாசாஸ்த்ரம், அரூபம் ரூபமானசம்
யயாத்பிண்டோத்பவஞ்சைவ தயாபித்ரிபிப்ருகர்மதா

మాతాశిల్పిపితాశాస్త్రం అరూపంరూపమానసం।
యయాత్పిండోద్భవంచైవ దయాపిత్రిపిబ్రుకర్మతా॥

என்கிற சுலோகப்படி தேவாலயம் பிரமாலயங்களில் சிருஷ்டித்துவைத்திருக்கும் விக்கிரகங்களுக்குச் சில்பி தாயென்றும், பிதா சாஸ்திரமென்றும், சில்பநூல் முறையிட எங்களால் சிருஷ்டிக்கப்பட்ட விக்கிரகங்களைத் திரிகாலமும் நீங்கள் பூசித்து வணங்கிவருவது எங்களை வணங்கினதல்லவா ! இது உமக்குத்தெரியாத காரணமென்ன ?

54.—ப - கு. எங்கள் வீட்டில் யாவருஞ் சாப்பிடுகிறார்கள், உங்கள் வீட்டில் ஒருவருஞ் சாப்பிடுகிறதில்லை.

மா - ஆ.—ஓ பஞ்சாங்கங்குண்டையனே ! வியாசன் முதலான விப்பிராளாகிய நீங்கள் பஞ்சமஜாதியாகையால் பூர்வத்தில் யாவரும் உங்கள்வீட்டில் புசியாதிருப்பதைக்கண்டு வேதவிசாரணையில்லாத துரைத்தனத்தாரை யடுத்து அவர்களைப்

பலவிதமான சூதடியினலே மோசடிசெய்து உங்கள் வசப்படுத்தி நீங்கள் மேலானஜாதியென்றும் எந்திர தந்திர மந்திரஜால வித்தையினல் யாவரும் பிரமிக்கும்படி பிரமரிஷிகளென்று பகல்வேஷம் போட்டுக்கொண்டு வந்து அக்காலத்திலிருந்த அவிவேக துரைத்தனத்தாருக்கும் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாருக்கும் அஷ்டகர்மங்களினல் மித்திரபேதஞ்செய்து அரசனைச் சார்ந்தவாளெல்லாம் வலங்கையென்றும், கம்மாளரை இடங்கையென்றும் ஒருவரிடத்தில் ஒருவர் சாப்பிடக்கூடாதென்றும், தங்கள் வீட்டில் மாத்திரம் சகலருஞ் சாப்பிடலா மென்றும் ஏற்பாடு செய்தீர்கள். அக்காலத்தில் உங்களை இன்னரென்றறியாத சிலர் சாப்பிட்டபோதிலும் உங்கள் வம்மிசபாரம்பரையறிந்த ரஜபுத்திரர், பொந்திலியர், லாலாக்கள், குசிலாத்தியர், மராட்டியர், கன்னடியர், வீரசைவாள், ஜைநவேளாளர், பட்டுநூற்காரர், சாத்தாணியர், வள்ளுவர், துலுக்கர் மலுக்கர் முதலானவாள் உங்கள் வீட்டில் இன்னமுஞ் சாப்பிடுகிற வழக்க மில்லையல்லவா? ஆனல் இக்காலத்தில் உங்களை அறியாதவாள் சிலர் சாப்பிடுகிருர்கள். பஞ்சகவுடாள் பஞ்சதிராவிடாள் உங்கள் வீட்டில் சாப்பிடாததற்குக் காரணமென்ன? நீங்கள் விப்பிராளென்கிற காரணமேயல்லாமல் வேறென்றல்லவே! சிலஜாதிகள் உங்களுடைய துர்ப்போதனைகளுக் ககப்பட்டுச் சாப்பிட்டபோதிலும் நீங்கள் ப்ரம்மகுலமென்றுசொல்வது உண்மைப்படமாட்டாது. அப்படி நீங்கள் ப்ரம்மகுலமானல் பஞ்சகிர்த்தியத்தில் ஏதாவது ஒருகிர்த்தியமாவது நீங்கள் செய்யவேண்டுமே! ஒன்றுந் தெரியாமல் ஜோகி ஜங்கமரைப்போல் யாசகஞ்செய்கிற கிராமபாச்சகாளாகிய உங்களை ப்ரம்மவம்மிசமென்று யார்தான் சொல்லுவார்கள்? தெரிந்தவாளொருக்காலுஞ் சொல்லார்களல்லவா?

55.—ப-து. நீங்கள் செய்யும் பஞ்சகிர்த்தியத்தால் உலகசம்ரக்ஷணையாகுதென்று வெகுபூசிதமாய்ச் சொல்லுகிறீர்கள். உங்களைப்போல் சகலமான ஜாதிகளும் செய்யவில்லையா? அவாளாலே உலகரக்ஷணை யாகவில்லையா?

மா-ஆ.—ஆதியில் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாரை யடுத்து வேதாகமபுராணங்களைக்கற்ற வியாசன் முதலான வம்மிசத்தா

ளைப்போல் குருத்துரோகிகள் ஒருவருமில்லை. மற்ற ஜாதிக ளெல்லாம் உங்களைப்போல் யாசகஞ்செய்யாமல் எங்களையடுத்து பஞ்சகிர்த்தியமும் கற்றுக்கொண்டு குருவிசுவாசமாய் நடக்கிறார்கள். தாங்களுஞ் ஜீவனஞ்செய்துகொண்டு உங்களுக்கும் பிச்சைபோடுகிறார்கள். அல்லது ஒருவேளை அவாளும் உங்களைப்போல் குருவிசுவாச மில்லாமற்போனால் அவாளையும் குருத்துரோகியென்றே சொல்லப்படும்.

56.—ப - த. ஓ மார்க்கசஹாய ஆசாரி! நீங்கள் மதுமாமிச பக்ஷணை செய்கிறீர்கள் உங்களை விஸ்வப்ரம்ம வம்மிசமென்று சொல்லலாமா ?

மா - ஆ.—ஓய் பஞ்சாங்கந்துண்டையனே! நீங்கள் செந்நெல்கிழங்கு முதலியவைகளினால் சிரார்த்தஞ் செய்தால் ஒருமாதம்வரையில் பிதுர்க்கள் திருப்தியடைகிறார்களென்றும், மச்சமாமிசத்தாற் செய்தால் இரண்டுமாதம் வரையிலும், மான் மாமிசத்தாற் செய்தால் மூன்றுமாதம் வரையிலும், செம்மறியாட்டு மாமிசத்தாற்செய்தால் நான்குமாதம் வரையிலும், பக்ஷிகளின் மாமிசத்தாற்செய்தால் ஐந்துமாதம் வரையிலும், வெள்ளாட்டின் மாமிசத்தாற்செய்தால் ஆறுமாதம் வரையிலும், புள்ளிமான் மாமிசத்தாற்செய்தால் ஏழுமாதம் வரையிலும், கறுப்புமான் மாமிசத்தாற் செய்தால் எட்டுமாதம் வரையிலும், கலைமான் மாமிசத்தாற்செய்தால் ஒன்பதுமாதம் வரையிலும், கொழுத்தமுள்ளம்பன்றி - காட்டெருமைக்கடா மாமிசத்தாற் செய்தால் பத்துமாதம் வரையிலும், முயல் - ஆமை மாமிசத்தாற்செய்தால் பதினொருமாதம் வரையிலும், பசுவின்பால்-தயிர்-நெய்களாற்செய்தால் ஒருவருடம் வரையிலும், கிழவெள்ளாடுக்கடாவின் மாமிசத்தாற் செய்தால் பன்னிரண்டு வருடம் வரையிலும், முள்ளுள்ள வாளைமீன்-கட்கமிருகம்-சிவந்த ஆடு இவைகளின் மாமிசத்தாற்செய்தால் அளவற்ற நாள்வரையிலும், பிதுர்க்கள் திருப்தி யடைகிறார்களென்று மநுஸ்மிருதியிற் சொல்லியிருக்கின்றபடி நீங்கள் செய்யவில்லையா ?

57.—ப - த. யாகாதி கிர்த்தியங்கள் செய்து மதுமாமிச பக்ஷணை செய்தால் தோஷமில்லையென்று எங்கள் வியாசபகவான் சொல்லியிருக்கிறார். நீங்கள் சிருஷ்டித்த விக்கிரகங்களு

க்கு நாங்கள் மூர்த்திகரத்தைக் கொடுக்கிறோம். அதினால் யாவரும் இகபரமடைகிறார்கள்.

தெய்வாதீனம்ஜகத்சர்வம் மந்த்ராதீனந்துதைவச:
தன்மந்த்ரம்பிராம்ஹணாதீனம் ப்ராம்ஹணோமமதேவத:
దైవాధీనం జగత్సర్వం మంత్రాధీనంతు దైవతః।
తన్మంత్రంబ్రాహ్మణాధీనం బ్రాహ్మణోమమదేవత॥

என்னும் சுலோகப்படி தெய்வத்தின் வசமாயிருப்பது உலகம், அந்தத்தெய்வம் மந்திரத்தின் வசப்பட்டது, அம்மந்திரம் பிராமணாளுக்கு ஐக்கியமாயிருப்பது, அந்தப் பிராமணாள் உலகத்தாருககெல்லாம் தெய்வமென்று யாவரும் வணங்குகிறார்கள்.

மா-ஆ.—நீங்கள் உலகத்தாருக்கு தெய்வமாயிருந்தால் உங்கள் மந்திரபலத்தால் இந்தவிக்கிரகங்களை நீங்களே சிருஷ்டிக்கக்கூடாதா? அல்லது நாங்கள்சிருஷ்டித்த விக்கிரகங்களை நீங்கள் பேசவும் சிரிக்கவும் நடக்கவும் செய்யக்கூடாதா? அல்லது நீங்களாவது யாசகஞ் செய்யாமல் ஜீவனஞ்செய்யக்கூடாதா?

58.—ப-த. நம்முடைய வியாசபகவான் விதித்திருக்கின்ற விதிப்படி யாகாதிகிர்த்தியங்களை நடப்பிப்பவர்களே ப்ரம்மவம்மிசமென்று சொல்லப்படும்.

மா-ஆ.—ஓய் பஞ்சாங்கங் குண்டையனே! எல்லா உயிரையுந்தன்னுயிர்போல் நினைப்பவர்கள் சீவகாருண்ய முடையவர்களே யல்லாமல் பசுவைக் கொண்டுவந்து கைகால் முதலான கொம்பையுங்கட்டி யாகஞ்செய்கிறோ மென்று யாகக்குழியிலே தள்ளி எரிகரும்பு முதலானதால் பிராணவதை செய்து அந்த மாமிசத்தை மண்ணும் மயிரும் தோலும் நரம்பும் எலும்புமாய் அசுசியாயிராநின்ற மாமிசத்தை சோமபாணத்துடன் பொசிப்பது தேவர்களுக்குப் பிரீதியென்று நீங்கள் செய்வது உயிர்வேதனையல்லவோ? நாளை நரகவேதனைக் காளாவதில்லையோ? நீங்கள்தானா சீவகாருண்யமுடையவர்கள்.

59.—ப-த. தேவர்களுக்குப் பிரீதியாகையால் எந்த யாகமுஞ் செய்யலாம்.

மா - ஆ.—ஓப் பஞ்சாங்கங் குண்டையனே! நீங்கள் பௌண்டரி யாகமென்று ஒருபர்ணசாலையமைத்து அந்தப்பர்ணசாலையின்மீது வாலிபமான ஓர்கைம்பெண்ணையும் ஓர்வாலிபனையும் வஸ்திரபூஷணாலங்கிருதஞ்செய்து இருவரையும் அந்தப்பரணியின்மீது புணரச்செய்து அந்தப் பரணின்கீழ் விப்பிராளாகிய நீங்கள் ஏககூட்டமாய்க்கூடிக்கொண்டு வேதகோஷ்டத்துடன் இந்த யாகத்தை நிறைவேற்றும்போது பரணின் மீது புணர்ச்சிசெய்கிற கைம்பெண்ணுக்கும் பாலியனுக்கும் சுக்கில சுரோணிதம் வெளிப்பட்டு அந்த ஓமாக்கினியில் விழுந்தால் தேவர்கள்முதலான யாவர்களுக்கும் இகபரசாதனமுண்டென்று நீங்கள்செய்கிற அக்கிரமங்கள் ஒருவிதமல்ல, பலவிதமாகையால் அந்தயாகங்களையெல்லாம் என்னாற் சொல்லிமுடியாது.

60.—ப - த. நாங்கள் செய்கிற யாகம் தேவர்களுக்குப் பிரீதியாகையால் எங்களைத்தான் ப்ரம்மவம்மிசமென்பார்கள், உங்களையொருவருஞ்சொல்லார்கள்.

மா - ஆ.—ஓப் பஞ்சாங்கங்குண்டையனே! நீ ப்ரம்மவம்மிசமானால் நீ உற்பவித்தபோது உனக்கும் உன்தாய்க்கும் சம்பந்தப்பட்டிருந்த உந்திக்கொடியைக் கண்டிக்க உன்கையில் ஆயுதத்தோடே பிறந்து உந்திக்கொடியைக் கண்டித்தாயோ! அல்லது உன்தாய் பல்லால் கடித்தாளோ! எங்களாயுதமல்லவோ அந்த உந்திக்கொடியைக் கண்டித்ததுமன்றியில் கர்ப்பாதனம்-பும்ஸவநம்-சீமந்தம்-ஜாதகர்மம் - நாமகரணம் - அன்னப்பிராசநம்-சௌளம்-உபநயநம்-ஸ்ராமயம்-ஆக்நேயம்-வைச்வதேவம் ப்ரஜாசத்யம்-கோதானம்-ஸநாதகம்-விவாஹம்-பைதருமேகம்-என்னும் சோடசகர்மங்களால் உங்களை இருபிறப்பாளரென்று சொல்லாமல் பரிசுத்தமாகச்செய்து பாலியதிசை வந்தபோது ஒரு கன்னியைக் கலியாணஞ்செய்ய எங்கள் முத்திரையாகிய மாங்கில்யத்தை அந்தக்கன்னியின் கழுத்தில்கட்டினபின்பு அந்தக்கன்னியின் கரத்தை நீ பாரியாளென்று பற்றும்படி பாத்தியமுண்டாச்சுது. எங்களுடைய குருமுத்திரையான மாங்கில்யம் அந்தக்கன்னியின் கழுத்தில் நீகட்டுவதற்குமுன் அம்மான் பெண் அல்லது அத்தைபெண்ணானாலும் அந்தக் கன்னியின் கரத்தைப்பற்ற உங்களுக்குப் பாத்தியமில்லையல்லவா? ஒரு

வேளை துன்மார்க்கமாய் அவள்கரத்தைப் பாத்தியமென்று பற்றினல் உங்கள்கரத்தை மநுநீதிப்பிரகாரம் மணிக்கட்டுவரையிற் கண்டிக்க எங்களுடைய ஆயுதமிருக்குதென்றல்லவோ நீங்களஞ்சியிருக்கிறீர்கள். உங்கள் மரணகாலத்திலும் நாய்நரி கழுகு கோநாய் காகமுதலானதும் பிடுங்கித்தின்ன வொட்டாமல் உங்களைப் புதைக்க எங்கள் ஆயுதமாகிய மண்வெட்டி யல்லவோ! நீங்கள் உயிருட னிருக்கும்போதும் இறக்கும்போதும் உங்களைக் காப்பாற்றுவது நாங்கள் செய்யும் பஞ்சகிர்த்தியமென் றெண்ணுமல் எங்களை இகழுவது ஞாயமா? உங்களுடைய வம்மிசத்தில் எங்களை இகழாத அனந்தங் கல்விமான்கள் மேலான உத்தியோகத்தில் சௌக்கியமடையவில்லையா? இது உமக்குத்தெரியாதா! நீர் அழைத்த பஞ்சாயத்தாரே உமக்கும் உம்மைச்சார்ந்தவர்களுக்கும் தீர்ப்பு சொல்லுவார்கள்.

இரண்டாவது
பஞ்சாயத்தார் தீர்ப்பு.

பஞ்சாயத்தாரில் விஸ்வநாத சாஸ்திரியார், நாகோசிராவ், சண்முகப்பண்டிதர், சுப்பராய முதலியார், வேங்கட்ராமநாயுடுகாரு முதலானவர்களும் பஞ்சாங்குண்டையனை நோக்கி நாங்கள் சொல்வதைக் கிஞ்சிற்று கியாபகமாய்க்கேளும், அஃதாவது.—

விராட்விஸ்வப்ரம்மா பஞ்சகிர்த்தியங்களையும் செய்வதற்குப் பஞ்ச கர்த்தாக்களையும் பஞ்ச சத்திகளையும் படைத்தார். அந்தப் பஞ்சகர்த்தாக்களையும் பஞ்சசத்திகளையும் வேதாகமங்கள் அனுஷ்டிக்கும்படி கூறுகின்றன. அந்தவேதாகமங்கள் சரியாபாதம் - கிரியாபாதம்-யோகபாதம்-ஞானபாதம் எனநான்கு பாதங்களையுடையனவா யிருக்கும், இந்த நான்குபாதங்களின் விதிநெறிவழுவாமல் அனுஷ்டிப்பவர்கள் இகபரமடைவார்களென்றுகூறப்பட்டிருக்கின்றது. அப்படிக்கிருக்க,

உலகாயித மதஸ்தர் இம்மையிற் சுகமே சுவர்க்கமென்றும், துக்கமே நரகமென்றும், சரீரமழிந்தபின் மோக்ஷநரகமில்லையென்றுங் கூறுவார்கள்.

பௌத்த மதஸ்தர் பஞ்சபூதத்தினுலாகிய சரீரத்தில் புத்திதத்துவமே யுள்ளதென்றும், புத்திதத்துவமுதலிய எல்லாப் பொருள்களும் க்ஷணத்திலழியுமென்றும் ஆத்துமாவும் ஈஸ்வரனுமில்லையென்றுஞ் சொல்லுவார்கள்.

ஆருகத மதஸ்தர் அருகனென்றொரு கடவுளுண்டென்றும், ஆத்துமாக்கள் அநாதியே! குற்ற முடையவையென்றும், அவை துலதேகம் வளர வளருமென்றும், அது தேயத் தேயுமென்றும், ஆத்துமாக்கள் தங்களாலும் உயிர்க்கொலைமுதலிய பாவங்களை நீக்குதலாலும் அதுவே முத்தி யென்றுங் கூறுவார்கள்.

சௌர மதஸ்தர் சூரியனே பிரமமென்றும், அதற்குமேல் ஒரு ஈஸ்வரனில்லையென்றுங் கூறுவார்கள்.

சந்திர மதஸ்தர் சந்திரனே பிரமமென்றும், அதற்குமேல் ஒரு ஈஸ்வரனில்லையென்றுங் கூறுவார்கள்.

நவக்கிரக மதஸ்தர் நவக்கிரகங்களுக்குமேல் ஈஸ்வர னொருவ னில்லையென்றும், நவக்கிரகங்களே ஆத்துமாக்களுடைய புண்ணியபாவங்களுக்கிடாய்ச் சுகதுக்கங்களையும் ஜநநமரணங்களையும் கொடுக்கின்றனவென்றுங் கூறுவார்கள்.

பஞ்சபூதாத்துமவாதிகள் பஞ்சபூதங்களுக்குமேல் ஒரு ஈஸ்வர னில்லையென்றும், இப்பஞ்சபூதங்களின் கூட்டங்களாலே தேகாதிப்ரபஞ்சங்க ளுண்டாகின்றனவென்றுங் கூறுவார்கள்.

இந்திரியாத்துமவாதிகள் மெய்-வாய்-கண்-மூக்கு-செவியென்னும் பஞ்சேந்திரியங்களுக்குமேல் ஈஸ்வரனொருவ னில்லையென்றும், ஆத்துமா ஒன்றில்லையென்றுங் கூறுவார்கள்.

அந்தக்கரணாத்துமவாதிகள் மனம்-புத்தி-சித்தம் - ஆங்காரம், என்கிற அந்தக்கரணங்களுக்குமேல் ஈஸ்வரனொருவ னில்லையென்றும், ஆத்துமாவொன்றில்லையென்றுங் கூறுவார்கள்.

பிராணாத்துமவாதிகள் பிராணவாயுவுக்கு மேல் ஈஸ்வரனொருவ னில்லையென்றும், ஆத்துமாவொன்றில்லை யென்றுங் கூறுவார்கள்.

சூனியவாதிகள் ஈஸ்வரனொருவ னிருந்தால் காணப்படமாட்டானு? காணப்படாமையால் ஈஸ்வரனில்லையென்று இவ்

வாறு சொல்லும் பாமராளுடைய போதனைக்குட்பட்டனந் தம்பேர் கெட்டார்கள்.

அவாளைப்போல் வியாசன் முதலான ரிஷிகள் மாயாவாதிகளாகையால் இவாளும் திரிமூர்த்திகளைத் தூஷித்திருக்கிற கட்டுக்கதைகளான பதினெண்புராண முதலானதையார்தான் நம்புவார்கள், இந்தப்பண்டிதர் மார்க்கசகாய ஆசாரி உங்கள் புராணங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் யாவருக்கும் நன்ருய் விளங்கும்படி உம்மிடத்தில் தர்க்கித்ததற்கு மறுமொழிசொல்ல வகையில்லாமல் நீ பிரமை கொண்டது யாவருக்கும் நன்ருய்த்தெரிந்திருப்பதால் இனி விஸ்வப்ரம்ம வம்மிசத்தார் வேதவிதிப்படி விவாகமுடிப்பதற்கு இந்தப் பஞ்சாங்கங் குண்டையன் முதலான விப்பிராள் யாதொரு தடங்கல் செய்யக்கூடாதென்று தீர்ப்பு கொடுத்தார்கள்.

62.—ப-து. இந்தப் பஞ்சாயத்தார் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாருக்கு வேதவிதியுண்டென்று கொடுத்த தீர்ப்பு தனக்குச் சம்மதியில்லாமல் அச்சபையில் இராநின்ற பண்டிதர் சோமசுந்திரப்பிள்ளை முதலானவர்களை நோக்கி இந்தப் பஞ்சாயத்தார் கம்மாளரைப் பார்ப்பாரென்று தீர்ப்புக் கொடுத்தார்கள். ஐயோ! இந்தக்கம்மாளர் பார்ப்பாராவதற்குக் கல்வியும் - அடக்கமும் - அருளும் - ஊக்கமும் - ஒழுக்கமும் - கேள்வியும் - செய்நன்றியறிதலும் - நட்பும் - நடுநிலைமையும் - புறங்கூருமையும் - பெரியாரைத்துணைக்கொள்ளலும் - பிறன்மனையாளை விரும்பாமலும் - வஞ்சனை சூதுகளில்லாமையும் - மதுமாமிசபக்ஷணையும் செய்யாதிருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் சூத்திராளைப்போல் சில கம்மாளர் துஷ்டதேவதைகளுக்கு ஆடு கோழி பன்றி பலியிடுவதும், மதியீனரைப்போல மதுபானஞ்செய்யும் துன்மார்க்காளைப் பார்ப்பாரென்று சொல்லலாமா? நம்மவர்களில் நற்சிந்தையும் பிராமண விசுவாசமும் பக்தியும் ஒருவரிடத்திலேயாவதிருந்தால் இந்தக்கம்மாளரைப் பார்ப்பாரென்று பஞ்சாயத்தார் தீர்ப்புக் கொடுப்பார்களா? நீங்கள் பத்துபேரும் பேசாதிருப்பது அநீதமல்லவா.

மூன்றாவது.

63. பண்டிதர் சோமசுந்தரப்பிள்ளை சம்பாஷணை.

பண்டிதர் சோமசுந்தரப்பிள்ளை அச்சபையிலிருக்கின்ற நான்குவர்ணாசிரமத்தாரையும் நோக்கி இந்தபஞ்சாங்கங் குண்டையன் தன்குற்றத்தை யோசியாமற் பிறரைத் தூஷிப்பதினாற் பயனடையமாட்டான். அஃதாவது,

வேமநசதகம்.

தல்லியூர்வசிலஞ்ச தனயாலுமாதிக தானுபிராஹ்முடனக தகுனெஜகதி
வசிஷ்டகுலமனி வசுதலோநெருகரா விஸ்வதாபிராம வினரவேமா.

என்று இவரைப் பலரும் பல இழிவாய்த் தூஷித்திருப்பதை இந்தப் பஞ்சாங்கங் குண்டையன் முதலானவர்களுக்கு மகாசாஸ்திரிகளாகிய பஞ்சாயத்தார் விஸ்வப்ரம்மவம்மிசத்தாருக்கு வேதவிதியுண்டென்று தீர்ப்புக் கொடுத்திருக்க அந்தத் தீர்ப்பை இந்தப்பஞ்சாங்கங் குண்டையன் யோசிக்காமற் பாமரரைப்போல வெகுலேசாய்க் கம்மாளரைப் பார்ப்பாராகப் பஞ்சாயத்தார் தீர்ப்புக் கொடுத்தார்களென்று முறையிடுகிறானல்லவா? அந்தக் கம்மாளரைப் பார்ப்பாரென்பதற்கு இருபிரப்பாளரல்ல. கம்மாளரென்றால் விஸ்வப்ரம்ம வம்மிசமென்று வேதாகமங்கள் முறையிடுகின்றது. அப்படிக்கிருக்க இவனெப்படி அவாளுக்கு வேதவிதி யில்லையென்று சொல்லுகிறான். இதன்றியில் இந்தக்குண்டையன் முதலான விப்பிராளிடத்தில் இந்த இராமாஞ்சுலுநாயுடுகாரும், சாம்பசிவபிள்ளையும், இன்னுஞ்சிலரும் வேதம் வாசிக்கவேண்டுமென்று பத்துவருடத்துக்குமுன் கேட்டபோது இந்தக் குண்டையன் முதலான விப்பிராள் சதுர்முகப்ரம்மாவின் முகத்தில்-பிராமணர்களும், புயத்தில்-க்ஷத்திரியர்களும், தொடையில்-வைசியர்களும், பாதத்தில்-சூத்திரர்களும் பிறந்தார்களாகையால், சூத்திரன் வேதம் வாசிப்பதைக்கேட்டால் ரௌரவாதிநரகத்துக் காளாவானென்றும், அல்லது ஒருவனிடத்தில் வேதாகமங்களை வாசித்தால் போதிக்கப்பட்டவனும் வாசிக்கப்பட்டவனும் வம்மிசமற்று நரகத்துக் காளாவானென்றும் வியாசபகவான் கட்டளையென்றும்

சொன்னதற்கு அவாள் நாங்கள் வேதம் வாசிக்க வேண்டுமென்று தெரியாமற் கேட்டதற்கு பிராயச்சித்தமுண்டோ வென்றூர்கள். அதற்கு இந்தப் பஞ்சாங்கந் குண்டையன் முதலானவிப்பிராள் பஞ்சகவ்யத்தால் பிராயச்சித்தஞ் செய்யவேண்டுமென்று தீர்ப்புக்கொடுத்தார்கள்.

64. அந்தத் தீர்ப்பைப் பெற்றுக்கொண்டு விஸ்வப்ரம்ம வம்மிசத்தாரிடத்தில் இவாள் நாங்கள் வேதம் வாசிக்கவேண்டுமென்பதற்கு அவாள் அண்டபுவன சராசரங்களையெல்லாம் விராட் விஸ்வப்ரம்மத்தால் சிருஷ்டித்ததேயல்லாமல் வேறல்ல ஆனுல்விப்பிரனுகிய வியாசன் கலியுகம்பிறந்த வெகுகாலத்திற்குப் பின்பு உற்பவித்தவன், ஜாதிபேதங்களை ஏற்படுத்தி சூத்திரன் வேதம் வாசிக்கக் கூடாதென்று சிலதப்புசுலோகங்கள் சொல்லியிருக்கிறுன். அந்தசுலோகத்தை இந்த விப்பிராள் சொல்லுவார்கள். ஆனுல் ஒருவன் வேதம் வாசிக்க வேண்டுமென்றுகேட்டால் அவனுக்குப்போதிக்காதவன் நரகமடைவானென்று தங்களை வந்தடுத்தவாளுக்கு வேதாத்தியயனஞ் செய்துவைத்தார்கள். அந்த வேதத்துக்குடையவாள் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாரென்று முறையிடுவதால், அவாள் வேதவிதிப்படி விவாகஞ்செய்வதென்று பஞ்சகவுடாள் பஞ்சதிராவிடாள் முதலானவாளும் விஸ்வப்ரம்ம வம்மிசத்தார் செய்யும் பஞ்சகிருத்தியத்தால் உலக சம்ரக்ஷணையாகி சகல உயிர்களும் சவுக்கியத்தை அனுபவிக்கிருர்களென்றும், அவர்களில்லாவிட்டால் உலகமில்லை யென்று வேதாகமங்கள் முறையிடுகின்றனவென்றும் அவாள் வேதவிதிப்படி செய்வதென்று பஞ்சாயத்தார் தீர்ப்புக் கொடுத்தார்கள். அந்தத் தீர்ப்பை ரத்துசெய்ய யாராலேமுடியும், மணியில்நின்ற ஒளியைப்பிரிக்கப்படுமா! மெய்க்குமுன் பொய்நிற்குமா! வியாசன் முதலானவர்கள் செய்த பதினெண்புராண முதலான நூல்களிலடங்கிய சட்டுக்கதைகளெல்லாம் பண்டிதர் மார்க்கசஹாய ஆசாரியரால் யாவருக்கும் நன்மைதெரிந்தபடியால் இனியவாள் வேதவிதிப்படி செய்வதை யொருவரும் ஆட்சேபனை செய்யக்கூடாது. ஆனுல் இச்சபையில் இராநின்ற நான்கு வர்ணுசிரம

த்தாரும் கர்மமாகிற வினைகளை நுழையவொட்டாமல் தர்மமாகிற வேலிகட்டி இந்தப் பஞ்சாங்கங் குண்டையன் முதலான துன்மார்க்கா ளென்கிற களைகளை வேரோடே களைந்து பஞ்சகவுடாள் பஞ்சதிராவிடாளாலே விளங்காநின்ற விவேகமாகிற நீர்ப்பாய்ச்சி வேதவிதியாகிய பயிரை விளையச்செய்தால் லோகத்திலே யாவரும் இகபரமடையலாம், ஆகையால் இனி நான் குவர்ணாசிரமத்தாரும் வேதாத்தியயனம் சிறுவர் முதலானவாளுக்கும் போதிக்கும்படி கோருகின்றேன்.

65.—ப - து. கம்மாளர் பார்ப்பாரானபடியால் இனி சூத்திராள் கூட பார்ப்பாராவதற்கு வேதாத்தியாயனஞ் செய்யவேண்டியதுதானே யென்று விஸ்வப்ரம்மவம்மிசத்தாருடன் அடிதடி சண்டை செய்தார்கள்.

நான்காவது.

கனம்பொருந்திய ஷை ஜில்லா போலீசு துரையவர்கள்
விஸ்வப்ரம்ம வம்மிசத்தார்
மேஜஸ்திரேட்டில் பிரியாது செய்தார்கள்.

66. மேஜஸ்திரேட்டு துரைகள் வாதி மார்க்கசகாய ஆசாரி முதலானவாள் தங்கள் வீட்டில் செய்யும் விவாகத்தைக்குறித்து ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யும்போது பிரதிவாதி பஞ்சாங்கம் குண்டையன் முதலானவாள்வந்து ஆட்சேபித்து அடிதடி சண்டைசெய்து (சு) சாக்ஷிகளால் ருசுவானதின்பேரில் பஞ்சாங்கங்குண்டையன் முதலானவாளுக்கு அபராதம்போட்டு விவாகநஷ்டத்தைக்குறித்து சிவில்கோர்ட்டில் பிராதுசெய்யும்படி மார்க்கசகாய ஆசாரிக்கு மேஜஸ்திரேட்டு துரைகள் டிகிரி கொடுத்தார்கள்.

ஐந்தாவது

67. சென்னப்பட்டணத்தைச் சார்ந்த சித்தூர்ஜில்லா அதாலத்துகோர்ட்டு மஹாகனம்பொருந்திய கவர்ன்மெண்டு ஜட்ஜி டேகர் துரையவர்கள் சமுகத்துக்கு.

மேற்படி ஜில்லாவைச் சார்ந்த சதுர்ப்பேரியி லிருக்கும் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாரில் மார்க்கசஹாய ஆசாரி முதலான வாதிகள் கக - பேர் எழுதிக்கொண்ட விண்ணப்பமாவதென்னெனில்,

மேற்படி சதுர்ப்பேரியி லிருக்கும் பஞ்சாங்கங் குண்டையன் முதலான பிரதிவாதிகள் ௪௦ - பேர் ஏகமாய்க் கும்பல்கூட்டிக்கொண்டு வந்து நாங்கள் விவாகஸ்தம்பப் பிரதிஷ்டாபனஞ் செய்வதை ஆக்ஷேபனை செய்தார்கள்.

மேற்சொல்லிய பிரதிவாதிக ளழைத்துவந்த பஞ்சாயத்தார் இந்தப் பஞ்சாங்கங் குண்டையனை நீக்கி உங்கள் வம்மிசத்தில் வாத்திமாரை வைத்து விவாகஞ்செய்ய எத்தனித்தபடியால் எங்களை பஞ்சாயத்தாராகக் கோரிக்கொண்ட இந்தப்பஞ்சாங்கங் குண்டையன் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் நீங்கள் வேதச்சுருதிப் பிரமாணமாய் உத்திரவு கொடுத்தால் உங்கள் விஸ்வப்ரம்ம வம்மிசத்தில் வாத்திமாரை வைத்து வேதவிதிப்படி விவாகஞ் செய்துக்கொள்ளலா மென்றார்கள்.

68. மேற்சொல்லிய பஞ்சாயத்தார் முன்னிலையில் பஞ்சாங்கங் குண்டையன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் வேதச்சுருதிப் பிரமாணமாய் உத்திரவுகொடுத்தோம்.

பஞ்சாயத்தார் முதலானவாளும் விஸ்வப்ரம்ம வம்மிசத்தார் வேதவிதிப்படி விவாகஞ்செய்வதற்கு பஞ்சாங்கங் குண்டையன் முதலான விப்பிராள் தடங்கல்செய்யக்கூடாதென்று தீர்ப்புக்கொடுத்தார்கள்.

அத்தீர்ப்புப் பிரகாரம் இந்தப் பஞ்சாங்கங் குண்டையன் முதலானவாள் ஒத்துக்கொள்ளாமல் கம்மாளஜாதி தவிற மற்ற ஜாதிகளெல்லாம் எந்தத்தேசத்திலும் எந்தநாட்டிலும் தங்களுக்கு உப பலமாயிருக்க கவரன்மெண்டு துரைத்தனத்தில் எந்தக்கோர்ட்டிலும் எந்தநாட்டிலும் தங்களுடைய வம்மிசத்தாராகிய விப்பிராள் தானே சகலத்துக்கும் அதிகாரிகளாயிருக்கிறார்களாகையால் அவர்களைக்கொண்டு இந்தக்கம்மாளரை வெகுலேசாய் செயிக்கலாமென்று மேற்படி குண்டையன் முதலா

ன விப்பிரர்கள் கும்பல்கூடிக்கொண்டு எங்களைப் பிடித்து அடித்து சண்டைசெய்ததை மேற்சொல்லிய பஞ்சாயத்தார் முதலான பதினைந்து சாக்ஷிகளைத் துரையவர்கள் விசாரணைசெய்தால் தங்கள் சித்தத்துக்கே நன்றாய்த் தெரியலாம்.

69. மேற்சொல்லிய பதினைந்து சாக்ஷிகளையும் போலீஸ் துரையவர்கள் விசாரணைசெய்து இந்தப்பஞ்சாங்கங் குண்டையன் முதலான விப்பிராளுக்கு அபராதம்போட்டு விவாக நஷ்டத்தைக்குறித்து கோர்ட்டில் பிரியாதுசெய்யும்படி டைரி கொடுத்தார். இத்துடன் தாக்கல் செய்திருக்கும் அந்த டைரியையும் தாங்கள் தயவுசெய்து பார்வையிடவேண்டியது.

இந்தப் பரதகண்ட முழுமையும் தங்கள் கைக்குள்ளாக ஆளுகைசெய்து வருகிற மகாகனம்பொருந்திய இங்கிலீஷ் துரைத்தனத்தாரை இத்தீவுக்கு வரும்படியாகச்செய்த காரணம் தெய்வயத்தனமென்று யோசிக்கவேண்டி யிருக்கிற தெதினாலே யென்றால்.

உலகத்துக்கெல்லாம் ஒளியையுங் காந்தியையுந் தருகிற சூரியனை மேகமானது மறைத்ததுபோல் வியாசன் முதலான ரிஷிகள்கூடி உண்டுபண்ணின அக்கியான புராணங்களானது நீதியின் வெளிச்சத்தைப் பிரகாசிக்கவொட்டாமல் மறைத்திருந்தது. ஆனால் கார்மேகத்தைக் காற்றானது கலைத்து விலக்குவதுபோல் இங்கிலீஷுக்காரருடைய சத்தியமுந் தருமநீதியுமாகப்பட்ட சண்டமாருதங் கொஞ்சங் கொஞ்சமாக முன்னிருந்த அக்கியான விருளை விலக்கிவருகின்றது.

இப்பவும் விராட் விஸ்வப்ரம்மாவானவர் இங்கிலீஷுக்காரர்கள் கையிற் சத்தியத்தின் வாளையுஞ் சமாதானத்தின் கிரீடத்தையும் நீதியின் தராசையுங் கொடுத்திருக்கிறபடியினாலே இன்னுங் கொஞ்சகாலத்தி லிவடத்தில் விப்பிரசனங்களுக்குள்ளே யுண்டாயிருக்கிற சாதிபேதத்தினாலே வரும் சகல துர்க்குணங்களுமற்று நற்குணத்துக்காளாகவும்.

எங்கள் கலியாண சாமக்கிரியை நஷ்டம் ரூபாய் 550 - ம் வாதிகளுக்குப் பிரதிவாதிகள் கொடுக்கும்படியாயும், வாதிகள்

தங்களுக்குண்டா யிருக்கிற பாத்தியப்படிக்கு வேதபாராயண முதலியதுஞ் செய்துகொண்டு சகல கிரியைகளையும் எத்தேச த்திலும் எந்த நாட்டிலும் விஸ்வப்ரம்ம வம்மிசத்தார் தாராள மாய் நடத்திக்கொண்டு வரும்படியாயும், அதில் பிரதிவாதிக ளாகிய விப்பிராள் பிரவேசிக்கக் கூடாதென்றும் தீர்ப்புக்கொ டுக்கும்படி கோருகின்றேம்.

ஆருவது.

70. விஸ்வப்ரம்ம வம்மிசத்தார் சுபாசுபங்களைக்குறித்து
வேதவிதிப்படிச் செய்வதை
விப்பிராள் தடங்கல் செய்யக்கூடாதென்று
சித்தூர் ஜில்லா
அதாலத்துகோர்ட்டு தீர்ப்பு.

1814-ளு த்திய அசலுக்குச் சரியான நகல்.

அசல் நம்பர் 205, 1818-ளு த்தில் தீர்ப்பு.

வாதிகள்.	பிரதிவாதிகள்.
சதுர்ப்பேரியிலிருக்கும்	ஷை சதுர்ப்பேரியிலிருக்கும்
வெள்ளைஆசாரியார்.	பஞ்சாங்கங்குண்டையன்.
மார்க்கசகாயஆசாரியார்.	அருணசலஅய்யன்
ருத்திரஆசாரியார்.	வெங்கிடசுப்புசாஸ்திரி.
வெங்கிடாசலஆசாரியார்.	விஸ்வபதிசாஸ்திரி.
நல்லாஆசாரியார்.	தொட்டாசாரி.
குழந்தைஆசாரியார்.	எக்கியதீக்ஷதர்.
சின்னகண்ணுஆசாரியார்.	வியாசபட்டர்.
அருணசலஆசாரியார்.	சூரியநாராயணசாஸ்திரி.
மஹாதேவஸ்தபதியார்.	ஜோகிசாஸ்திரி.
தக்ஷணமூர்த்திஸ்தபதியார்.	வந்தவாசி சிரஸ்தாரையர்.
வரதஆசாரியார்.	
வக்கீல் அப்துல்சாயபு.	வக்கீல் அருணசலமுதலி.
வாதிகள் பக்ஷத்தில் தஸ்தாவேசுகளான வேதசாஸ்திரங்கள் விபரம்.	பிரதிவாதி பக்ஷத்தில் தஸ்தாவேசுகளாக தாக்கல் இல்லை.
உள்நம்பர். க-ல்-எசுர்வேதம்.	விசாரணைசாக்ஷிகள்.
,, உ-புருஷசூக்தம்.	ஆண்டியப்பமுதலி.
,, ௩-மூலஸ்தம்பம்.	சங்கரநாராயணசெட்டி.
,, ௪-வச்சிரசூசி.	கோபிசெட்டி.
,, ௫-வேமநபத்தியம்.	அப்பாசாமிபிள்ளை.
,, ௬-கபிலரகவல்.	வெங்கிடசுப்புநாயக்கன்.
,, எ-ஷை ஜில்லா மேஜஸ்ட்ரேட் டைரிநக்கல்.	

வாதிகள் கொடுத்த பிரியாது.

பிராம்ஹணோஸ்ய்முகமாசீத் - பாஹு-ராஜந்யக்ருத:
ஊருததஸ்யயத்வைஸ்ய: - பத்பியாகஞ்சுத்ரோ அஜாயதா:

எசுர்வேத வசனப்படிக்கு.

ப்ராசீதிஸாம்வஸந்தருதூநாம்
அக்னிர்தேவதாப்ரம்ஹத்ரவிணம்
த்ரிவ்ருத்ஸ்தோம: ஸௌபஞ்சதசவர்த்தனி
ஸ்த்ரியவிர்வயக்ருதமனூநாம்

புரோவாதோவாத: சாநகருஷி:
தக்ஷிண திசாம் க்ரீஷ்மருதூநாம்
இந்த்ரோதேவதாக்ஷத்ரத்ரவிணம்
பஞ்சதசஸ்தோம: ஸௌஸப்ததசவர்த்தனி

தித்யவாட்வய திரேதாயாநாம்
தக்ஷிணாத்வாதோவாத: ஸநாதநருஷி:
ப்ரதீசிதிசாம்வர்ஷருதூநாம்
விஸ்வேதேவா தேவதாவிட்த்ரவிணம்

ஸப்ததசஸ்தோமஸ்ஸவு ஏகவிகும்சவர்த்தனி
த்ரிவத்ஸவயோத்வா பரோயாநாம்
பச்சாத்வாதோவாதோ அபுவநஸருஷி:
உதீசிதிசாம் சரத்ருதூநாம்

மித்ராவருணௌதேவதா புஷ்டத்ரவிணம்
ஏகவிகும்சஸ்தோமசௌத்ரிணவவர்த்தனி
ஸ்துர்யவாட்வய ஆஸ்கந்தோயாநாம்
உத்தராத்வாதோவாத: ப்ரத்நருஷி:

ஊர்த்வாதிசாகும் ஹேமந்தசிசிரருதூநாம்
ப்ரஹஸ்பதிர்தேவதா வர்ச்சோத்ரவிணம்
த்ரிணவஸ்தோமஸ்ஸௌத்ரயஸ்த்ரிகும்ஸ
வர்த்தனிபஷ்டவாட்வயோபிபூரயாநாம்

விஷ்வக்வாதோவாத: சுபர்நஸருஷி:
பிதர: பிதாமஹா: ப்ரவர்த்ததேநவக:
பாந்துதேநோவத்வஸ்மின்பிரம்மந்நஸ்மின்
க்ஷத்ரோஸ்யாம்சிஷ்யஸ்யாம் புரோதாயாமஸ்மின்
கர்மந்நஸ்யாம தேவஹூத்யாகும்
ஸ்வாஹாவிஸ்வ பிராம்ஹணேயிதம்நமமா:

என்கிற வேதவாக்கியப் பிரகாரம்.

பஞ்சமுக ப்ரம்மாவினுடைய சத்தியோஜாத முகத்தில் ஸாநகருஷியும், வாமதேவமுகத்தில் ஸநாதநருஷியும், அகோர முகத்தில் அபுவநஸருஷியும், தற்புருஷமுகத்தில் பிரத்நஸருஷியும், ஈசாநமுகத்தில் ஸுபர்நஸருஷியும்.

இந்த ஐந்துபேரும் பஞ்சமுகத்தில் உற்பவித்த ப்ரம்மருஷிகளின் வம்மிசஸ்தர்களாகிய தாங்களே பிராமணுளென்று பாத்தியஞ் சுருதிவாக்கியப்படிக்கும் வழக்கப்படிக்கும் தங்களில் க-உ-ங-வாதிகளுடைய வீட்டில் விவாக முகூர்த்தங்கள் நடக்கும்பொருட்டாய் தாங்களனைவரும் யத்தனப்பட்டுக்கொண்டிருக்கையில் சங்கரசாதிகளான பிரதிவாதிகள் துராக்கிரதமாய் வீட்டுக்குள் பிரவேசித்துத் தாங்களே வேதோக்தப்பிரகாரம் நடப்பிவிக்கக் கூடாதென்றும், புராணோக்தமாய்த் தாங்களே நடத்திவைக்கிறதாயும், சொல்லித் தாங்கள் கும்பல்கூடி அடித்து விவாக முகூர்த்தம் நிறைவேருமல் தடங்கல்செய்து போட்டதாயும், அது சங்கதிகளைக்குறித்து மேற்படி ஜில்லா மாஜிஸ்ட்ரேட் துரையவர்களிடத்தில் தாங்கள் பிரியாதுகொடுத்ததற்கு அவர்களை விசாரணைசெய்து பிரதிவாதிகளுக்குத் தகுமான தெண்டனையும் விதித்து நஷ்டத்தைக்குறித்து ஜில்லாவில் பிரியாது செய்துகொள்ளும்படியாய் டைரிநகல் கொடுத்திருப்பதாகவும் ஆனதால் பிரதிவாதிகளால் கலியாணச்சாமக்கிரியை ரூபாய் ருரு0-ம் வாங்கிக் கொடுக்கும்படியாயும், வாதிகளாகிய தாங்கள் இனிமேல் நடப்பிக்கப்பட்ட சுபாசுபக் கிரிகைகளில் பிரதிவாதிகளெங்கும் எத்தேச கிராமங்களிலும் பிரதிவாதி வம்மிசத்தாரைப் பிரவேசிக்காம லிருக்கும்படியாயும் தீர்மானிக்கவேண்டுமென்று கண்டிருக்கிருர்கள்.

பிரதிவாதிகள் கொடுத்த ஆன்ஸர்.

பிரியாதில் கண்ட ப்ரம்மருஷிகளுக்கும் வாதிகளுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்றும், ப்ரம்மருஷி வம்மிசத்தாருடைய வம்மிசம் வாதிகளுடைய வம்மிசம் அல்லவென்றும், வாதிகள் பஞ்சமசாதிக்குச் சமதையானவர்களென்றும் ஆனதால் வாதிகள் பஞ்சாங்கஞ் சொல்லிக்கொண்டு வேதோக்தமாய் உபாத்தியாயஞ் செய்யக் கூடாதென்றும், வாதிக

ள்செய்கிற தொழில் வெகு நிக்ருஷ்டமானதென்றும், தாங்கள் சுருதிப் பிரமாணமாயும் பிராமணுளென்பதற்குத் திருஷ்டாந்தமாய் உலகத்திலிருக்கும் சமஸ்த வர்ணுசிரமத்தாருக்கும் பதங்களைக்கொண்டே சகல கிரிகைகளையும் நடப்பித்துக் கொண்டு வரப்பட்டவர்கள் நாங்கள் இருக்கையில் வாதிகள் மாமூலுக்கு விரோதமாய்த் தாங்களேயென்று கலியாண காரியங்கள் நடப்பிக்க யத்தனப்பட்டதேயன்றி தங்களால் நஷ்டஞ் சம்பவித்ததில்லை யென்று கண்டிருக்கிருர்கள்.

வாதிகள் கொடுத்த ரிப்ளை.

சத்தியோஜாதமுகமாசீது மனுவிஸ்வகற்மண ப்ரம்மாஉற்பவதி
வாமதேவமுகமாசீது மயவிஸ்வகற்மண ப்ரம்மாஉற்பவதி
அகோரமுகமாசீது த்வஷ்டவிஸ்வகற்மண ப்ரம்மாஉற்பவதி
தற்புருஷமுகமாசீது சில்பிவிஸ்வகற்மண ப்ரம்மாஉற்பவதி
ஈசான்யமுகமாசீது விஸ்வக்ஞ்யவிஸ்வகற்மண ப்ரம்மாஉற்பவதி

என்கிற வேதவாக்கியப்பிரகாரம்.

ஸாநகருஷி மனுப்பிரம்ம ரூபமும், ஸநாதநருஷி மயப்பிரம்ம ரூபமும், அபுவநஸருஷி துவஷ்டப் பிரம்ம ரூபமும், பிரத்நஸருஷி சில்பிப்பிரம்ம ரூபமும், சுபர்நஸருஷி விஸ்வைக்ஞ்ய பிரம்ம ரூபமும் இந்தப் பிரம்மருஷிகளில் வகுத்துக்கொண்டவர்களின் வம்மிசத்தார்களாகிய தங்களுக்கு வேதோக்தமாய் மேற்கண்ட ருஷிகளின் கோத்திர சூத்திரசாகை பிறவரைகளும் உண்டாயிருப்பதாகவும்.

மேலும் வேதப்பிரமாணம் சிருஷ்டி.

அயாமநுருக்ஜாதம்வா மயாதாரு யஜுஸ்ததா
தாம்ரத்வஷ்டா ரஜாசாமெள சிலாசில்பி அதர்வண:
ரெளப்ய ஸ்வர்ணுர்க்க ப்ரணவம் பஞ்சப்ரஹ்ம விதீயதே.

என்கிற பிரமாணப் பூர்வீகமாய் மநுப்பிரம்மாவுக்கு இரும்பு வேலையும், ருக்வேத பாராயணமும், மயப்பிரம்மாவுக்கு மரவேலையும், எசுர்வேத பாராயணமும், துவஷ்டப்பிரம்மாவுக்கு தாம்பரவேலையும், சாமவேதபாராயணமும், விஸ்வைக்ஞ்யப் பிரம்மாவுக்கு சுவர்நவேலையும், பிரணவவேத பாராயணமும் ஆகிய இந்தப்பஞ்சவித கன்மங்களை அனுஷ்டித்து விதிப்படி வருகிறதினுலே உலக சம்ரக்ஷணையாகி வருகிறதாகவும்.

ஆஹூதி விதிப்பிரமாணம்.

ஔபாசனமஹோராத்ரம் மனுர்லோஹமஹாஹூதி
ஸ்வஹாசிதிறஞ்ஞேப்ருத்வீ தஸ்யபிதிர்ணேற்பிபூப்ரஜா
பலதோதிர்த்வீஸசுராஸசுரா ஹபிமானுஷம்துஷ்ட
சிக்ஷந்துஸஹஸ்த்ராணு த்ரிவிதவிஸ்வப்ராம்ஹண:

என்கிற சுலோகப்படிக்கு தங்களுடைய அவுபாசந ஓமகுண்டத்திற்குத் தங்கம், வெள்ளி, தாம்பிரம், இரும்பு முதலான பஞ்சலோகங்களையும் ரத்தினம் முதலான நவமணிகளையும் ஆஹூதிகொடுத்து அதினலேசிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபவம், அநுக்கிரக முதலானதற்கும் அஸ்திர ஆயுதங்களை உண்டாக்கவும் எசன ஆசன அத்தி யென அத்தியர் பதானதான பிரீதிசஷ்டி கர்மமும் சர்வதாபிமானமும் அரசுநிலை ஆக்கினைச்சுரமும் இஷ்ட காமியார்த்தமும் ஜநநமரண நரகாதியும் ஆதாரமாயிருப்பதுமன்றி சர்வாதார கடவுளாக்கினைக்குச் சமஆதாரமா யிருக்கிறதுமன்றியில்.

மேலும் சில்பமூலஸ்தம்ப சுலோகம்.

திதிரூபமனுப்ரோக்தம் வாரஸ்யமயசம்பவ:
நக்ஷத்ரம் த்வஷ்டரூபஞ்ச சில்பியோகந்ததைவசா
விஸ்வஜ்ஞகரணஞ்சைவ பஞ்சாங்கோமதிதேவதா:

என்கிற சுலோகப்படிக்கு திதி - மனுப்ரம்மா உற்பவம், வாரம் - மயப்ரம்மா உற்பவம், நக்ஷத்திரம் - துவஷ்டப்ரம்மா உற்பவம், யோகம்-சில்பிப்ரம்மா உற்பவம், கரணம்-விஸ்வக்ஞயப்ரம்மா உற்பவம் ஆகயிருப்பதால் தாங்களே பஞ்சாங்கஞ் சொல்லிக்கொண்டு உபாத்தியாயஞ் செய்யலாமென்றும்,

மேலும் வேதம்.

விஸ்வப்ரம்மமனசா விஸ்வங் கரோதி-ததாதிப்ராம்மஞேசுவர்னசருஷி:
ஜஞதிபிராம்மஞே கஸ்யபோபரப்ரம்ம நவப்பிரம்மணே மரீசி
அத்ரி-ஆங்கிரச-புலஸ்த்ய-புத்ஹல-பௌலஸ்ய-கச்யப-தக்ஷக-குக்ருஹூ
நவப்ரம்மணே விஸ்வப்ராமணே ப்ராம்மண:

சில்பசுலோகம்.

விஸ்வப்ரம்ஹகுலேசாதா கெர்ப்பப்ராம்ஹணநிச்சயம்
சூத்ரத்வம்நாஷிதத்பீஜம் பிரார்த்ருர்மோவிஸ்வகர்மண:

என்கிற சுலோகப்படிக்கு விஸ்வகர்மாவில் வம்மிசத்தர்களாகிய தங்களுக்கு கெர்ப்பத்திலிருக்கும்போதே பிராமணத்வம் நிச்சயமாயிருப்பதாகவும்,

பிரதிவாதிகள் சுலோகம்.

அந்த்யஜாதித்வஜாதிச்ச யேகயேவசஹோதர:
ஏகயோனிப்ரசூதத்வா ஏகசாகேனஜாயதே.

என்கிற சுலோகப்பிரகாரம் பறையர் சக்கிலி முதலான நீச்சஜாதியாரும் பிரதிவாதிகளும் ஒரே யோனியில் ஜன்மித்த கோத்திரத்தாரென்பதற்கு திருஷ்டாந்திரம்,

சுலோகம்.

ருஷியஸ்ருங்கோம்ருகோஜாத: கௌசிகோகாதிநந்தன:
ஜம்புகோஜம்புகோத்பத்தி கௌதமோகௌதசம்பவ:
வால்மீகோசபரோத்பத்தி அகஸ்த்யாகும்பசம்பவ:
வ்யாசோலுப்தசம்பூதோ வசிஷ்டாஊர்வசிசுத:
நாரதோரசகிபுத்ரோ கௌண்டங்யோமுண்டகீசுத:
மதங்கஸ்யமதங்கஸ்யாத் மாண்டவ்யோமண்டுகீசுத:
சாங்க்யாஸ்வப்ஸஸம்பூதோ கார்க்கேயோகார்த்தபஸ்சுதா:
சுநகிகர்ப்பசம்பூதோ சௌநகாதிமஹாருஷி:

என்னும் மனுஸ்மிருதிப்படிக்கு கலைக்கோட்டார்-மான்வயிற்றிலும், கௌசிகர்-காதிமகாராஜாவுக்கும், ஜம்புகர்-நரியின் வயிற்றிலும், கௌதமர்-பசுவின் வயிற்றிலும், வால்மீகர்-வேடச்சிக்கும், அகஸ்தியர் - கும்பத்திலும், வியாசர் - செம்படச்சி வயிற்றிலும், வசிஷ்டர்-தாசிவயிற்றிலும், நாரதர் - வண்ணாத்தி வயிற்றிலும், கௌண்டன்யர் - முண்டச்சிவயிற்றிலும், மதங்கர், சக்கிலிச்சி வயிற்றிலும், மாண்டவ்யர் - தவக்களை வயிற்றிலும் சாங்க்யர் - பறைச்சிவயிற்றிலும், கார்க்கேயர் - கழுதைவயிற்றிலும், சௌநகர் - நாயின்வயிற்றிலும் இவ்வித உற்பவமன்றியில் பின்னும்.

வேமநபத்தியம்.

மாலகுலமுநபுட்டி மாலனிதூஷிஞ்சு த்விஜாலகேலனிட்டி தொங்கதனமு
ஆதிபுட்டினதாவு அரசிதாசூடரா விஸ்வதாபிராம விநரவேமா.

என்கிற வேமநபத்தியப் பிரகாரம் பறையர் குலத்தில் பிறந்து பறையரைத் தூஷித்து வருகிறது மன்றியில், ஆதியில் பிறந்தவரை அறியாரோ? இருபிறப்பர் சேத்தினிற் பிறந்த செங்கழுநீர்போல் கூத்திவயிற்றில் பிறந்தார் வசிஷ்டர், வசிஷ்டருக்குச் சண்டாளி வயிற்றிற் பிறந்தார் க்ஷத்திரியர், புங்கனூர் புலைச்சி வயிற்றிற் பிறந்தார் பராசர், பராசருக்கு மீன்வாணிச்சி வயிற்றிற் பிறந்தார் வேதவியாசரென்றும்,

சுலோகம்.

தேவோமுக்த்விஜோராஜோ வைஸ்யசூத்ரோபிடாலக:
பசும்லேஸ்சச்சசண்டாளோ தசவிப்ரப்ரகீர்த்திதா:.

என்கிற சுலோகப்படிக்கு நீச்சஜாதி முதலான சங்கரஜாதியிலுர்ப்பவித்த ரிஷிகளின் வம்மிசத்தார்களென்றும், பிரதிவாதிகளுடைய கோத்திரமென்றும், பிறவனையென்றுஞ் சொல்லப்பட்ட உற்பவதானத்தையும் கோர்ட்டாரவர்கள் பரிசோதித்தால் பிரதிவாதிகள் மேற்கண்ட ரிஷிகளின் வம்மிசஸ்தாளென்றும் தெரியத் திருஷ்டாந்திரப்படுமென்றுங் கண்டிருக்கிறார்கள்.

பிரதிவாதிகள் றிஜாயிண்டரில் மேற்படி ரிஷிகளின் உற்பத்தியானது வாதிகள் ரிப்பிளையில் கண்டபடிக்கு யிருந்தபோதைக்கும் ப்ரம்மபீஜத்தானென்றும் வாதிகளைக்குறித்து வேதவாக்கியமுண்டா யிருப்பது யதார்த்தமா யிருந்தால் பாரதமுதலான புராணங்களில் விஸ்வப்ரம்மாவைக் குறித்து மிகவுந் தாழ்மையாகக் கண்டிருக்க இடமிராதென்றும் தாங்கள் சிரேஷ்டாளென்றும் வெகுகாலமாய் ராஜராஜாக்கள் ஒப்புக்கொண்டு சர்வமானியங்கள் முதலானதும் விட்டு இருப்பதாகவும் கண்டிருக்கிறார்கள்.

கோர்ட்டாரவர்கள் தீர்மானம்.

1. இந்த நெம்பர் சட்டு முதலான வேதச்சுருதிப் பிரமாண்ங்களெல்லாம் கோர்ட்டாரவர்கள் நன்றாய்ப் பரிசோதித்து ஆலோசனை செய்யுமளவில் சுருதிப் பிரமாணமாயும் சாஸ்திரோக்தமாயும் வாதிகளாகிய தாங்களே விஸ்வப்ராமணுளென்றும், பிரதிவாதிகள் சங்கரசாதி யென்றும் ஆக்ஷேபித்துவேண்டியு சமாதானஞ் சொல்லுகிறார்கள்.

2. பிரதிவாதிகள் தாங்கள் பிராமணுளா யிருப்பது ஆன்ஸரில் கண்டபடிக்கு வாதிகளைப் பஞ்சமஜாதியென்று சொல்வது யதார்த்தமா யிருந்தால் யாதொரு வசனமூலமாவது சமாதானஞ் சொல்லாமலும் அல்லது அவர்கள் சொல்லப்பட்ட சாஸ்திரம் நூதன மென்றாவது வேறேவிதமான தாத்பரிய

மிருக்கிறதென்றுவது ஆக்ஷேபிக்காமற் போனபடியால் யாதொரு புறட்டுமிருக்கமாட்டாது.

3. புராணங்கள் மூலமாய்ப் பிரதிவாதிகளின் முன்னோர்களாகிய ரிஷிகளின் ஜநநங்களைப் பரிசோதித்தால் வாதிகள் ரிப்பிளையிற் சொல்லிய வச்சிரசூசி முதலான சுருதி வாக்கியத்திலும் பிரமஞானியான வேமநசதகத்திற்கும் இணங்கியிருப்பதாக அபிப்பிராயப்படுவது மன்றியில் மேற்படி பிரதிவாதிகளின் ரிஷிகளை மேற்படி வாதிகள் ரிப்பிளையிற் சொல்லிய பதினைந்து ரிஷிகளும் தங்கள் ரிஷிகளல்ல வென்றுவது மறுதலிக்காமல் ப்ரம்ம பீஜந்துக்கு உற்பவமான ரிஷிகளென்று சொல்வதைக் கேட்டால் ப்ரம்மாவானவர் நீதியைத்தப்பி ஒருபோதும் நீச்ச ஜாதிகளிடத்திலும் ஜெந்துக்களிடத்திலும் சம்பந்தஞ்செய்திருக்க மாட்டார், அப்படி யிருப்பது யதார்த்தமா யிருந்தால் ரிஷிமூலங்கள் சொல்லக்கூடாதென்று புராணங்களில் கட்டுப்பாடு செய்திருக்கும்படியாக நிமித்தியமிராது.

4. பாப்பாரின் கோத்திரங்களிலும் பிறவனையென்று சொல்லப்பட்ட உற்பத்தியும் சாஸ்திரபூர்வீகமாய்த் தெரியப்படுத்தும்படிக்கு ஷை ஜில்லா சதுரமீன் பண்டிதருக்கு சகஸ்திரநாமா எழுதி தெரிவித்ததிலும் மேற்கண்ட பதினைந்து ரிஷிகளுடைய உற்பத்தி ஸ்தானமா யிருக்கின்றது, மேலும் அவர்கள் உலகத்தில் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரஜாதி முதலான சகல வர்ணாசிரமங்களும் ஏற்பாடான வெகுகாலத்திற்குப் பின்பு ஜநித்த முநிகளாயிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட ரிஷிகளின் வம்மிசத்தாராகிய பிரதிவாதிகள் சிருஷ்டி ஆதியிலே ஜநித்த ப்ரம்ம வம்மிசத்தா ரென்பதற்கு யாதொரு ஞாயமுங் காணப்படவில்லை.

5. பிரதிவாதிகள் சகல வர்ணாசிரமத்தாருக்கும் உயர்ந்த பிராமணளா யிருப்பார்களேயாகில் ப்ரம்ம சிருஷ்டிக்குக் கொஞ்சம் சம்மதியாகிய சகலத்துக்கும் ஆதாரமான கர்மம் அவசியமாக இருக்கவேணும், அப்படிக்கொன்று மில்லாமல் ஜோகி ஜங்கமனைப்போலவே யாசித்து ஜீவனஞ்செய்யும்படிப் பரிச்சேதம் விதியிருக்கமாட்டாது.

6. வாதிகள் தஸ்தாவேசுகளாக தாக்கல் செய்திருக்கிற வேதசாஸ்திரங்களைப் பரிசோதனை செய்ததில் உபயவாதிகள் பாராயணஞ் செய்துக்கொண்டு வரப்பட்டவர்களாக விருந்த போதைக்கும் அந்த வேதங்களில் ஒரு வரியாவது ஒரு அக்ஷரமாவது பிரதிவாதிகளுக்கும் அவர்கள் முன்னோர்களாகிய முநிகளுக்கும் மற்றவர்களுக்கும் பாத்தியமுண்டாயிருப்பதாகக் காணப்படவில்லை. முன்னோர்களாகிய ரிஷி முநிகள் லோகப்பிரசித்தமாய் நீச்ச ஜாதியில் பிறந்தவர்களாக் விருக்கையில் அவர்களுடைய வம்மிசஸ்தாளாகிய பிரதிவாதிகளை சர்வ சிரேஷ்டாளென்று ஒப்புக்கொள்வது சாஸ்திரவிசாரணை யில்லாமையாயும் அறிவில்லாமையாயும் இருக்கிறது. ஆனால் முன்னாலே சிலதேசங்களுக்குப் பாளையக்காரர்களாயிருந்த அவிவேக துரைத்தனத்தாரையும், சிலமூட ஜனங்களையும் எவ்விதமோ சூதடியினாலே மோசஞ்செய்து நாளதுவரைக்கும் குரு ஆண்மை செலுத்திக்கொண்டு வருகிறார்கள், அப்படிப்பட்ட மோசடிகளைக் கண்டுபிடித்து வர்ணாசிரம தர்மங்களையறிந்து பரிபாலனஞ் செய்வது கனம்பொருந்திய கவரன்மெண்டு துரைத்தனத்தைச்சார்ந்த நீதியாயிருக்கின்றது.

7. வாதிகள் பிரியாதிலும் ரிப்பிளையிலுஞ் சொல்லியிருக்கிற வேதானுசாரமாய்ப் பஞ்சமுகப்ரம்மாவின் சிருஷ்டி பரம்பரையினுடைய வம்மிசத்தார்களாகவும், உலகசம்ரக்ஷணைக்கார்க ஈஸ்வரனுடைய ஆக்கினையென்கிற சுருதிவாக்கியப்படிக்கு சமஸ்தத்துக்கும் ஆதாரமான பிரம கர்மமென்கிற பஞ்சவிதகர்மங்களை வாதிகள் செய்துக்கொண்டு வருவதினாலே உலகசம்ரக்ஷணையாகி வருகிறதாக எசுர்வேத முதலானதும் முறையிட்டுக்கொண்டு வருவதினால் ஈஸ்வரரூபமாகிய ஆகாஸபூதமானது சகலத்திலும் வியாபித்திருக்கிறாப்போல் வாதிகள் செய்யப்பட்ட பஞ்சகிர்த்தியங்கள் ஜகமுழுதுக்கும் பிபீலிகாதிஜந்துக்களுக்கும் ஆதாரமாய்ச் சர்வத்திரவியாபியாய் வியாபித்துக்கொண்டிருப்பதால் வேதசம்மதியாய்ப் பிரத்தியக்ஷமான பிராமணாளென்று நம்புதற்குப் போதுமான திருப்திகரமுண்டாயிருக்கிறது.

8. பாரதமுதலான கற்பனை புராணங்களில் விஸ்வப்ரம் மாவைக் கொஞ்சம் நிக்ருஷ்டமா யெழுதியிருப்பதை ஆலோசித்தால் வாதிகளுக்கு ஏற்பாடாயிருக்கிற வேதத்தைப் பார்த்து பிரதிவாதிகள் மனஞ்சகிக்க மாட்டாமல் தூஷித்துப் புராணக் கட்டுக்கதைகள் செய்திருக்கிறார்கள். அப்படி யிருந்தபோதைக்கும் சகல சாஸ்திரங்களுக்கும் சாக்ஷியா யிருக்கிற ஆதிவேதங்கள் சிரேஷ்டமா யிருக்கிறதினால் புராணங்களின் கட்டுக்கதைகள் உபயோகப்படமாட்டாது.

9. பிரியாதில் கண்டபடிக்கு வாதிகளைப் பிரதிவாதிகள் கும்பல்கூடி யடித்து கலியாணமுகூர்த்தங்களை நடவாமல் தடங்கல் செய்து குந்தகப்படுத்தினதாகவும், வாதிகள் சாக்ஷி நாகோசிராவ், சுப்பராயமுதலி, வெங்கட்ராமநாய்க்கன் முதலான பதினைந்து பேர்களாலும் மாஜிஸ்ட்ரேட் டைரியினாலும் ருசுவாயிருக்கிறதினால் கலியாண சாமக்கிரியை நஷ்டம் ரூபா-550-ம் இதற்கடியில் காண்கிற கோர்ட்டுச்செலவுகளும் வாதிகளுக்குப் பிரதிவாதிகள் கொடுக்கும்படியாயும், வாதிகள் தங்களுக்குண்டாயிருக்கிற பாத்தியப்படிக்கு வேதபாராயண முதலியதுஞ் செய்துகொண்டு சகல கிரியைகளையும் தாராளமாய் நடத்திக்கொண்டு வரும்படியாயும், அதில் பிரதிவாதிகள் பிரவேசிக்கக் கூடாதென்றும் தீர்மானிக்கலாச்சுது.

வாதிகளுக்கு நேரிட்ட செலவு.	ரூ.	அ.	ப.	பிரதிவாதிகளுக்கு நேரிட்ட செலவு.	ரூ.	அ.	ப.
சபாகாகிதக்கிரயம் ...	50	4	0	சபாகாகிதக்கிரயம்	15	4	0
வைக்கீல்வர்த்தனை ...	27	8	0	வைக்கீல்வர்த்தனை ...	27	8	0
சம்மன்படி	5	0	0	சம்மன்படி	6	0	0
சாக்ஷிபடி	9	0	0	சாக்ஷிபடி	5	0	0
ஆக ரூ	91	12	0	ஆக ரூ	53	12	0

இந்தப்படிக்கு 1818-ஞ் டிசம்பர்மீ 15உ
சித்தூர்ஜில்லா அதாலத்து கோர்ட்டாருடைய தீர்மானம்.
அசலுக்குச் சரியான நகல்.

சமாப்தம்.